
தர்மசக்கரம்



ருத்ரோத்காரி ஃஹு மாசி மீ சக்கரம் 33 ஆரம் 2

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

பாரத்வாஜ ஆச்ரமம்
சேரன்மஹாதேவி, திருநெல்வேலி Dt.

1923ஆம் ஆண்டு திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள் துவக்கிய இந்த ஆச்ரமம் 1970லிருந்து தபோவன நிர்வாகத்தில் இருந்து வருகிறது. 1982ஆம் ஆண்டில் வ. வே. சு. ஐயரின் நூற்றாண்டு விழாவை ஒட்டி இங்கு குருகுலம் ஒன்று எளிய முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நல்வாழ்வு, தொழில், எண்ணும் எழுத்தும் கற்றல் இம்முறையில் இக்குருகுலம் செயல்பட்டு வருகிறது. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் ஆச்ரமத்திலேயே ஓய்வு பெற்ற ஆசிரியர் மூலம் தினம் 4 மணிநேரம் தமிழும் கணக்கும் முறையே சொல்லித் தருகிறார்கள். பொது அறிவு, விஞ்ஞானம், சரித்திரம், ராமாயணம், மஹாபாரதம் ஆகியவைகளும் வாய்மொழியிலேயே போதிக்கிறார்கள். இம்மாணவர்களின் பராமரிப்புச் செலவு முழுதையும் ஆச்ரமம் ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் ஏழையான பெற்றோர்கள் ஆச்ரமத்துக்கு விபரம் எழுதி அனுமதிபெற்றுத் தங்கள் பிள்ளையை அனுப்பிவைக்கலாம். மாணவர்கள் 10 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 15 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

ஹிந்துக்கள் தங்கள் பண்பிலும் கலாச்சாரத்திலும் தங்கள் பிள்ளைகளை வளர்க்கத் தங்களுக்குத் தாங்களே கல்வி ஸ்தாபனங்களை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது. இந்த நிர்பந்தத்தில் திருநெல்வேலி ஜில்லா திசையன்விளை கிராமத்தினர் ஐக்கியமாக நல்லமுறையில் செயல்பட்டு ஒரு கிறிஸ்தவர் நடத்திவந்த ரக்ஷண்ய மூர்த்தி நடுநிலைப் பள்ளியைப் பூமி, கட்டடம், நிர்வாகம் சகிதம் விலைக்கு வாங்கி அதைப் பாரத்வாஜ ஆச்ரமத்தில் ஒப்படைத்துள்ளார்கள். ஹிந்துக்களுக்கு உதவ வேண்டிய நெருக்கடியில் இதை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. இப்போது அதிகார பூர்வமாக ஸ்ரீ ராமகிருஷ்ண நடுநிலைப்பள்ளி என்கிற பெயர் மாற்றமும் நிர்வகிப்போர் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் என்கிற மாற்றமும் செய்யப்பட்டுவிட்டன. இப்பள்ளியை அபிவிருத்தி செய்ய உள்ளூர் அன்பர்கள் சிலரைக் கொண்டு பள்ளி அபிவிருத்திக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தபோவனமும் அதன் நிர்வாகம், பாடத்திட்டம், நித்திய நடைமுறை ஆகியவைகளைத் தக்க ஆசிரியரை அனுப்பிச் சரிப்படுத்தி வருகிறது. வரும் கல்வியாண்டில் 9வது வகுப்பு துவக்கி அதை உயர்நிலைப் பள்ளியாக்கத் திட்டமிட்டுச் செயல்புரிந்து வருகின்றனர். இப்போது இப்பள்ளியில் 1வது வகுப்பு முதல் 8வது வகுப்பு வரை உள்ளன. இதில் சுமார் 500 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகிறார்கள்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 33 | ருத்ரோத்காரி ஷூ மாசி மீ | ஆரம் 2

பொருளடக்கம்

			பக்கம்
1.	பிரார்த்தனை		41
2.	அருள் விருந்து		42
3.	பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம்		43
4.	எந்நாள் கண்ணி		46
5.	சேவை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்		48
6.	ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம ஸ்தோத்ரம்		49
7.	ஞான வெட்டியான் — 2		51
8.	ஸத் ஸம்பாஷணை		53
9.	கர்மம் ஞானத்திற்கு வழி வகுக்கிறது	ஸ்ரீமதி மங்கையர்கரசி	55
10.	விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து — 2		56
11.	ஞானேசுவரர் சரிதம்		57
12.	ஸ்ரீமத் பாகவதம்	சுவாமி ஸதானந்தர்	61
13.	குட்டித் திருவாசகம்	வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.	65
14.	ஆண்மையும் ஆடம்புர வாழ்வும்	சகோதரி தங்கம்	70
15.	விவேகானந்தர் வாழ்க்கையிலே ...	சுவாமி துருவானந்தர்	73
16.	குறிப்புகள்		75
17.	செய்திகள்		80

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட்செய்த ரூபாய் நூற்றைம்பதை யும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப்பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—பேரையூரில் 19—2—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு மேலப்பரங்கிரி சுப்பிரமணிய சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்
உணவுவசதி: பகல் உணவு 0-75 பைசா செலுத்தி ஒரு பொட்டலம் பெற்றுக்கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா—தேவகோட்டையில் 19—2—84 ஞாயிறு

இடம்: ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

சென்னை—கோபாலபுரம் லாயிட்ஸ் சாலையில் 26—2—84 ஞாயிறு

இடம்: D. A. V. ஹையர் செகண்டரி பள்ளியில் (ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தயானந்த வேதிக் ஸ்கூல்)
நேரம்: காலை 10-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 26—2—84 ஞாயிறு

இடம்: அருள்மிகு அகஸ்தியர் திருக்கோவில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 26—2—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 4—3—84 ஞாயிறு

இடம்: கடலையூர் ரோட்டிலுள்ள முருகன் பப்ளிக் ஸ்கூல்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 18—3—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம் மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சேலம் ஜில்லா—மேச்சேரியில் 18—3—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சன்மார்க்க சங்கக் கட்டடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

महानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33 ‖ ருத்ரோத்காரி ௵ மாசி ௴ ‖ ஆரம் 2

பிரார்த்தனை

क्व भूतानि क्व देहा वा क्वेन्द्रियाणि क्व वा मनः ।
क्व शून्यं क्व च नैराश्यं मत्स्वरूपे निरञ्जने ॥

— अष्टावक्रसंहिता

க்வ பூதானி க்வ தேஹா வா க்வேந்த்ரியாணி க்வ வா மன:
க்வ சூன்யம் க்வ ச நைராச்யம் மத்ஸ்வரூபே நிரஞ்சனே

— *அஷ்டாவக்ரஸம்ஹிதா*

பரமாத்ம சொரூபத்தில் பூதங்கள் எங்கே? சரீரம் எங்கே? இந்திரியங்கள் எங்கே? மனது எங்கே? சூன்யம் எங்கே? கவலைக்கு இடம் எங்கே?

நிலனொடுவானும் நீரொடுதீயும் வாயுவுமாகியோர் ஐந்து
புலனொடுவென்று பொய்ம்மைகள்தீர்ந்த புண்ணியர்வெண்பொடி பூசி
நலனொடுதீங்கும் தானலதின்றி நன்கெழுசிந்தைய ராகி
மலனொடுமாசும் இல்லவர்வாழும் மல்குபெருந்துறை யாரே.

— *சம்பந்தர் தேவாரம்*

அருள் விருந்து

ஆசை கொள்ளாதவன் இழப்பதற்கு ஒன்றுமில்லை.

தியாகத்துக்கேற்ற பண்பாடு தானே வந்தமைகிறது.

சான்றோர்க்குச் செய்யும் வந்தனை வழிபாடு ஒப்புயர்வற்றது.

கோணலான மனப்பான்மையினின்று நலன் ஏதும் வாராது.

பரத்தின் தரிசனத்தைத் தொடர்ந்து மன அமைதி வருகிறது.

துயரம் மனிதனுடைய வாழ்வைத் தேய்த்துப் பண்படுத்துகிறது.

உலக இன்பங்களைத் தொடர்ந்து துன்பம் தானாக வந்தமைகிறது.

தத்துவத்தை உள்ளபடி அறிகிறவன் தற்பெருமை பூணமாட்டான்.

சகிப்புத்தன்மை பழகாதவனிடத்து நிறைநிலை இன்னும் வந்தமைய வில்லை.

செய்த குற்றத்தை உள்ளபடி ஒத்துக்கொள்ளுமிடத்து மனத்தெளிவு தானே வந்தமைகிறது.

யாண்டும் மனதை நடுநிலையில் வைத்திருப்பவர்களிடமிருந்து சமுதாயத் துக்குத் தீங்கு ஏதும் வாராது.

விட்டில் பூச்சி தீயில் விழுந்து மடிவது போன்று காமத்துக்கு அடிமையா கிறவன் சிற்றின்பத் தீயில் மாய்கிறான்.

எதிரியை அனுதாபத்தோடு அணுகுவோமானால் உலகிலுள்ள முரண்பாடு களில் பெரும்பான்மை திருத்தியமைக்கப் பெறும்.

சமுதாயத்துக்கு நலன் செய்கிறவர்கள் அறிந்தோ அறியாமலோ பரத் தோடு தொடர்பு கொண்டுள்ளவர்களாகின்றனர்.

இறைவா! என்னிடத்துள்ள குறைகளை நீ நன்கு அறிபவனாகின்றாய். குறையை மாற்றி நிறையை எனக்கு நல்குவாயாக.

கோயிலில் உயிர்ப்பலி தருவது இறைவனை இழிவுபடுத்துவதற்கு நிகர். தன் சிறுமைகளைப் பலி கொடுப்பதுதான் பாராட்டத்தக்க பலி தானமாகிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் தாம் அடைந்திருந்த பாரமார்த்திகப் பெருநிலையைப் பற்றிப் பக்தர்களோடு பேசிக்கொண்டிருந்தார். அதீதநிலையிலிருந்த அவருடைய மனது சிறிது கீழ்நிலைக்கு இறங்கி வந்த பிறகு பக்தர்களுடைய சகவாசமும் பக்தி சாதனத்தின் இனிமையும் தமக்கு வேண்டும் என்று சங்கல்பித்தார். அதாவது பரிபாகம் அடைந்துள்ள சான்றோர் ஒருவர் யாண்டும் அதீத நிலையிலிருப்பது உசிதமா அல்லது இடையிடையே வியவகார நிலைக்குக் கீழே இறங்கி வந்து நல்லாரோடு இணக்கம் கொள்ளுவது உசிதமா என்பது அவருக்கு ஏற்பட்ட ஐயம். அதைக் குறித்து அந்த நிலை சரியா அல்லவா என்னும் கேள்வியை அவர் பக்தர்களிடத்தில் கிளப்பினர். அப்போது போலநாத் என்னும் பக்தர் அவருக்குத் தந்த விடையாவது: 'மகாபாரதத்தில் தாம் அடைந்துள்ள பெருநிலையைப் பற்றிய விளக்கம் சொல்லப்படுகிறது.'

"பிரபஞ்ச அதீதத்திலுள்ள சமாதி நிலையினின்று ஆத்ம சாதகனுடைய மனது கீழ்நிலைக்கு இறங்கி வந்து பிரபஞ்சத்தில் எப்படி வியவகாரம் பண்ணுகிறது? உண்மையில், அவனுக்குப் பக்தர்களுடைய சகவாசமும் பக்தியில் மீண்டும் ஆழ்ந்திருக்கும் பாங்கும் இன்றியமையாதவைகளாம். அத்தகைய சான்ரோனுடைய மனதுக்கு அதைத் தவிர வியவகரிப்பதற்கு வேறு ஏதும் இல்லை."

இப்போது மஹிமசரண் கேள்வி ஒன்றைக் கிளப்புகின்றார்: "ஐயனே, சமாதி நிலையில் மனிதன் அடைகின்ற பாரமார்த்திகப் பேருணர்ச்சியினின்று கீழே இறங்கி வந்து உலக வியவகாரங்களில் ஈடுபடுவது சாத்தியமா?"

அடங்கிய குரலில் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "இக்கேள்வியை இப்போது கிளப்ப வேண்டாம். வேறு ஏதாவது சந்தர்ப்பம் வாய்க்கின்றபொழுது நிதானமாக நாம் இதை ஆராய்ச்சி பண்ணலாம்."

"இதே கேள்வியைக் கோர்ஸிங் என்பவரும் கேட்டார். ஜீவாத்மனுக்கும் பரமாத்மாவாகிய ஈசுவரனுக்குமிடையில் மிகவும் வேற்றுமை உள்ளது. சாதனங்கள் புரிவதன் வாயிலாக ஜீவாத்மன் ஒருவன் பரத்தை அடையப்பெறலாம். அப்படி அடைந்தவன் திரும்பி வருவதில்லை. சாதாரண வழக்கில் பகருமிடத்து, சிதம்பரம் போனவன் திரும்பி வருவதில்லை என்பதாம். ஆனல் அதிகாரி புருஷன் ஒருவனுடைய பாங்கு இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அன்னவர் சமாதி நிலையைச் சென்று அடைந்துவிட்டு மீண்டும் உலக வியவகாரங்களுக்குத் திரும்பி வரமுடியும். சாதாரண ஜீவன் ஒருவனை அரசனுக்குரிய ஒரு சிப்பந்தியாகப் பொருள்படுத்தலாம். அரண்மனையின் முன்மண்டபத்துக்குள் மட்டும் அந்தச் சிப்பந்தி செல்ல முடியும். ஆனல் அரசனுடைய மகன் ஒருவனே அந்த அரண்மனையிலிருக்கும் ஏழு மாளிகைகளுள் எதற்குள் வேண்டுமானலும் செல்லலாம். அரண்மனையை விட்டு வெளியே போவதும் ராஜகுமாரனுக்குச் சாத்தியமாகிறது. சாதாரண ஜீவன் ஒருவன் சமாதி நிலைக்குச் சென்ருல் திரும்பி வருவதில்லை. அதிகாரி புருஷர்களாகிய சங்கராச்சாரியர், ராமானுஜாச்சாரியர் ஆகியோரின் பாங்கு முற்றிலும் வேருனது. அவர்கள் வித்யா அகங்காரத்தை உலக நன்மைக்காகவென்று கெட்டியாகப் பிடித்து வைத்திருந்தனர்."

மஹிமசரண் தந்த விடையாவது: "ஐயனே, தாங்கள் பகர்வது முற்றிலும் மெய். அப்படி இல்லாவிடில் அந்த ஆச்சாரிய புருஷர்கள் பாஷ்யங்களை எழுதிப் பூர்த்தி பண்ணியிருக்க இயலாது."

பரமஹம்சதேவர்: "இத்தகைய அதிகாரி புருஷர்கள் மட்டுமல்லர்; பரம பக்தர்கள் சிலர் இவ்வுலகின்கண் தோன்றி வந்துள்ளார்கள். பிரஹலாதன், நாரதர், ஹனுமான் ஆகியவர்களை இதற்குச் சான்ருக எடுத்துக்கொள்ளலாம். சமாதி நிலையினையும் அன்னவர்கள் அடையப்பெற்றிருந்தனர். ஆழ்ந்த பக்தியிலும் தங்கள் மனதைச் செலுத்தி வந்தார்கள்."

மஹிமசரண்: "தாங்கள் பகர்ந்தருள்வது

முற்றிலும் மெய்."

பரமஹம்சதேவர்: "சிலர் சாஸ்திர ரீதியாக வேதாந்த விசாரம் பண்ணுகின்றனர். அதன் வாயிலாகத் தாங்கள் பரதத்துவத்தை அறிந்து கொண்டதாக எண்ணி அகங்கரிக்கின்றனர். வேதாந்தத்தின் கொள்கைகள் சிலவற்றை அவர்கள் அறிந்துள்ளார்கள் என்பது உண்மையே. ஆனால் அனுபூதியின் வாயிலாகப் பரஞானம் உதயமான பிறகு அவர்களிடம் அகங்காரத்தின் அறிகுறி ஏதும் இல்லை. வெறும் வாசா ஞானத்துக்கும் வேதாந்த அனுஷ்டானத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இதுவேயாம். சாதனங்களில் ஈடுபடாது வெறும் ஏட்டுக் கல்வியில் மட்டும் கருத்தைச் செலுத்துபவனுக்கு அகங்காரம் அதிகரிக்கிறது. மற்று, முறையாக ஆத்ம சாதனம் பயின்று வருபவனுக்கு ஏட்டுக்கல்வியை முன் விட்டு அகங்காரம் தோன்றுவதில்லை. படிப்படியாக அகங்காரம் அகன்று போவதே ஆத்ம சாதனத்தின் விளைவாம். சமாதிநிலையில் ஆத்ம சாதகன் பரத்தோடு ஒன்றுபடுகிறான். பிறகு அன்னவனுக்கும் அகங்காரத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லவே இல்லை. வெறும் ஏட்டுப்படிப்பால் பரஞானம் வாய்க்காது. ஏட்டுக்கல்வி அந்தக்கரணத்தின் துணைகொண்டு அறியப்படுகிறது. ஆனால் பரம்பொருளோ மனாதீதத்தில் இருக்கிறது. மனதைத் துடைத்து வைப்பதே சமாதி நிலையாம். அத்தகைய சமாதிநிலை அடைந்தவனுக்கே பரஞானம் வாய்க்கிறது. கடலில் விழுந்த மழைத்துளி, துளி என்னும் வியக்தியை இழந்துவிட்டுக் கடலில் ஒன்றுபடுகின்றது. அதே பாங்கில் சமாதி நிலை அடைகின்ற ஆத்ம சாதகன் தன் ஜீவ வியக்தியை இழந்துவிட்டுப் பரத்தில் ஒன்றுபடுகிறான்."

ஓர் உபமானத்தின் மூலம் இந்நிலையை விளக்கலாம். நண்பகலில் வெளியே நின்றுகொண்டிருக்கும் மனிதன் ஒருவனின் தலைக்கு நேர் மேலே சூரியன் வருகிறான். அப்போது அவனுடைய நிழல் எங்கும் படிவதில்லை. அதுபோன்று சமாதி நிலையில் ஆழ்ந்திருப்பவனுக்கு அகங்காரம் அறவே அழிந்துபட்டுப் போகிறது. அத்தகைய பாரமார்த்திகப் பெருநிலையை அடையப் பெற்றுள்ள சாதகனிடம் 'நான்' என்னும் அகங்காரம் தென்படுமாயின் அந்த அகங்காரத்தை வித்யா அகங்காரம் என்றோ, பக்தனுடைய அகங்காரம் என்றோ, தொண்டனுடைய அகங்காரம் என்றோ நாம் பொருள்படுத்த வேண்டும். அஞ்ஞானத்திலிருக்கின்றவனின் அகங்காரத்திற்கும் இத்தகைய பெருநிலையை அடையப்பெற்றவன் அகங்கரிப்பது போன்று தென்படுவதற்குமிடையில் வித்தியாசம் மிக உண்டு. ஞானியின் அகங்காரம் வித்யா அகங்காரம் எனப்படுகின்றது. மற்றவனுடைய அகங்காரம் அவித்யையின் விளைவாம்."

"ஞானமும் பக்தியும் இறைவனை அடைவதற்கான இணைபிரியாத இரண்டு மார்க்கங்களாகின்றன. இவ்விரண்டனுள் ஆத்ம சாதகன் எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும் அவன் இறைவனை அடைவது திண்ணம். இறைவனைப் பொருள்படுத்துதலிலும் அவனோடு இணக்கம் கொள்ளுதலிலும் இந்த இரண்டு மார்க்கங்கள் தனித்தனி முறைகளைக் கையாளுகின்றன. ஞானியின் கொள்கைப்படி இறைவன் அறிவு ஜோதி மயமானவன். பக்தனுடைய கொள்கைப்படி அதே பரம்பொருள் அருள் ஜோதி மயமானவர்."

"ஞானியினுடைய கோட்பாட்டின்படி இறைவனுக்கும் ஆத்ம சாதகனுக்கும் இடையில் உண்டாகிற இணக்கம் பேரறிவு மயமானது. பக்தனுடைய கோட்பாட்டின்படி அந்த இணக்கம் பேரின்பமயமானதாம். அது அன்பை அடிப்படையாகக் கொண்டது. அன்பு வேறு, அறிவு வேறு என்று நாம் கருதலாகாது. பக்தன் ஒருவன் அன்பு சொரூபமாக இருக்கின்றான். அந்த அன்பின் விளைவாகப் பொருளை உள்ளபடி அறிந்துகொள்ளுதல் என்னும் அறிவுத்திறன் தானாக அவனுக்கு வந்தமைகிறது. மற்றொருவன் தூய அறிவு படைத்தவனாக இலங்குகிறான். அதன் விளைவாக அனைத்தும் தெய்வீகம் வாய்க்கப்பெற்றவைகள் என்னும் பேருண்மையை உள்ளபடி அவன் அறிய வருகிறான். இந்த அறிவானது அனைத்திடத்தும் அன்பைச் செலுத்தும்படி அவனைத் தூண்டுகிறது. இங்ஙனம் பக்தியும் ஞானமும் ஒன்றே என்னும் உண்மை நிரூபிக்கப்படுகிறது."

பவநாத் என்கின்ற பக்தன் பரமஹம்சருக்கு

அருகில் அமர்ந்துகொண்டு அவர் திருவாய் மலர்ந்தருளிய இந்த அரிய கோட்பாடுகளுக்குச் செவி மடுத்துக்கொண்டிருந்தான்.

பரமஹம்ச தேவரிடம் பவநாதன் விண்ணப்பித்துக் கொண்டதாவது :

"ஐயனே, எனக்கு ஏற்பட்டுள்ள ஐயம் ஒன்றைத் தங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்க விரும்புகிறேன். சண்டி என்று பகரப்பெறுகிற தேவி மாகாத்மியத்தின் உட்பொருளை அறிந்துகொள்ள எனக்கு இயலுவதில்லை. அன்னை பராசக்தி உயிர்கள் அனைத்தையும் துடைத்துத்தள்ளுகிறாள் எனப் பகரப்பட்டிருக்கிறது. அதன் உட்பொருள் யாதோ?"

பரமஹம்சதேவர் பகர்ந்த விடையாவது: "இவையாவும் அன்னை பராசக்தியின் திருவிளையாடலாம். முன்பொரு காலத்தில் இதே ஐயம் என் உள்ளத்தில் உருவெடுக்கலாயிற்று. நாளடைவில் இதன் உட்பொருள் தெற்றென எனக்கு விளங்கிற்று. நான் புரிந்து வந்த சாதனங்களே உண்மையை உள்ளபடி அறிந்துகொள்ளும் திறமையை எனக்கு உண்டு பண்ணின. இங்ஙனம், தோற்றத்துக்குக் கொண்டு வருவதும் பிறகு துடைத்துத் தள்ளுவதும் சிறிய அளவில் நிறைவேறலாம் அல்லது மானுட அறிவுக்கெட்டாத முறையில் திடீரென்று பெருவாரியாக நிகழலாம். சிருஷ்டி சம்ஹாரம் ஆகிய இரண்டு செயல்களும் அன்னை பராசக்தியின் மாயா விகாரங்களாம். உயிர்வகைகளைத் தோற்றத்துக்குக் கொண்டு வருவது அவளுடைய விளையாட்டு. பின்பு, அவைகளைத் துடைத்துத் தள்ளுவதும் அவளுடைய விளையாட்டேயாம். சிறுகுழந்தைகள் மணலில் வீடு கட்டி மணலில் சோறு சமைத்து மற்றவர்களுக்குப் படைப்பதாக விளையாடுகிறார்கள். அவர்கள் விளையாட்டாகச் செய்வதை உலகத்தவர் செய்கின்ற செயலுக்கு நிகராக அச்சிறுவர்கள் வைத்துக் கொள்கிறார்கள். பிறகு, தாங்கள்கட்டிய வீட்டை அவர்களே துடைத்துத் தள்ளுகிறார்கள். அச்செயலில் நலனும் இல்லை; கேடும் இல்லை. அதே விதத்தில் அன்னை பராசக்தியானவள் உலகை உண்டுபண்ணுவதும் பிறகு அதைத் துடைத்துத் தள்ளுதலும் ஆகிய இரண்டு செயல்களை வெறும் விளையாட்டாகச் செய்து வருகிறாள். அதில் அவளுக்கு இலாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை." உலகத்தவர்களோ பிரபஞ்ச வாழ்வை விளையாட்டாகக் கருதுவதில்லை; உண்மையென்றே எண்ணுகின்றனர். ஆதலால் சிருஷ்டியை அன்னை பராசக்தி பெருவாரியாகத் துடைத்துத் தள்ளுகின்ற பொழுது அது பெரிய நஷ்டமாக உலகத்தவர்களுக்குத் தோன்றுகிறது. கருணைமூர்த்தியாகிய அன்னை பராசக்தி ஏன் இக்கொடிய செயலைச் செய்யவேண்டும் என்னும் கேள்வியைக் கிளப்பி அவர்கள் மயங்குகின்றனர். ஆனல் உண்மை இதுவாம். சிறுவர்கள் கட்டிய மணல் வீட்டுக்கு நிகரானது அண்டங்களை அன்னை பராசக்தி அமைப்பதும் பிறகு அவற்றைத் துடைத்துத்தள்ளுவதுமாம். இவ்வுண்மையை உள்ளபடி அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

இப்பொழுது கிரீஷ் சந்திரகோஷ் பரமஹம்ச தேவரையும் அவரைச் சூழ்ந்திருந்த பக்தர்களையும் தம் இல்லத்தின் மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றார். ஆங்கு அவர்கள் எல்லாருக்கும் அமுது படைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வானத்திலே வெண்ணிலா இனிமை சொட்டுகிற பாங்கில் மிளிர்ந்து கொண்டிருந்தது. பக்தர்கள் ஆங்காங்கு அமர்ந்தனர். அவர்கள் எல்லாருடைய காட்சிக்கும் தென்படும்படியான இடத்தில் பரமஹம்சதேவர் அமர்ந்திருந்தார். ஆங்குக் குழுமியிருந்த அனைவரும் பேரின்பக் கடலில் மூழ்கியிருந்தனர்.

நரேந்திரநாதன் தமக்கு எதிரே அமர்ந்திருந்ததைப் பார்த்துப் பரமஹம்சதேவர் பரமானந்தத்தில் மூழ்கி இருந்தார். பரமஹம்ச தேவர் இடையிடையே நரேந்திரனைப் பார்ப்பதும் அவன் இனிது அமுது பண்ணினனா என்று விசாரிப்பதுமாக இருந்தார். பரமஹம்ச தேவர் அமுது பண்ணுவதில் இன்னும் பூர்த்தியாகவில்லை. அதற்கிடையில் அவர் எழுந்திருந்து நரேந்திரனுக்கு அருகில் வந்தார். அப்படி வந்தவர் தாம் பருகிய தர்ப்பூசனிப் பழத்தின் சர்பத்தையும் தயிரையும் கையில் ஏந்தியிருந்தார். 'இந்தப் பானத்தை நீயும் அருந்துவாயாக' என்று அவர் பகர்ந்தார். அதன் பிறகு தம் ஆசனத்துக்குச் சென்று அதன்மீது அமர்ந்துகொண்டார் பரமஹம்சதேவர்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

10-12. கானல்ஜலம்போன்ற கட்டுடலைப் பொய்நீர
வான்அமுத வாவி மருவுநாள் எந்நாளோ.

மானுடன் ஒருவன் பாலைவனப் பகுதியில் நண்பகலில் போய்க்கொண்டிருக்கிறபொழுது நீர் வேட்கைக்கு இலக்காகிறான். அப்பொழுது அவனுக்கு அந்தப் பாலைவனத்தில் சிறிது தூரத்திற்கப்பால் நீர்நிலை அல்லது தடாகம் தென்படுகிறது. இந்தக்காட்சி கானல் நீர் எனவும் பேய்த்தேர் எனவும் பகரப்படுகிறது. இது வெறும் தோற்றம் என்று அறிந்து கொண்ட பிறகும் இந்தக் காட்சி மாறுவதில்லை. ஆயினும் அது வெறும் தோற்றம் என்று அறிந்துகொண்டவன் அதைக் குறித்து மயங்குவதில்லை. ஆங்குச் சென்றால் தாக சாந்தி பெறலாம் என்னும் எண்ணம் அவன் உள்ளத்தில் உதிப்பதில்லை. இன்றைக்கு மனிதன் அத்தகைய கானல் நீரைக் காண்பதற்குப் பாலைவனத்தை நாடிப்போகவேண்டிய அவசியமில்லை. தார்ரோடு அமையப்பெற்றுள்ள பாதையில் மனிதன் போகும்பொழுது சிறிது தூரத்துக்கப்பால் அப்பாதையில் நீரின்தோற்றம் தென்படுகிறது. அத்தோற்றத்தில் இருமருங்கிலும் உள்ள வீடுகள், தீபக் கம்பங்கள் ஆகியவைகளின் பிரதிபிம்பங்களும் தென்படுகின்றன. வெயில்அடிக்கின்றபொழுது காற்றில் உண்டாகும் சலனத்தின் விளைவு இத்தகைய காட்சி என்பதைஅறிந்துகொண்டவன் பிறகு அதைக் குறித்து மயக்கமுற மாட்டான்.

இத்தகைய கானல் நீருக்கு ஒப்பானது இந்த மாயப் பிரபஞ்சம் என்பது ஞானிகளின் துணிவு. பொய்யான இக்காட்சியை மெய்யானது என்று உலகத்தவர் மயங்குகின்றனர். பல பிறவிகளில் தொடர்ந்து அதில் கட்டுண்டும் கிடக்கின்றனர். ஆத்ம சாதனத்தின் விளைவாகவும், ஈசனுடைய திருவருளை முன்னிட்டும் இக்காட்சி பொய்யானதென்று பரஞானம் உதயமாகும்பொழுது புலனாகின்றது. மயக்கத்தில் ஆழ்ந்த மக்களுக்கு உற்றார் உறவினர், வீடுவாசல், சொத்து சுகம் ஆகியவைகள் உண்மையானவைகள் என்னும் மயக்கம் பல பிறவிகளில் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது. அப்படி அவர்களுக்கு நிகழ்கின்ற ஜனன மரணமும் உண்மையானவைகள் என்றே மாந்தர் எண்ணி வருகின்றனர். ஆனால் பரஞானம் வாய்க்கின்றபொழுது இந்தப் பொய்க்காட்சி பறந்தோடி மறைகிறது. அப்படி ஞானத்தெளிவு அடைந்திருப்பவனுக்குத் தான் உடல் அல்லன் என்றும் ஆத்ம சொரூபமே தன்னுடைய நிஜநிலை என்றும் தெளிவு உண்டாகிறது. தென்பட்ட உலகை மெய் என்று நம்பியிருந்தவன் அதில் இன்பத்தை நாடியிருந்தது வீண் என்பதை அறிய வருகிறான். தான் நாடுகிற இன்பம் உண்மையில் தன்னிடத்தே இருக்கிறது. மாயப் பிரபஞ்சத்தில் பல பிறவிகளில் அவன் அதை நாடி அலைந்து திரிந்தது மயக்கத்தின் விளைவாம். உண்மையில் தானே ஆனந்த சொரூபம். புறவுலகில் தான் தேடிய பேரானந்தத் தடாகம் தானே என்பதும் அவனுக்குத் தெற்றென விளங்குகிறது. இந்த நிலையை அடைதற்கே மக்கள் அனைவரும் முயன்று வருகின்றனர். ஆயினும், சரியான விவேகமும் வைராக்கியமும் அடையப்பெற்றவர்க்கே இப்பரமானந்தப் பரமநிலை வந்து வாய்க்கிறது. இதை நாடி நிற்கும் எனக்கு இந்தநிலை அதிவிரைவில் வந்து வாய்க்கவேண்டும் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

10-13. தீங்கரும்பென் றால்இனியா தின்றால்
[இனிப்பனபோல்
பாங்குறும்பே ரின்பம் படைக்குநாள் எந்நாளோ.

தித்திப்புப் பண்டங்களுள் பொதுவானது சர்க்கரை. ஆனால் சர்க்கரை என்று வாயால் சொல்லுவதால் மனிதன் தித்திப்பை அறிந்து கொள்ள முடியாது. அப்பண்டத்தை எடுத்து வாயில் போட்டுச் சுவைத்துப் பார்க்குமிடத்தே அதன் உட்பொருள் உள்ளபடி தனக்கு விளங்குகிறது. இந்தச் சர்க்கரைக்கு மூலவஸ்துவாயிருப்பது கரும்பு. இந்தக் கரும்பைப்பற்றி வாயால் பேசிக்கொண்டிருந்தால் போதாது. அதை எடுத்துத் தின்கின்ற பொழுதே அதனிடத்துள்ள தீஞ்சுவை தின்பவனுக்கு விளங்குகிறது. ஞானத்தின் பாகுபாடுகளைப்

பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இங்ஙனம் பகர்கின்ருர்: 'பாலைப்பற்றிப் பலர் கேள்விப் பட்டிருக்கின்றனர். கேள்விப்பட்டுள்ள எல்லாருமே பாலின் பாங்கை அறிந்துள்ளவர்கள் ஆகமாட்டார்கள். பாலைக் கண்ணால் பார்த்தவர்கள் அதைப்பற்றிக் கேள்விப்பட்டவர்களை விட எண்ணிக்கையில் சிலர். அதிலும் சிலரே அதைத் தொட்டுப் பார்த்தவர்களாவார்கள். பாலைத் தொட்டுப்பார்த்தால் மட்டும்போதாது. பிறகு அதைச் சுவைத்தும் பார்க்க வேண்டும். அப்படிச் சுவைத்துப்பார்க்கின்றவர்களுடைய எண்ணிக்கை இன்னும் சிறியதாம். அதைச் சுவைத்தவர்களுக்கே பாலின் பாங்கு முழுதும் விளங்குகிறது. அங்ஙனம் நூலாராய்ச்சியைக் கொண்டு தாங்கள் உடல் அல்லர் என்றும் ஆத்மசொரூபம் என்றும் பலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். அப்படிப் பேசிக்கொண்டிருப்பது போதாது. பேச்சிலும் மேலானது ஆத்ம சொரூபத்தைக் குறித்துத் தியானம் பண்ணுதல். தியானம் பண்ணுகிறவர்களுக்கு ஆத்மாவின் நிஜசொரூபம் ஏகதேசம் விளங்குகிறது. தியானத்தில் இன்னும் மேலே போகப் போக சொரூபத்தியானம் வலுக்கிறது. தியானம்பிறகு சமாதி நிலையில் பூர்த்தியாகிறது. அந்நிலையே மனிதன் அடைய வேண்டிய குறிக்கோளாம்.'

ஆத்ம சாதனத்தில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் மூன்று நிலைகள் இருக்கின்றன. சாதகன் தான் உடல் அல்லன், ஆத்ம சொரூபம் என்பதைப் பற்றி வேண்டியவாறு வாசிக்கவும், விசாரம் செய்யவும், கேட்கவும் வேண்டும். பிறகு, தீவிரமாக அவன் சாதனத்தில் ஈடுபடுதல் வேண்டும். சாதனத்தில் சுவை உண்டாகுமாகில் அவன் முன்னேற்றத்துக்கு அது நல்ல அறிகுறியாகிறது. கடைசியில் ஞானத்தெளிவு தானாகவே வந்து வாய்க்கிறது என்பது இக்கண்ணியின் உட்பொருளாகும்.

10-14. புண்ணியபா வங்கள் பொருந்தாமெய் அன்பரெல்லாம்
நண்ணியபே ரின்பசுகம்நான் அணைவது எந்நாளோ.

பாப புண்ணியத்தின் உட்பொருளை உள்ளபடி அறிந்துகொள்ளுதல் ஆத்ம சாதகனுக்கு இன்றியமையாத செயலாம். கருமம் பிரகிருதியின் கூறு. அத்தகைய கருமம் நல்லதுமன்று, கெட்டதுமன்று. அதைப் பொருள்படுத்துகிற மனிதனுடைய மனப்பான்மையையும் சூழ்நிலையையும் அனுசரித்துக் கருமம் ஒன்று நல்லது என்றோ கெட்டது என்றோ பொருள்படுத்தப் படுகிறது. பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடப்பவர்கள் புண்ணியச் செயலையே செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். பாபச் செயலினின்று அறவே விலகியிருப்பதும் அவர்களுடைய கடமையாகிறது. பிரபஞ்ச வியவகாரங்களைத் தாண்டி அதீதத்துக்குப் போவது ஆத்ம சாதகனின் நோக்கமாகும். பக்தியின் வாயிலாக அத்தகைய அதீத நிலையை அடையப் பெறலாம். ஞானத்தின் வாயிலாகவும் அதை அடையலாம். அங்ஙனம் அதீத நிலையைச் சமாதியில் அடையப் பெற்றவர்களுக்குப் பாபமும் இல்லை, புண்ணியமும் இல்லை. இந்த நிலை உலகப்பற்று வைத்திருக்கிறவர்களுக்கு எளிதில் விளங்காது. ஆதலால் ஓர் உபமானத்தின் மூலம் இதை விளக்குதல் வேண்டும். தாய் ஒருத்தி கணபதி பூஜை பண்ணுவதற்கு ஓரிடத்தில் கோலம் போடுகிருள். அதன் மத்தியில் பசுவின் சாணத்தைக் கொண்டு கணபதி என்று பகர்ந்துகொண்டு ஓர் உருவத்தை அமைக்கின்ருள். தாற்காலிகமாக அந்த இடத்தைவிட்டு அவள் வெளியே போயிருந்தபொழுது அவளுடைய சிறு குழந்தை தவழ்ந்துகொண்டு ஆங்கு வந்து கோலத்தையும் அழித்துவிட்டது; கணபதியையும் உருட்டித் தள்ளிவிட்டது. தாயின் கருத்துப் பிரகாரம் அக்குழந்தை செய்தது பொருந்தாத செயல். ஆனால் அக்குழந்தைக்கோ நலன், கேடு இரண்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமை தெரியாது. பரத்தை அடையப்பெற்றுள்ள சான்றோர்களுடைய நிலை அச்சிறு குழந்தையின் நிலைக்கு நிகரானது. அகங்காரமற்ற சிறு குழந்தை ஒரு போக்கில் சான்றோருக்கு நிகராகிறது. ஆத்ம சாதகன்தான் புரிகிற புண்ணியச் செயலின் வாயிலாக அந்தக்கரண சுத்தி அடைகிருன். அங்ஙனம் மனத்தெளிவு அடைகின்றபொழுது நலன், கேட்டிற்கு அப்பாலுள்ள அருள்நிலை அவனுக்குப் புலனாகிறது. இதை ஆத்ம சாதகர்கள் ஒவ்வொருவரும் அடையவேண்டும் என்பதுதான் இக்கண்ணியின் குறிக்கோள்.

சேவை செய்யக் கற்றுக்கொள்

(சுவாமி விவேகானந்தர்)

எல்லா உயிர்களையும் உங்களைப்போல் பாவியுங்கள் என்பது உயர்ந்த கோட்பாடு. இக்கோட்பாடு புத்தக அளவில் அடைபட்டுக் கிடக்கவேண்டியது தானா? பிறர் பசியைப் போக்கமுடியாத ஒருவனுக்கு முக்தி எப்படிக் கிட்டும்? பிறருடைய மூச்சுக்காற்றுப் பட்டாலே தங்களுடைய தூய்மை கெட்டுப்போகிறது என்று எண்ணுபவர்கள் பிறரை எப்படித் தூய்மைப்படுத்தமுடியும்? தீண்டாமை என்பது ஒரு மனநோய்.

இம்மனநோயைப் போக்கிவிட்டு எழுந்திருங்கள். உங்களுடைய ஆண்மையைக் காட்டுங்கள். தலைவன் என்ற தோரணையில் அதிகாரம் செலுத்தாதீர்கள். அஹங்காரத்தோடு மூடக் கொள்கைகளில் மூழ்கியவர்களாய் உங்களிடத்தில் இல்லாத பண்பை இருப்பதாகக் காட்ட முயலவேண்டாம். மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற மனப்பான்மையுடன் செயலில் ஈடுபடுங்கள்.

சமுதாயத்திலுள்ள எல்லா மக்களும் கல்வி பெறுவதற்கும், அறிவு பெறுவதற்கும், செல்வம் பெறுவதற்கும், சம சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். முக்தி பெறுவதுதான் மனிதனுக்குரிய பெரிய லக்ஷியமாகும். முக்திக்குத்தடையாக இருக்கும் சமுதாய விதிகள் கேட்டை விளைவிக்கின்றன. அத்தகைய சமுதாய விதிகளை விரைவில் ஒழித்துக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மனிதன் சுதந்திரம் பெறுவதற்கு உதவுகின்ற நிறுவனங்களை ஊக்குவிக்கவேண்டும்.

முதலில் ஏழைமக்களிடம் செல்லவேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு உதவியது போக மீதியை ஏற்றுக்கொள்ளத்தான் நமக்கு உரிமையுண்டு. நம்மைச் சுற்றிலுமுள்ள மக்களைத் தெய்வமாக வைத்து வழிபடுகின்ற செயலை முதலில் செய்யுங்கள். அந்த வழிபாடு விராட் புருஷனை வழிபடுவதாகும். மக்களும் மற்ற உயிர்களும் நாம் வழிபடும் தெய்வங்களாவார்கள். நம் நாட்டுமக்கள்தாம் நம் வழிபாட்டுக்குரிய முதல் தெய்வங்கள் ஆவார்கள். இந்தத் தெய்வத்தினுடைய கைகளும், கால்களும் எங்கும் பரவி இருக்கின்றன. இந்த விராட் புருஷனை வழிபடாது வேறு தெய்வத்தைத் தேடிப்போவது அவசியமா? கொஞ்ச நாளைக்கு வேறு தெய்வங்கள் தூங்கட்டும். முதலில் நாடெங்குமுள்ள உயிர்களாகிய தெய்வத்தை வழிபடுவோம். பிறகு மற்றத் தெய்வங்களை வழிபடுவோம்.

ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் ஏன் ஒவ்வொரு உயிரையுமே கடவுளாகக் காணுங்கள். கடுமையான தவத்துக்குப் பிறகு ஒவ்வொரு உயிரினிடத்தும் கடவுள் இருக்கின்ற உண்மையை நான் அறிந்துகொண்டேன். உயிர்களுக்கு அப்பால் கடவுள் எங்கு இருக்கின்றார்? ஜீவர்களுக்குச் சேவை செய்வது உண்மையிலேயே தெய்வத்துக்குச் சேவை செய்வதாகும். உங்கள் முன்னால் உங்களுக்குத் தென்பட்டுக் கொண்டிருக்கின்ற சகோதரர்களை வழிபடாது உங்கள் கண்ணுக்குத் தெரியாத கடவுளை எப்படி வழிபட முடியும்? கோயில் கட்டி அதில் தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்வது நல்லது தான். ஆனால் அதற்கும் மேலானதும் சிறந்ததுமான கோயில் மானுட உடலாகும். அக்கோவில் ஏற்கனவே தயாராக இருக்கிறது.

மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் உலக நலனுக்காகப் பயன்படுத்துங்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் (मातृदेवो भव, पितृदेवो भव) — மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ என்று நீங்கள் படித்திருக்கிறீர்கள். தாயையும் தந்தையையும் தெய்வமாக வைத்து வழிபடுங்கள் என்பது அதற்குப் பொருள். அத்துடன் ஏழைகளும் பாமரர்களும் தெய்வமாவார்கள். (दरिद्रदेवोभव, मूर्खदेवोभव) என்ற கோட்பாட்டையும் சேர்த்துக்கொள்ளும்படி கூறுகின்றேன். ஏழைகளையும், பாமர மக்களையும் தெய்வங்களாகப் பாவித்து நீங்கள் அவர்களுக்குச் சேவை செய்யுங்கள் என்று புகட்டுகிறேன். அவர்களுக்குச் செய்யும் சேவையே தலைசிறந்த சமய அனுஷ்டானமாகும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

17. अक्षर: அக்ஷர: — க்ஷரம் என்றால் அழிந்துபட்டுப்போம் பாங்குடையது என்பதாம். க்ஷேத்திரமாக இலங்குகின்ற பிரகிருதிக்குத் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகிய நிலைகள் உண்டு. அதனுள் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் பரமாத்மனுக்கு அப்படி மாறியமையும் தன்மை கிடையாது. ஆகையினால் அப்பொருள் அக்ஷரம் என்று பகரப்பெறுகிறது.

18. योग: யோக: — யோகம் என்பது ஒன்று சேர்தலாம். ஜீவாத்மனும் பரமாத்மனும் ஒன்று சேர்ந்திருக்கும் நிலை யோகமாகிறது. யோக சாதனத்தின் வாயிலாக ஜீவாத்மன் தனக்கும் பரமாத்மனுக்கும் இடையிலுள்ள இணக்கத்தை அறிந்துகொள்ள முயலுகிறான். மற்று, பரமாத்மனே யாண்டும் அவர்களுக்கிடையிலுள்ள இணக்கத்தை அறிகிறார். ஆதலால் யோகம் என்னும் சொல் அவருக்கு முற்றிலும் பொருத்தமானதே.

19. योगविदां नेता யோகவிதாம் நேதா — யோகம் என்னும் சாதனத்தை அறிந்து அதைக் கையாள முயலுகின்றவர்களுக்குத் தலைவனாகத் திகழ்பவன் திருமாலாகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கோவிந்தன் என்பதும் கோபாலன் என்பதும் பொருத்தமான பெயர்கள். 'கோ' என்னும் சொல் ஜீவாத்மனைக் குறிக்கிறது. ஜீவாத்மாக்களுடைய முக்கால நிலையை அறிந்திருப்பவன் கோவிந்தன். அவர்களை முறையாகக் காப்பாற்றி வருபவன் கோபாலன். இச்செயலை ஸ்ரீ கிருஷ்ணன் யாண்டும் செய்து வருகிறான். ஆத்ம சாதகர்கள் தங்களை யாண்டும் கிருஷ்ண பரமாத்மா காப்பாற்றி வருகிறான் என்னும் எண்ணத்தில் ஊறியிருப்பார்களாகில் சாதனத்தில் அவர்கள் அதிவேக முன்னேற்றம் அடையலாம்.

20. प्रधान पुरुषेश्वर: பிரதான புருஷேச்வர: - பிரதானத்துக்கும் புருஷனுக்கும் தலைவனாகத் திகழ்கின்றவன் திருமால். இயற்கை அல்லது பிரபஞ்சம் பிரதானம் எனப் பகரப்பெறுகிறது. அத்தகைய இயற்கையின்கண் வாழ்ந்திருந்து பரிணமத்தின் வாயிலாக முன்னேற்றம் அடைய முயலுகின்றவன் ஜீவாத்மன்; ஜீவாத்மாக்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்கள். அத்தனை பேரையும் இயற்கையின்கண் பொருத்தமான இடங்களில் அமைத்து வைத்து அவர்களைக் காப்பவனும் முன்னேற்றத்துக்கு வழிகாட்டுபவனுமாக இறைவன் இலங்குகின்றான்.

21. नारसिंहवपु: நாரஸிம்ஹவபு: — நரசிம்ம வடிவத்தில் தன்னை விளக்கியவன்.

பத்து அவதாரங்களுள் நாலாவது அவதாரமாக இலங்குபவன் நரசிம்மன். இயற்கையின்கண் அமைந்துள்ள பரிணமத் திட்டத்தை ஆராய்ந்து பார்ப்போமாகில் மனுஷத் தன்மையும் விலங்குத் தன்மையும் எந்த மூர்த்தியினிடம் ஒன்று சேர்ந்து திகழ்கின்றனவோ அந்த மூர்த்தியை நரசிம்மன் எனலாம். மக்களில் பெரும்பான்மையோர் நரசிம்மமூர்த்திகளாக இலங்குகின்றனர். 'Man's civilization is skin-deep. Scratch a little and the old savage comes out' is the statement of Swami Vivekananda. இதன் பொருளாவது: 'உடலமைப்பில் ஒரு ஜீவன் மனிதன் போன்று தென்படுகின்றான். ஆனால் ஏதாவது காரணத்தை முன்னிட்டு அவனுக்கு இடுக்கண் நேருமாகில் அவனிடத்துப் புதைந்திருக்கின்ற விலங்குத் தன்மை வெளியாகிறது. மற்று, இதைக் குறித்து ஆத்ம சாதகன் கவலைப்பட வேண்டியதில்லை. முயற்சியில் அவன் தீவிரமாக ஈடுபடுவானாகில் அவனிடத்துப் புதைந்திருக்கும் விலங்குத் தன்மையே மனுஷத் தன்மையாகத் திருந்தியமைகிறது. முயற்சியை அவன் விடாது கடைப்பிடிப்பானாகில் இறுதியில் தனக்குச் சொந்தமாயுள்ள தெய்வத் தன்மையில் அவன் நிலைபெறுகிறான்.

22 श्रीमान् ஸ்ரீமான் — திருமகளுக்குத் தலைவன் என்பது இந்த நாமத்தின் பொருள்.

லக்ஷ்மி தேவி அல்லது திருமகள் யாண்டும் மஹாவிஷ்ணுவின் மார்பின்கண் எழுந்தருளியிருக்கிறாள் என்பது கோட்பாடு. பிரகிருதி தத்துவம் புருஷ தத்துவத்தினின்று வேறுபட்டது அன்று என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது. பொருள் ஒன்று; அதன் தோற்றம் பிரம்மமாகவும் சக்தியாகவும் தென்படுகிறது. இதை ஸ்ரீ ராமகிருஷ்ண

பரமஹம்சர் நல்லதோர் உபமானத்தின் மூலமாகத் தெரிவிக்கிறார். சர்ப்பம் ஒன்று அசையாது சுருண்டு படுத்திருக்குங்காலையில் அது பரப்பிரம்மத்துக்கு ஒப்பாகிறது. அதே சர்ப்பம் வளைந்து வளைந்து நகர்ந்து போகுமானால் அச்செயல் சக்தியின் செயலுக்கு நிகராகிறது. சர்ப்பம் என்பது ஒரு பொருள். அதன் பாங்கையும் செயலையும் முன்னிட்டு அது பரப்பிரம்மம் எனவும் பராசக்தி எனவும் பகரப்பெறுகிறது.

23. केशवः கேசவ: — அழகிய கூந்தலை உடையவன் என இந்த நாமம் பொருள்படுகிறது.

கேசின் என்னும் அரக்கனைக் கொன்றதனால் கிருஷ்ணனுக்குக் கேசவன் என்னும் பெயர் வந்துள்ளது. மேலும் சச்சிதானந்தப்பொருள் என்னும் கருத்து இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

'க' என்னும் பதம் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனைக் குறிக்கிறது. 'அ' என்னும் அக்ஷரம் மஹாவிஷ்ணுவைக் குறிக்கிறது. 'ஈசா' என்னும் பதம் சிவனாரைக் குறிக்கிறது. ஆகவே கேசவனாக இலங்குகின்ற கிருஷ்ணனிடத்து மும்மூர்த்திகளுடைய மகிமைகள் அடங்கப்பெற்றிருக்கின்றன.

24. पुरुषोत्तमः புருஷோத்தம: — புருஷர்களுள் தலையாயவன் என இந்த நாமம் பொருள்படுகிறது.

பகவத் கீதையிலே பகவான் தாம் க்ஷரமாகவும், அக்ஷரமாகவும் இலங்குகின்ற பிரகிருதிக்கும் ஈசுவரனுக்கும் மேலாகிய பரப்பிரம்மமாயிருப்பதால் தாம் புருஷோத்தமன் என அழைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

25. सर्वः ஸர்வ: — அனைத்துமாய் இலங்குபவன்.

'உலகனைத்தும் ஆனாய் நீயே' எனப் பக்தர் ஒருவர் பகவானைப் போற்றுகிறார். பகவானுக்குப் புறம்பாக க்ஷரம் அக்ஷரம், சேதனம் அசேதனம் ஆகியவைகளுள் ஏதும் இல்லை. ஆதலால் ஸர்வ: என்னும் நாமம் அவருக்கு வந்துள்ளது.

26. शर्वः சர்வ: — செயற்கரிய செயலைச் செய்பவன்.

உறங்கப் போகின்றபொழுது நாம் பண்ணுகிற வியவகாரங்கள் அனைத்தும் நம்மிடத்து ஒடுங்குகின்றன. அதேபாங்கில் பிரளய காலத்தில் பிரபஞ்சம் முழுதும் பரமனிடத்து ஒடுங்குகின்றன. அப்படித் தன்னிடத்து ஒடுக்கிக்கொள்ளும் சக்தி வாய்ந்தவன் என்பது இந்த நாமத்தின் பொருள். பகலில் நாம் விழித்திருக்கின்றபொழுது நல்லதை நிலைநாட்டவும் கெட்டதை ஒதுக்கவும் செய்கின்றோம் அல்லது செய்து சாதிக்க முயல்கின்றோம். பரமனோ நல்லவைகளைச் சிருஷ்டி காலத்தில் நிலைத்திருக்க வைக்கின்றான். அதே பாங்கில் கெட்டவைகளைத் துடைக்கவும் செய்கின்றான். இக்கருத்தும் இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

27. शिवः சிவ: — தூயவன். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்கள் அவனைப் பாதிக்கமாட்டா. யாண்டும் அவன் தன்மயமாய் இருக்கின்றான். அத்தகைய மூர்த்தி உலகுக்கும் நலனையே வழங்கி வருகின்றான்.

28. स्थाणुः ஸ்தாணு: — அசையாதவன்.

பிரபஞ்சம் முழுதும், இயங்கும் பாங்குடையது. இயங்குவதால் இயற்கை என்னும் பெயர் அதற்கு வந்திருக்கிறது. இயங்குகின்றதற்கு இயங்காப்பொருள் ஒன்று ஆதாரமாக இருந்தாக வேண்டும். இதற்குச் சான்றாகத் திரைப்படத்தை எடுத்துக்கொள்ளலாம். திரை யாண்டும் அசையாதிருக்கிறது. அதன்மீது படியும்படி செய்கின்ற நிழலும் வெளிச்சமும் சேர்ந்து வடிவங்கள் அதன்மீது நகர்வன போன்று காட்சி தருகின்றன. அதேவிதத்தில் நகர்கின்ற பிரபஞ்சத்துக்கு அசையாப்பொருளாகிய பரமன் ஆதாரமாயிருக்கிறான். ஆதலால் அவன் ஸ்தாணு: என்று அழைக்கப்படுகின்றான்.

29. भूतादिः பூதாதி: — தோன்றியுள்ள அனைத்துக்கும் மூலகாரணமாயிருப்பவன்.

மக்களாகிய நாம் கனவு காண்கின்றோம். அக்கனவில் தோன்றுகிற அனைத்துக்கும் நாமே காரணமாகின்றோம். நாம் கனவுகாணுதை இடத்துக் கனவில் கண்ட பொருள்களும் இல்லாது மறைந்துபட்டுப் போகின்றன. அதே பாங்கில் பரம்பொருளாகிய மஹாவிஷ்ணு வானவர் பிரபஞ்சமாகத் தோன்றியுள்ள அனைத்துக்கும் மூலப்பொருளாக அல்லது ஆதி காரணமாக அமைந்துள்ளார்.

ஞான வெட்டியான்-2

ஸத்சங்கம்

பொருள்மிகச் செலவு பண்ணிக் கட்டடத்துக்குக் கூரை போட்டுப் பூர்த்தி பண்ணுவிட்டால் அது வாழத் தகுதியற்றதாகிறது. படாதபாடு பட்டுப் பூமியைத் திருத்தியமைத்துச் செய்த சாகுபடி அறுவடை பண்ணுவிட்டால் வீணுகப் போகிறது. யோகி ஒருவனுடைய பாங்கும் அனுபூதியடையாவிட்டால் அங்ஙனம் வீணுய்ப் போகிறது அல்லவா? என்னும் கேள்வியை ஆத்மசாதகன் ஒருவன் கிளப்பலாம். மற்று, இதற்கு விடையாக அர்ஜுனனுக்குக் கிருஷ்ண பரமாத்மா கீதையில் பகர்வதாவது: 'யோகி ஒருவன் அனுஷ்டிக்கின்ற யோகத்தின் சிறு பகுதியும் வீணுய்ப்போவதில்லை.' யோக சித்தனுகாது ஒருவன் இவ்வுலக வாழ்க்கையை மரணத்தின் வாயிலாக முடிவுக்குக் கொண்டு வருவதால் அவனுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. பொருத்தமான சூழ்நிலையில் அவன் அடுத்த பிறவியை எடுத்துத் தன்னுடைய முயற்சியை மேலும் நடைமுறைக்குக் கொண்டுவருகிறுன்.

அண்மையிலே திருவண்ணுமலையிலே வசித்து வந்த ஸ்ரீ ரமண மஹரிஷியை இக்கூற்றுக்குச் சான்றுக எடுத்துக்கொள்ளலாம். இளம் வயதிலிருந்தே அவர் பாங்கு இவ்வுலகத்தை ஒட்டியதன்று. பரநாட்டத்திலேயே அவர் கண்ணும் கருத்துமாயிருந்தார். தமக்கு வயது இருபதாவதற்கு முன்பே மதுரை ஜில்லாவில் அவர் பிறந்த ஊரிலிருந்து திருவண்ணுமலைக்கு வந்து சேர்ந்தார். சில ஆண்டுகளாக மலைக்குகை ஒன்றிலே அவர் நிஷ்டை புரிந்து வந்தார். தெய்வாதீனமாக அவருக்குத் தேவையான உணவை நண்பகலில் மாது ஒருத்தி தானுகவே நாள்தோறும் அவருக்குக் கொண்டு வந்து படைத்துச் சென்ருள். அல்லும் பகலும் பிரம்ம நிஷ்டையிலிருந்த அவர் நாளடைவில் மக்களுக்கு அறிமுகமானுர். பரநாட்டம் பூண்டிருந்த சாதகர்கள் பலர் அவரை அணுகலாயினர். ஆயினும் அவர் காலமெல்லாம் ஒருவாறு மௌனத்திலேயே இருந்து வந்தார். கேட்ட கேள்வியில் பொருத்தமிருக்குமானுல் இரண்டொரு வார்த்தைகளில் தகுந்த விடை அவர் வாயினின்று வெளிவரும். பொருந்தாத கேள்விகளுக்குப் பதில் ஒன்றும் அவர் பகர மாட்டார். தன்னைத்தான் அறிந்துகொள்வது தான் மனிதனுக்கு மிகச் சுலபமானது என்பது அவருடைய கொள்கையாகும். பிரம்மஞானம் மிகக் கடினமானது என்பது பொதுவாக மக்களுக்கிடையில் உள்ள அபிப்பிராயம். ஆனுல் அதைவிடச் சுலபமானது வேறு ஒன்றும் இல்லை என்பது ரமண மஹரிஷியின் கோட்பாடாகும். மனிதன் தன்னைத்தானே அறிந்துகொள்ளுதற்குப் பிறர் உதவியை நாடவேண்டிய அவசியம் இல்லை என்பதும் அவருடைய கொள்கையாகும்.

ஒரு மனிதன் அடைந்துள்ள மன பரிபாகத்திற்கு ஏற்றவாறு புறஉலகின் காட்சி அவனுக்குத் தென்படுகிறது. மனம் திருந்தியமைவதற்கேற்பப் பௌதிக உலகமாக இருக்கின்ற காட்சி தெய்விகம் நிறைந்த பரக்காட்சியாக மாறியமைகிறது. முற்றிலும் மனபரிபாகம் அடையப்பெற்றவராக ஸ்ரீ ரமண மஹரிஷி திருந்தியமைந்தார். காலாந்தரத்தில் அவருக்காகவென்று ஆசிரமம் ஒன்று அமைக்கப்பெற்றது. அந்த ஆசிரமத்தில் எளியதொரு கூடத்தில் ஒரு மூலையில் அவர் ஒரு கட்டிலின் மீது அமர்ந்திருந்தார். அல்லும் பகலும் அதுதான் அவருடைய வாசஸ்தலமாக அமைந்திருந்தது. அக்கூடத்துக்குள் அவரைப் பார்க்க வருகிறவர்கள் எப்பொழுது வேண்டுமென்ருலும் செல்லலாம். தனிவாழ்வு என்பதை மஹரிஷி ஒரு நாளும் கையாளவில்லை. அவர் உண்பது, உறங்குவது, அமைதியாக அமர்ந்திருப்பது ஆகிய செயல்களனைத்தும் மக்கள் கூட்டத்துக்கிடையிலேயே நிகழ்ந்து வந்தன.

பேசவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டால் அவர் மனது சிறிது கீழ்நிலைக்கு இறங்கி வருகிறது. பேசாத நிலையிலிருக்கின்ற பொழுது தான் அவருடைய மகிமை முழுதும் மிளிர்ந்து கொண்டிருந்தது. இதை அறியவந்த பக்தர்கள் அவரிடம் சென்று கேள்வி ஒன்றும் கேட்க மாட்டார்கள். அமைதியாக அவர் முன்னிலையில் அமர்ந்து தியானம் பண்ணிவிட்டு எழுந்து வந்துவிடுவார்கள். தியானம் பண்ணத் திண்டாடுகிறவர்களுக்கு அவர் முன்னிலையில்

அமர்ந்து தியானம் பண்ணுவது மிக எளிதா யிற்று. மனதில் எழுகிற சந்தேகங்களெல் லாம் தாமாகவே அவர் முன்னிலையில் மறைந்து பட்டுப்போம். அத்தகைய மனத்தெளிவை ஆங்கு அமர்கின்ற ஒவ்வொருவனும் பெறலா யினன். இதை ஸத்சங்கத்தின் சிறப்பு என்று சொல்லலாம்.

ஸ்ரீ ரமண மஹரிஷியின் முன்னிலையில் பெறு கிற இந்த ஞான அனுபவத்தை ஒவ்வொரு வனும் தானாகவே பெறமுடியும். ஆனால் அதற்கேற்ற சாதனமும் காலமும் தேவையா யிருந்தன. நெடுநாளைக்குப் பிறகு தானே தெரிந்துகொள்ளக்கூடிய விடை ஒன்றை ரமண மஹரிஷியின் முன்னிலையில் ஒருவன் ஒரே நாளில் அறிந்துகொள்ள முடிந்தது. அது சன்னிதானத்தின் விசேஷமாகும். தியானம் பண்ணுகிறவர்களுக்கும் அவருடைய சன்னி தானம் அந்தப்பாங்கில் அல்லும் பகலும் பயன் பட்டு வந்தது.

இறைவனுடைய கருணை, பிரம்மஞானி களின் நல்லுரை இரண்டும் ஒன்றே; அவை மனிதனுக்கு எப்பொழுதுமே கிடைக்கக் கூடி யவை என்றாலும் அவன் தான் எதற்குத்தகுதி யுடையவனாய் இருக்கிறானோ அதையே பெறு கிறான். ஸ்ரீ ரமண மஹரிஷி ஞானப் பொக்கி ஷங்களின் உறைவிடமாயிருந்தார். அருகிலி ருந்தும் தொலைவிலிருந்தும் மக்கள் புனித யாத்திரையாக அவரிடம் வந்து தத்தமக்கு ஏற்ற அளவில் அவர் கருணையைப்பெற்றனர்.

காட்டில் வசிக்கும் ஜீவராசிகள் தாம் விரும் பாத வேட்டைக்காரர்கள் தம் இருப்பிடத்திற் குள் ஊடுருவி வருவதைத் தம் உள்ளுணர் வால் அறிந்துகொள்கின்றன. அதனால் நேரக் கூடிய அபாயத்தைப் பற்றியும் அவை உணர்ந்துகொள்கின்றன. எனவே, தம்மைப் பாதுகாத்தற்குரிய முன்னேற்பாடுகளை அவை செய்துகொள்கின்றன. இத்தகைய இயற்கை யின் கூறு ஞானிகளிடம் இன்னொரு விதத்தில் வடிவெடுத்திருக்கிறது. அந்த ஞானிகள் மனித குலத்தின் மேன்மைக்காகவே தங்களை முற்றிலும் ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். ஆயி னும் அவர்கள் பயனற்ற பேச்சுக்களிலும் விவாதங்களிலும் தங்கள் நேரத்தையும் சக்தி யையும் வீணாக்கமாட்டார்கள். இதற்கு மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டாகத் திகழ்ந் தவர் ஸ்ரீ ரமண மஹரிஷி ஆவார். அவர் தன்னடக்கமும் சகிப்புத் தன்மையும் நிறைந்த ஞானியாக விளங்கினார்.

அத்தகைய தெய்விக மனிதர் உலகுக்குப் பயன்படுவது குறித்துச் சிலர் ஐயம் கொள் கின்றனர். பொதுவாக, சமுதாயத்தில் தலைத் தரமானவர்களே மேன்மை பொருந்திய சம யத்தை அனுஷ்டிக்கின்றனர். உலகப்பற்றை முற்றிலும் துறந்தாலன்றிச் சமயத்தில் முன் னேற்றம் என்பது சாத்தியமில்லை. ஆதலால் தான் இந்தச் சமுதாயம் தனக்கு அணிகலனா யிருக்கும் அனுபூதிமான் ஒருவரை இழக்க நேர்கிறது. ஆனால் இத்தகைய அபிப்பிராயம் பிழையானதாகும். 'உலகத்தில் வாழ்ந்திரு: ஆனால் அதில் கட்டுண்டிராதே' என்பதுதான் ஆன்மீக வாழ்க்கைக்குரிய கோட்பாடாகும். பற்றின்மை என்பது உலகக் கடமைகளைத் தவிர்த்தலோ புறக்கணித்தலோ வெறுத்தலோ அன்று. சான்று ஒன்றின் மூலம் இதை விளக்கலாம். ஒரு மருத்துவர் தம் மகனை விடத் தம் நோயாளி ஒருவனிடம் பற்று மிகக் கொண்டிருப்பவர் அல்லர். இருந்தாலும் அவ ருடைய சேவை பெரிதும் நோயாளிக்கே உரிய தாகிறது. அங்ஙனம், பிரம்ம ஞானிகளே மனிதகுலத்திற்குப் பெரிதும் நலன் புரிபவர் களாகின்றனர். ஸ்ரீ ரமண மஹரிஷி அத்த கையவர்களுள் ஒருவர். அவர் சமுதாயத்திற்கு வழங்கிய நன்மை அளவிடற்கரியது.

ஸ்ரீ ரமண மஹரிஷி தூங்கிக்கொண்டிருந்த போதிலும்கூட, அவர் முன்னிலையில் தியானம் செய்துகொண்டிருந்தவர்கள் அவர் ஆங் கிருப்பதை உணரமுடிந்தது. பெரும்பாலும் மௌனத்தின் மூலமாகவே அவர் உலகிற்குப் போதித்தார். மனித வாழ்க்கையின் முடிந்த நோக்கம் என்ன என்பதைத் தெளிவுறுத்தி வந்தார். ஞானத்தெளிவு வேண்டி வந்தவர் களுக்கு உத்வேகம் ஊட்டுபவராகவே அவர் இருந்தார். தம் அந்திய காலத்தில் அவர் நோயுற்று இருந்தபோதும் கூட 'இந்த உடலுக்குப் புறம்பாக உள்ள ஆத்மனே நம் சொரூபம்' என்னும் உண்மைக்கு ஒரு கண்கூடான விளக்கமாக ஸ்ரீ ரமண மஹரிஷி இலங்கினார்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (391) ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறந்து வைக்கப்படுகிறது. அதன் காரணம் என்ன?

ஆத்ம சாதகனுடைய ஜீவிதத்தில் நித்திய கர்மம், நைமித்திய கர்மம் என இரண்டுவிதக் கர்மங்கள் இருக்கின்றன. மாதம் தோறும் அனுஷ்டிக்கும் ஏகாதசி விரதம் நித்திய கர்மமாகக் கருதப்படுகிறது. மார்கழி மாதம் கையாளும் வைகுண்ட ஏகாதசி விரதம் நைமித்திய கர்மமாக அனுஷ்டிக்கப்படுகிறது. பாமரர்கள் எல்லாருக்கும் பக்தியை ஊட்டுதற்கு அத்தகைய நைமித்திய கர்மம் நன்கு பயன்படுகிறது. அந்த நைமித்தியக் கர்மங்களில் ஒன்று அன்று திறந்து வைக்கப்பட்டுள்ள சொர்க்க வாயில் வழியாகப் போதலாம். அப்படிப் போவதால் உண்டாகும் நலன்களைக் குறித்து ஏராளமாகச் சொல்லப்படுகிறது. கோயில் வழிபாட்டில் இப்படிக் கையாளுகிற முறைகள்யாவும் பாமரர்களுக்கிடையிலும் பக்தியைப் பரப்புதற்பொருட்டேயாம். விவேகம் படைத்திருக்கிறவர்கள் அத்தகைய நம்பிக்கைக்கு இடைஞ்சல் ஏதும் செய்யலாகாது. நல்வாழ்க்கையில் ஈடுபடாதிருப்பவர்களுக்கு விழாவின் வாயிலாக ஈடுபாட்டை உண்டுபண்ணுவது சாலச் சிறந்தது. நித்திய வழிபாடு ஆத்ம சாதகர்களுக்கு இன்றியமையாத பகுதியாகின்றது. உணவு உண்பது எங்ஙனம் உயிர் வகைகள் அனைத்துக்கும் நித்திய கருமமாகிறதோ அதே பாங்கில் கடவுள் வழிபாடும் ஆத்ம சாதகர்களுக்கு இன்றியமையாத நித்திய கர்மமாகிறது. பாமரர்கள் அதில் உற்சாகம் காட்டமாட்டார்கள். அவர்களிடத்து உற்சாகத்தை ஊட்டுதல் பொருட்டு நைமித்ய கர்மங்களைச் சிறப்பு வாய்ந்த சில நாட்களில் சான்றோர்கள் கையாளுகிறார்கள். அதைப் பார்க்கும் பாமரர்களும் அச்செயலில் ஈடுபடுகிறார்கள். அத்தகைய நல்ல மனப்பான்மையை ஊட்டும் செயல்களில் ஒன்றாக ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் வழியாக நடந்து போதல் என்னும் வழிபாடு இடம் பெறுகிறது.

கேள்வி: (392) கோவிலுக்குச் செல்கின்றவர்கள் அங்குச் சிறிது நேரம் அமர்ந்து வருவதன் நோக்கம் என்ன?

புனிதமும் பண்பும் நிறைந்துள்ள இடமே ஆலயம் எனப்படுகிறது. அத்தகைய அருள் சூழ்ந்துள்ள இடத்தை நன்கு பயன்படுத்த மனிதன் கடமைப்பட்டிருக்கின்றான். வெறுமனே விரைந்து ஆலயத்துக்குச் சென்று மூர்த்தியை வழிபட்டுவிட்டு அவசரமாகத் திரும்ப வருவது பயனற்றதாம். உணவு உண்பதிலும் மிக்கது அதை முறையாகச் செமிப்பது. அதே பாங்கில் ஆலயத்திற்குச் செல்வதன் நோக்கம் மேலான கருத்துக்களை ஏற்பதும் அவைகளைத் தனக்குச் சொந்தமாக்குதலுமேயாம். ஆலயத்திற்குச் செல்லும் பக்தன் ஒருவன் அமைதியாக ஆங்குச் சிறிது நேரம் அமர்ந்திருப்பானாகில் அப்படி அமர்வதனால் உண்டாகின்ற நலனைத் தானே அறிய வருகிறான். இதை முன்னிட்டே ஆன்றோர்கள் ஆலயத்துக்குச் செல்லுகின்றவர்கள் ஆங்குச் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும் என்னும் ஐதிகத்தை அமைத்து வைத்துள்ளார்கள். அப்படி அமர்ந்திருக்கும் பொழுது மற்றொரு காரியத்திலும் பக்தன் ஒருவன் ஈடுபடலாம். நாம் அண்மையில் கற்றுள்ள மேலான கருத்துக்களில் சில நம்முடைய உள்ளத்தில் தெளிவுறாமலும் உறுதி பெறாமலும் இருந்து வருகின்றன. ஆலயத்தில் அமர்ந்திருக்கும் பக்தன் ஒருவன் அத்தகைய மேலான கருத்துக்களைப் பழைய பாடம் கற்கின்ற முறையில் எண்ணிப் பார்ப்பானாகில் அதன் மூலம் அவன் அடைந்துவருகிற மனத்தெளிவு தனக்கே நன்கு விளங்கும். இதுவே இந்த ஐதிகத்தின் நோக்கமாம்.

கேள்வி: (393) உலகைக் கடவுள் படைத்தார். அப்படியானால் அவர் ஏன் தீமையையும் படைத்தார்?

உலகம் தன்னளவில் நல்லதுமன்று; கெட்டதுமன்று. மனிதனுடைய மனப்பான்மைக்கேற்ப அது நல்லதாகவும் கெட்டதாகவும் காட்சி கொடுக்கிறது. உலகைப் படைத்த கடவுள் அதற்குத் தேவையாயிருக்கும் மழையையும் படைத்திருக்கிறார். பின்பு மழை பெய்

கின்றபொழுது அதைக் குறித்து ஒரு சாரார் மகிழ்வுறுகின்றனர். மற்றொரு சாரார் தாங்கள் எடுத்துக்கொண்ட காரியத்துக்கு இடைஞ்சலாக இந்த மழை வந்து கெடுத்துவிட்டதே என்று வருந்துகின்றனர். மக்களைப் படைத்துள்ள தெய்வம் அவர்களுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத பசியையும் படைத்திருக்கின்றார். வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் மனிதன் பசிப்பிணிக்கு உட்பட்டவனாகின்றான். மக்களைப் படைத்த கடவுள் ஏன் இந்தப் பசியைப் படைத்தார் என்கின்ற கேள்வியைக் கிளப்புதல் பொருளற்றது. பசி இல்லாவிட்டால் மனிதனுக்கு வளர்ச்சியோ முன்னேற்றமோ இல்லை. அதே பாங்கில் தீமை எனத் தென்படுகின்றவைகளில் நலனும் ஒருபக்கம் அமைந்திருப்பது தேற்றம். இதை எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும். எனவே, கடவுள் தோற்றுவித்துள்ள இப்பிரபஞ்சம் முற்றிலும் பொருத்தமானதே. இதை நன்கு பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுதல் நம் கடமையாகும்.

கேள்வி : (394) காயத்ரீ ஜபம் பெண்கள் செய்வது முறையா?

காயத்ரீ ஜபம் பெண்கள் செய்யலாகாது என்னும் கட்டுப்பாடு இடைக்காலத்தில் வந்ததாகும். இந்தக் கட்டுப்பாடோ பொருளற்றது. காயத்ரீ ஜபம் பண்ணுவதால் அறிவு தீட்டப் பெறுகிறது. அறிவு அலாதியாக ஆண்களுக்கு மட்டும் உரியதன்று. ஆண்பாலர், பெண்பாலர் ஆகிய இருதிறத்தாருக்கும் நல்லறிவு இன்றியமையாதது. கல்வி எங்ஙனம் இருதிறத்தாருக்கும் நலன் தருகிறதோ அதே பாங்கில் காயத்ரீ ஜபமும் நலன் தரும்.

சிறிது காலத்திற்கு முன்பு நம் சமுதாயத்தில் பொருளற்ற குருட்டு நம்பிக்கை ஒன்று கையாளப்பட்டு வந்தது. பெண்களைப் படிக்க வைக்கலாகாது என்பதுதான் அந்தக் குருட்டு நம்பிக்கை. இன்றைக்கு அது அடிபட்டுப் போயிற்று. பெண்பாலர் காயத்ரீ ஜபம் பண்ணலாகாது என்கின்ற குருட்டு நம்பிக்கையும் அடியோடு அகலுதல் உசிதமாகிறது. அதன் வாயிலாகச் சமுதாயத்துக்குப் பெருமிதமாக நலனே உண்டாகும்.

கேள்வி : (395) எண்ணங்கள் இருதயத்திலிருந்து எழுவதாக ஞானிகள் சொல்கிறார்கள். செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட மனிதன் கூட சில நாட்கள் எண்ணங்களுடன் உயிர் வாழ்கிறான். இருதய நிபுணர், எண்ணங்கள் என்னும் சக்தி மூளையில் இருப்பதாகக் கூறுகிறார். தங்கள் கருத்து என்ன?

எண்ணத்துக்கு இருப்பிடம் மூளை என்பதும் உணர்ச்சிக்கு இருப்பிடம் இருதயம் என்பதும் கோட்பாடாகும். உணர்ச்சியற்ற மனிதனை ஈரமில்லா நெஞ்சத்தான் எனக் கருதுகிறோம். சிந்தனை சக்தியற்றவனை அவன் மண்டையில் இருப்பது களிமண், மூளை அன்று என்று நாம் திரஸ்கரிக்கிறோம். மூளையில் ஏதாவது ஒரு பகுதி கெட்டுப்போய்விடுமாகில் அதற்கேற்றவாறு மனிதனும் தன் அறிவுத் திறனை இழக்கின்றான். இனி, தனக்குச் சொந்தமாயமைந்துள்ள இருதயத்தைஇழந்துவிட்டுச் செயற்கை இருதயத்தை வைத்துக்கொண்டு மனிதன் வாழ்ந்திருப்பானாகில் அவன் வெறுமனே வாழ்ந்தவனாகின்றான். உணர்ச்சியை அவனிடத்துக் காணமுடியாது. அதற்கேற்றவாறு அது குறைவாழ்வேயாம்.

கேள்வி: (396) யாழ்ப்பாணத்தில் விஷ்ணு கோவில் ஒன்றில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பல்லாண்டு, திருப்புகழ், பெரியபுராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்கின்றார்கள். இது சரியா?

பரமனைச் சிவன் என்றும் விஷ்ணு என்றும் பாகுபடுத்துவதில் மனிதன் தத்துவத்தைத் தாண்டி வரம்பு கடந்துபோய்விடலாகாது. சிவனுக்காக அமைந்துள்ள பக்திப் பாடல்களைச் சிவன் கோயிலில்தான் பாடவேண்டும் என்பது குறுகிய மனப்பான்மை. அப்பரம்பொருளே ஹரிஹரனாகவும் சங்கர நாராயணனாகவும் இலங்குகின்றார். ஆதலால் விஷ்ணுகோயிலில் சிவனுக்குரிய பாடல்களைப் பாடலாகாது என்பது முறையன்று. மனிதனுடைய உள்ளத்தைக் கவர்கின்ற பாடல்கள் அனைத்தையும் கோவில்கள் எல்லாவற்றிலுமே தாராளமாகக் கையாளலாம். இது பொதுமக்களுக்கேற்பட்டுள்ள கோட்பாடாகும். ஆனால் அந்தந்தத் தெய்வத்துக்குரிய பாடல்களை ஒரு சிலர் அதற்கேற்ற சன்னிதானத்தில் மட்டும் பாடுவதும் பாராட்டத்தக்கதேயாம். அப்படிப் பாடுவதன் மூலம் அந்தத் தெய்வத்தின் மீது பக்தி வளர்கிறது.

கர்மம் ஞானத்திற்கு வழி வகுக்கிறது

(சுவாமி சாரதானந்தர்)

[சேலம் ஸ்ரீ சாரதா கல்லூரிப் பேராசிரியை ஸ்ரீமதி மங்கையர்க்கரசி மொழிபெயர்த்தது]

குறிப்பு: The Message of our Master என்ற புத்தகத்தில் குருமகராஜின் நேரிடை சீடராகிய சுவாமி சாரதானந்தா அவர்கள் எழுதிய Work—A Means to Knowledge என்ற கட்டுரையின் தமிழாக்கம்.

மானிடர் அனைவரும் கர்மம் புரிதலை ஒரு பொழுதும் தவிர்க்க இயலாது. மனிதன் உயிருடன் இருக்கும் பரியந்தம் ஏதாவது ஒரு கர்மத்தைப் புரிந்துகொண்டே இருக்கவேண்டியுள்ளது. எதனையும் செய்யாமல் மனிதனால் இருக்க இயலாது. ஆனால் சமய நூல்களோ மனிதன் கர்மத்தை முற்றும் துறக்காதவரை ஞானத்தையோ முக்தியையோ அடைய இயலாது எனக் கூறுகின்றன. இவ்விரு கருத்துக்களும் தோற்றத்தில் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. இக்கருத்துக்களை ஒருமைப்படுத்துவதும் கடினம் எனத் தோன்றுகிறது.

கீதையில் இறைவன் கர்மயோகத்தைப் போதித்து வெளித்தோற்றத்தில் முரண்பட்ட இக்கருத்துக்களை சமரசப்படுத்தியுள்ளார். கர்மத்தைக் கடந்த நிலையை மனிதன் அடையும் வரை ஞானத்தையோ சாந்தியையோ அடைய இயலாது என்று கீதாசாரியனும்கூறியுள்ளார். இதில் ஐயத்திற்கு இடமில்லை. செயலற்றுச் சோம்பிச் சும்மாயிருத்தல் வாயிலாகக் கர்மத்தைக்கடக்க இயலாது. அது மனிதன் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வதாகும். அந்நிலையையடையும்பொழுது மனிதனைவிட்டுக் கர்மம் நழுவி விடுவதையும் தான் தேகமன்று, பொறிகளும் அல்ல, ஆனால் தேகமும் பொறிகளுமே கர்மத்தைப்புரிகின்றன என்ற உணர்வையும் அடைகிறான். கர்மத்தைச் செவ்வனே செய்வதின் வாயிலாகப் படிப்படியாகக் கர்மத்தைக் கடந்த நிலையை அடையலாம். ஓயாது வினையாற்றுதற்கிடையில் விச்ராந்தியாக இருப்பதே கர்மயோகத்தின் இரகசியமாகும்.

உடலும் மனமும் செயல் புரிவதற்கிடையில் பற்றற்றும் மன அமைதியுடனும் இருப்பது கர்மத்தைக் கடந்தநிலை என்று பகரப்படுகிறது. காயத்தால் கர்மம் புரியாமல் மனதில் ஆகாயக்கோட்டை கட்டிக்கொண்டிருப்பது கர்மம் அற்ற நிலையன்று. ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்போன் மக்களுள் மேதாவி, அவனே யோகி என்று பகர்ந்துள்ளார். ஞானி வினைப்பயனில் பற்றற்றவனாயும் எதையும் சாராதவனாயும் இருப்பதினால் கர்மத்தில் ஈடுபட்டாலும் அவன் கர்மம் செய்கின்றவன் அல்லன். அப்படிப்பட்ட யோகியே திறம்பட செயலாற்ற இயலும்.

பற்றற்று மன அமைதியுடன் செயலாற்றும்பொழுது கர்மமும் ஞானமும் ஒருமைப்படுகின்றன. இந்நிலையை அனைவரும் அடையலாம். முக்தி பெற்றவர்களுக்கு இந்நிலை இயற்கையெனினும் சாதகர்கள் இந்நிலையை விடா முயற்சியால் அடைதல் வேண்டும். கர்மத்தையும் ஞானத்தையும் சாதனையால் எப்படி ஒருமைப்படுத்துவது என்பதே கீதையின் முதல் சில அத்தியாயங்களில் போதிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சம் ஆகும். கீதோபதேச காலத்தில் ஞானமும் கர்மமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டவை எனக் கருதினர். இன்றும் மக்களில் சிலர் இவ்வாறு எண்ணுகின்றனர். ஞானத்தைப் பெற வேண்டுமெனில் வனத்திற்குச் செல்லவேண்டும் என்றும், சுற்றியிருப்போருக்குச் செய்யும் சேவை மக்களை ஆன்மீகத்தில் உயர்த்தாது என்றும் சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலரோ உலகில் மனைவி மக்களுடன் வாழ்ந்திருப்பதே தலை சிறந்தது என்று கருதுகின்றனர். மனத்தையும் புத்தியையும் தூய்மைப்படுத்தினாலன்றி ஞானத்தையடைய இயலாது என்று சமய நூல்கள் கூறியிருப்பதை முன்னவர்கள் மறந்துவிட்டனர். மனித வாழ்க்கையின் லட்சியம் ஞானத்தை அடைதல் என்று சமய நூல்கள் கூறியிருப்பதைப் பின்னவர்கள் ஒத்துக்கொள்வதில்லை.

சமயம் கர்மத்தை அடிப்படையாகக் கொண்

டது. முதலில் மனிதன் ஆன்மீக ஞானத்தை அடைதற்பொருட்டுப் பலவித கர்மங்களில் ஈடு படுதல் வேண்டும். கர்மத்தின் காரணமாக மனிதன் சுக துக்கங்களை மாறிமாறி அனுபவிக் கிறான். அதனால் இவ்வுலகம் நிலையற்றது என்ற எண்ணம் மெதுவாக அவன் மனத்தில் படிகிறது. அதனால் தன்னலம் இல்லாமல் கர்மத்திற்காகவே கர்மத்தைச் செய்ய முயலு கிறான். அவ்வாறு கர்மத்தைச் செய்வதினால் அவனுடைய மனது சிறிது சிறிதாகத் தூய்மை யடைகிறது. இறுதியாகக் கர்மங்கள் எல்லா வற்றையும் தன்னலமற்று மனிதன் செய்கிறான். இதுவே உண்மையான துறவாகும். துறவு மனப்பான்மையை மனிதன் அடையும்பொழுது மெய்ஞ்ஞானத்தைப் பெறவேண்டும் என்ற ஆவல் உதயமாகிறது. மனிதன் அப்பொழுது வெகு எளிதில் வெற்றி, தோல்வி, பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டற்ற தன்மையை உணர்ந்து கொள்கிறான்.

ஞானத்தையடைதற்குக் கர்மம் ஒன்றே வழி. செருப்பு தைப்பதிலிருந்து சமய நூல்களைப் படிப்பதுவரையிலுள்ள அனைத்துக் கர்மங்களை யும்பற்றற்றுச் செய்வது, ஞானத்தை அடையத் துணைபுரிகிறது. ஆனால் பெரும்பான்மையோர் கர்மத்தில் இருக்கும் சுயநலப்பற்றைத் துறக் காமல் கர்மத்தையே துறந்துவிடுகின்றனர். இதனால் தன்னலமற்ற சத்கர்மங்கள் துறக்கப் படுகின்றன. எக் கர்மத்திலும் தவறு இல்லை; தவறு மனிதனுடையதே. சுயநலப் பற்றுடன் கர்மம் புரிவதனால் பிறவிப்பிணியில் கட்டுண்டு போகிறான்.

மனத்தாலும், இந்திரியங்களாலும் வெறும் காயத்தாலும் ஓயாது கர்மம் புரிதற்கிடையே மனிதன் ஆத்மாவில் லயித்து இருத்தல் வேண் டும். பொது நலத்திற்காகத் தன்னலத்தை துறந்தவனே கர்மயோகியாவான்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-2

தாங்கள் மனமுவந்து எங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஸம்ஸ்கிருத இலக்கணப் புத்த கங்கள் இரண்டும் எங்களுக்கு நன்கு பயன்படும் என்பதில் ஐயம் இல்லை. இளைஞர்களாகிய நாங்கள் சிலர் இங்கே துறவறம் பூண்டு கடினமான வாழ்வு வாழ்ந்து வருகிறோம். ஆழ்ந்து தவத்தில் ஈடுபடுவது ஒன்றே எங்கள் குறிக்கோளாகும். அதைத் தொடர்ந்து சம்ஸ்கிருதப் பாண்டித்யம் ஒருவாறு அடையப்பெறுவது முற்றிலும் அவசியம். வேதங்கள் அமைந்திருப் பது இம்மொழியிலேயாம். இதைக் கற்றுக்கொள்ளுதற்கேற்ப இவ்வுலகைப்பற்றிய ஞானம் வேண்டியவாறு நமக்கு வந்தமைகிறது. உலகை உள்ளபடி அறிந்துகொள்ளுதல் ஒன்றே மானுடவாழ்வைத் திருத்தியமைப்பதற்கு உற்ற உபாயமாகிறது. மனிதன் படுகிற துயரங் களுள் பெரும்பான்மைக்குக் காரணம் அவனிடத்துள்ள அக்ஞானமேயாம். சூரியோதயத்தில் இருள் தானாக நீங்குகிறது. அதே விதத்தில் விவேகம் உதயமாவதற்கேற்ப மனிதனுடைய மனதில்படிந்துகிடக்கும் அக்ஞான இருள் தானாக அகன்றுபோகிறது. அங்ஙனம் நல்லறிவும் தூய வாழ்வும் அடைந்துள்ள மக்கள் நல்லறிஞர் இன்றைக்கு முற்றிலும் தேவை.

மானுடன் ஒருவன் தான் பெற்றுள்ள சிறப்புக்களை மற்றவர்களுக்கு எடுத்து வழங்கக் கடமைப்பட்டிருக்கிறான். வழங்குதற்கேற்ப அந்தச் சிறப்பு அவனிடத்தில் மேலும் ஓங்கு கிறது. தன்னிடத்துள்ள நலன்களைப் பிறருக்கு எடுத்து வழங்கத் தயங்குகின்றவனிடம் அந் தச் சிறப்பும் தானாகவே குறைகிறது; பிறகு மறைந்துபட்டுப் போகிறது.

இவ்வுண்மையை அறிந்துகொள்கின்றவன் யாண்டும் கொடையாளியாக இருந்து வருகின்றான். நலனைத் தாராளமாக வழங்கிக் கெட்டுப்போனவன் இவ்வையகத்தில் யாரும் இல்லை. வழங்காது மறைத்து வைத்து மேன்மையடைந்தவனும் இங்கு இல்லை. ஆதலால் மானுட ஜன்மத்தின் சிறந்த குறிக்கோள் தன்னிடத்துள்ள நலன்களையெல்லாம் கரவாது பிறருக்கு எடுத்து வழங்குதலேயாம். இந்த இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு நாங்கள் அமைத்திருக்கும் இளைஞர் கூட்டம் உலக நலனுக்காகப் பாடுபட்டுவரும்.

ஞானேசுவரர் சரிதம்

வைராக்ய புத்தி படைத்த விடோபா மாமனூர் வீட்டிலிருந்து வெளியேறுவதற்குத்திட்டம் போட்டார். மாயையின் வசீகர சக்தியை நினைத்துப் பார்த்து அதிலிருந்து விடுபடாவிட்டால் தம் வாழ்வு அனர்த்தமாகப் போகும் என்று எண்ணினர். இல்லறத்தைத் துறந்து சந்நியாசம் மேற்கொண்டு மெய்ஞானத்தைப் பெற்ருக வேண்டும் என்று விடோபா தீவிரமாகச் சிந்தனை செய்தார். தம் மனஉறுதியைத் தம் மனைவியிடமும் வெளியிட்டார். ''பெண்ணே! என் உள்ளம் பரம்பொருளை நாடிச் செல்கின்றது. இல்லற வாழ்வில் ஈடுபடுவதற்கு என் மனம் ஒருப்படவில்லை. உயர்ந்த லட்சியத்தை நாடிப் போவதற்கு நீ தடையாக இருக்க வேண்டாம். நான் அடையும் பேற்றில் உனக்கும் பங்கு உண்டு. உன்னை ஏமாற்றிவிட்டு நான் வெளியே போக விரும்பவில்லை. எனவே என் உள்ளத்தில் உள்ளதை உள்ளபடிசொன்னேன். நாளை சூரியஉதயத்திற்குள் நான் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போக விரும்புகின்றேன். உன் தாய் தந்தையர்களிடம் என் மனக் கருத்தைக் கூறி நான் வெளியே போக அவர்களிடமிருந்து அனுமதி வாங்கித் தா" என்று கூறினர். ருக்மாபாய் அவர் கூற்றுக்கு மறுப்புக் கூறுவது சரியன்று என்று எண்ணிக் கணவனை வணங்கி விட்டுத் தன் தாய் தந்தையரிடம்சென்று தன் கணவன் கருத்தை அவர்களிடம் கூறினள். சிதோபந்து அதைக்கேட்டுத் திகில் அடைந்தவராய் விடோபாவைப் பார்த்துப் பகர்ந்ததாவது: ''அப்பா மருமகனே! நீ இன்னும் இளைஞனுக இருக்கின்ருய். இப்பருவத்திலேயே நீ சந்நியாசி ஆக எண்ணம் கொள்ளலாமா? உனக்குப் பிரியமான இளைய மனையாளுடன் இல்லற வாழ்வு நடாத்திவிட்டு முதுமையில் நீ துறவு கொள்ளலாமன்ரே? காவிஉடை அணிந்து கொள்வதால் சந்நியாசியாகிவிட முடியாது. மனதிலுள்ள ஆசைகளை எல்லாம் மாய்த்தவன் தான் சந்நியாசியாவான். பிரம்ம ஞானியாவது அவ்வளவு சுலபமான காரியமா? நாரதர் ஒரு மங்கையிடம் மயக்கம் அடைந்ததைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா? தவசிரேஷ்டரான விசுவாமித்திரரும் மேனகையின் மாயவலைக்குள் அகப்பட்டுக்கொண்டாரன்ரே? யமனை ஒருவேளை வெற்றிகொண்டு விடலாம். காமனை வெற்றிகொள்வது கடினம். இவற்றை எல்லாம் நினைத்துப் பார்க்காது துறவி ஆக நினைக்கின்ருய். இந்த நினைப்பை விட்டொழித்து விட்டு ருக்மாபாயுடனிருந்து இல்லறத்தில் இன்பமாக இரு." விடோபா மாமனுரை வணங்கி ''ஐயா! வீரன் ஒருவன் போர்க்களத்திலிருந்து பின் வாங்கமாட்டான். பகைவரை வெல்ல முடியாவிட்டாலும் புறங்காட்டி ஓடாமல் போர்புரிந்து போரில் மடிவதுதான் வீரனுக்கு அழகு. நான் யதியான பின் அகக்கருவி, புறக்கருவிகளுக்கு வசப்படமாட்டேன். மனத்தோடு போரிட்டு மனத்தைத் திருத்தி அமைப்பேன். நான் பேரின்பத்தை நாடியிருப்பேனேயன்றி பேரின்பம் கிட்டவில்லையே என்று சிற்றின்பத்தை நாடமாட்டேன். இது உறுதி. நீங்கள் எனக்கு விடை கொடுங்கள். நான் புறப்படும் நேரம் வந்துவிட்டது. நான் இனி ஒரு கணமேனும் தாமதிக்க முடியாது" என்று கூறி மாமன் மாமியாரை வணங்கி விட்டு யார் தடுத்தும் நிற்காமல் காசியை நோக்கிப் புறப்பட்டார்.

ருக்மாபாய் அவர்பின்னேதொடர்ந்துசென்று கணவனின் கால்களில் வீழ்ந்து வணங்கி, ''என் உயிர் நாயகா! உங்களைப் பிரிந்து நான் உயிருடன் இருக்க முடியுமா?" என்று புலம்பினள். ''பெண்ணே! நீ கணவன் வார்த்தையின்படி ஒழுகும் கற்பரசியாய் இருப்பாயானல் என் வாக்கைத் தட்டக்கூடாது. நீ உன் தந்தையுடன் இரு. இதுதான் நான் உனக்குப் போடும் உத்தரவாகும்" என்று கூறிவிட்டு அதிவேகமாக நடந்து சென்ருர். ருக்மாபாய் மூர்ச்சையுற்றுக் கீழே வீழ்ந்தாள். தாயும் தந்தையும் வந்து மகளைத் தேற்றி வீட்டுக்கு அழைத்துச் சென்ருர்கள். சிதோபந்து தம் புதல்விக்கு ஆறுதல் மொழி கூறினர். ''என் அரும் புதல்வியே! சாவித்திரி தன் விரதத்தின் மகிமையால் இறந்துபோன தன் கணவன் சத்தியவானை மீண்டும் பெற்ருள். நீ சில நாட்களுக்குக் கௌரி விரதம் அனுஷ்டித்து வா.

விரதத்தின் மஹிமையினால் உன் கணவனை நீ மீண்டும் பெற்றுவிடலாம்'' என்றார். தந்தையின் வாக்கு ருக்மாபாய்க்குச் சரியெனத் தோன்றியது. அன்று முதல் கௌரி விரதத்தைத் தீவிரமாக அனுஷ்டித்தாள்.

அலங்காவதியை விட்டுப் புறப்பட்ட விடோபா நாடுகளையும் காடுகளையும் கடந்து காசியை அடைந்தார். காசியில் ஓடிக்கொண்டிருக்கும் கங்கையில் நீராடித் தாய் தந்தையர்களின் அஸ்திகளைக் கங்கையில் கரைத்தார். காசி விசுவநாதர் ஆலயத்துக்குச் சென்று காசி விசுவநாதரை மனமுருகிப் பிரார்த்தித்தார். அங்குச் சிலநாள் தங்கி ஞானாசாரியரை நாடித் தவித்துக்கொண்டிருந்தார். ஞானியாகிய ஸ்ரீபாதசுவாமிகளைத் தரிசித்தார். ஆனந்தம் மேலிட அவரை வலம் வந்து வணங்கித் தொழுது நின்றார். ஸ்ரீபாதசுவாமிகள் விடோபாவைப் பார்த்து ''அருள்முகவிலாசனே! என்னைப் பலதரம் சேவித்து நிற்கும் காரணம் என்ன?'' என்று கேட்டார். ''சற்குருநாதனே! பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தாங்கள்தாம் துணைபுரிய வேண்டும். சுவாமி! இந்திரியங்கள் என்னும் பாம்புகளும், காமக்குரோதங்கள் என்னும் புலிகளும், அந்தக்கரணங்கள் என்னும் குரங்குகளும், ஆசைகளாகிய ஓநாய்களும் சூழ்ந்துள்ள சரீரம் என்னும் காட்டில் அகப்பட்டுக்கொண்டுள்ளேன். இக்காட்டிலிருந்து தப்பிப்பதற்கு வழிதெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றேன். தாங்கள்தாம் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூறி ஸ்ரீபாதசுவாமிகளின் திருவடிகளில் விழ்ந்தார்.

''வைராக்கிய புருஷனே! நீ இல்லறத்தில் இருந்துகொண்டே சொர்க்க சுகத்தை அடையலாம். அதை விட்டுவிட்டுத் துறவு ஆஸ்ரமத்தை ஏன் அடையவேண்டும்? நீ பிரம்மச்சரிய ஆஸ்ரமத்தில் இருக்கின்றாயா அல்லது கிரகஸ்த ஆஸ்ரமத்தில் இருக்கின்றாயா?'' என்று கேட்டார். ''நான் கிரகஸ்த ஆஸ்ரமத்தில் புகுந்திருந்தபொழுதிலும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் பிரம்மச்சரியஒழுக்கத்தை வழுவாது கடைப்பிடித்துவருகின்றேன்"என்றுவிடோபா கூறினார். ஸ்ரீபாதசுவாமிகள் விடோபாவைச் சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு அவருக்கு ஞானோபதேசம் செய்தார். அவர் ஞானோபதேசத்தைக்கேட்டு ஆனந்தம் அடைந்தவராகக் காசியில் விடோபா வாழ்ந்து வந்தார்.

விடோபா காசியில் ஞானத்தில் திளைத்தவராக இருக்க அலங்காவதியில் சீதோபந்து தன் மகள் ருக்மாபாயும், விடோபாவும் சேர்ந்து இல்லறம் நடாத்தவேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்தித்து வந்தார். ருக்மாபாய் நாள்தோறும் அதிகாலையில் எழுந்திருந்து சக்கரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இறைவனை வழிபட்டு வந்தாள்: விடோபாவை நினைத்துத் தவவாழ்வு வாழ்ந்து வந்தாள். இங்ஙனம் நாட்கள் சில ஓடிக்கொண்டிருந்தன. ஸ்ரீபாதசுவாமிகள் காசியைவிட்டுப் புறப்பட்டுத் தேசசஞ்சாரம் செய்து அலங்காவதியை அடைந்தார். ஆங்கு ஆலயத்தில் அவர் நிஷ்டையில் இருக்கும்போது ஆலய வழிபாட்டுக்கு வந்த ருக்மாபாய் அவரைப் பார்த்தாள். அவரை வணங்கி நின்றாள். ருக்மாபாயின் பக்தியையும், தூய்மையையும் கண்ட ஸ்ரீபாதசுவாமிகள் 'பக்தியும் ஞானமும் ஓங்குவதாகுக' என்று ஆசிர்வதித்தார். அவ்வமயம் சீதோபந்துவும் அங்கு வந்து சேர்ந்தார். சீதோபந்துவின் மூலம் காசியிலுள்ள தம் சிஷ்யர் விடோபா ருக்மாபாயின் கணவர் என்பதை அறிந்துகொண்டார். சீதோபந்துவையும் ருக்மாபாயையும் காசிக்கு அழைத்துச் சென்றார். மனைவியுடன் இருந்து இல்லறம் நடத்தி நன்மகப்பேறு பெறவேண்டும் என்று விடோபாவுக்கு உத்திரவு போட்டார். விடோபாவும் குருவின் ஆணையை நிறைவேற்ற ஊருக்குச் சென்று ருக்மாபாயுடன் இல்லறத்தை மேற்கொண்டார். சந்நியாச ஆஸ்ரமத்தைவிட்டுக் கிரகஸ்த ஆஸ்ரமத்துக்கு வந்த விடோபாவையும், அவருக்கு அனுசரணையாக இருந்த சீதோபந்துவையும் அலங்காவதி பிராம்மணர்கள் புறக்கணித்தார்கள். சீதோபந்துவை ஜாதிப்பிரஷ்டம் செய்யவும் முயன்றார்கள். ''என்னால் உங்களுக்கு எந்தவிதமான துன்பமும் வேண்டாம். நான் வனத்துக்குப் போய்விடுகிறேன்'' என்று கூறிவிட்டு விடோபா கானகம் புகுந்தார். ருக்மாபாய் கணவனைப் பின் தொடர்ந்து காட்டிற்குச் சென்று கணவனுடன் வாழ்ந்து வந்தாள். தவ வாழ்வில் இல்லற வாழ்வும் சேர்ந்ததன் விளைவாக ருக்மாபாய்க்கும் விடோபா

வுக்கும் மூன்று தவப்புதல்வர்களும், ஒரு தவப் புதல்வியும் பிறந்தார்கள். தவப்புதல்வர்கள் முறையே நிவர்த்திசாது, ஞானேசுவரர், சோபானதேவ் என்னும் பெயர்கள் பெற்றூர் கள். தவப்புதல்விக்கு முக்தாபாய் என்று பெயரிட்டார்கள்.

குழந்தைகள்மீது விடோபாவுக்குச் சிறிது வாஞ்சை ஏற்பட்டது. ஞான வேட்கை குறைந்து புத்திர பாசத்தில் விடோபா சிறிது கட்டுண்டிருப்பதாக உணர்ந்தார். மனம் பரத் தில் போய் லயிப்பதும், கலேவதுமாய் இருந் தது. சில சமயங்களில் தமக்கேற்பட்டுள்ள லௌகிக பாசத்தை நிஜனத்து வருந்துவார். மனம் உருகி இறைவனைத் தோத்திரம் செய் வார். சீதோபந்துவினுடைய குடும்பம் வறு மைக்கு ஆளாயிற்று. விடோபாவினுடைய புதல்வர் ஞானேசுவரர் வயது வந்ததும் குடும் பத்தினரின் நிலேயை அறிந்து பாட்டனருக்கு உதவியாகப் பொருளீட்டுவதில் முனேந்தார்.

ஒருசமயம் அலங்காவதியிலுள்ள பிராம் மணர்களுக்கும், ஞானேசுவரருக்கும் வாய்ச் சண்டை ஏற்பட்டுக் கைகலப்பில் முடிந்தது. அதில் பிராம்மணர்கள் நன்கு அடியுண்டார் கள். அவர்கள் அரசனிடம்போய் ஞானேசு வரர் மீது குற்றம் சாட்டினர். அரசன் ஞானேசு வரரைக் கூப்பிட்டு விசாரித்தபொழுது ஞானேசுவரர் பக்கம் நீதியும், பிராம்மணர் பக்கம் அநீதியும் இருப்பதை அறிந்தான். ஞானேசுவரருடைய அறிவுத்திறனேப் பார்த்து அவருக்கு அரசன் நிறைய சன்மானங்கள் கொடுத்தனுப்பினுன். அரசன் கொடுத்த சன் மானத்தினுல் சீதோபந்துவின் குடும்ப வறுமை அகன்றது. ஞானேசுவரர் காட்டுக் குச் சென்று தம் தந்தையை நாட்டுக்கு அழைத்து வருவதாகக் கூறித் தம் பாட்ட னுர் சீதோபந்துவினிடம் விடை பெற்றுச் சென்றூர்.

தம் தந்தையின் தபோபலத்தையும், பிரம்ம ஞானத்தையும், ஆனந்த நிலேயையும் அறிந்த ஞானேசுவரர் அவருடன் சம்வாதம் செய்ய விரும்பினர். ஞானேசுவரர் தந்தையை நோக்கி, "தந்தையே, நீங்கள் நாட்டுக்கு வர வேண்டும். நாட்டுக்கு வந்து எங்களுடன் நீங்கள் இன்புற்று வாழ்ந்திருக்க வேண்டும்" என்று அழைத்தார். "ஞானேசுவரா, காட் டுக்கு வந்தபின் நாட்டுக்கு வரலாமா? நாட்டில் வந்து நான் இனிப் பெறப்போவது என்ன இருக்கிறது? அங்குள்ள சூழ்நிலே முக்திக்குப் பாதகமாக இருக்குமேயன்றிச் சாதகமாக இருக்காது. கானகமே முக்தியடைவதற்கேற்ற சூழ்நிலேயாகும். ஆகையால் நான் இங்கேயே இருந்துகொள்கிறேன். ஏகாந்தமான காடு நிஷ்டை புரிவதற்குப் பொருத்தமானதாகும்" என்றூர் விடோபா. "தன்னேயறிந்து தன்னில் தானுயிருப்பதுதான் பிரம்ம நிஷ்டையாகும். காட்டில் தனித்திருப்பது மட்டும் நிஷ்டையாய் விடாது. தனித்துக் காட்டில் தவம் செய்வ தால் அஞ்ஞானம் நீங்கிவிடாது. காடென்றும் நாடென்றும், சந்நியாசம் என்றும் சம்சாரம் என்றும் கருதாது திடமனதோடு இருப்ப வனே ஞானியாவான். ஒன்று வேண்டுமென் கின்ற சங்கல்பமும், மற்றொன்று வேண்டா மென்கின்ற சங்கல்பமும் இல்லாதிருப்பதே நிஷ்டையாகும். பிரபஞ்சத்திலிருந்துகொண்டு ஜனகர் திடஞானம் என்னும் வாளால் விஷய சுகங்கள் என்னும் மிருகங்களே வெட்டி வீழ்த்திவிட்டுத் திரண்ட ஞானத்தோடு இருந் தார். திட ஞானமில்லாமல் எவ்வளவு நாள் காட்டில் இருந்தாலும் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டேயிருக்கும். பெருவெள்ளத்தில் வீழ்ந்த பெரிய கல்லானது அசையாதிருப்பது போன்று விஷயாதி சுகங்கள் எத்தனே வந்தா லும் மனம் அசையாதிருப்பவனே பிரம்மானந் தம் பெறுவான். அகண்டானந்தமாயுள்ள ஆத்மாவை விஷயாதிகள் என்ன செய்யக் கூடும்? பசு எவ்வளவு கொழுத்திருந்தாலும் அது புலி முன் வருவதற்கு அஞ்சும். அது போன்று விஷயாதிகள் திடஞானியின் முன் வர அஞ்சும். திடஞானி எந்தச் சூழ்நிலேயில் இருந்தாலும் பூரண ஞானத்தை இழக்க மாட் டான். திடமில்லாதவன் தனிமையில் இருந் தாலும் ஞானத்தை இழந்துவிடுவான். விருப்பு வெறுப்பற்று நான் என்னும் அகங்காரத்தைக் களேவதே பிரம்ம நிஷ்டையாகும்" என்று ஞானேசுவரர் எடுத்துரைத்தார். ஞானேசு வரரின் ஞான உரையைக் கேட்டு விடோபா பரமானந்தம் அடைந்தார். "என் மக்கள் தெய்வப் பிறவிகளாவார்கள். அவர்களுக்குச்

சேவை செய்யாது இக்காட்டில் இருந்த என் அறியாமையை என்னென்பேன்!" என்று கூறினர். ருக்மாபாயைப் பார்த்து 'நாம் கிருதார்த்தர்களானோம்; நாம் புண்ணியவான் களானோம்" என்று கூற ருக்மாபாயும் மகிழ்ச்சியடைந்தாள். ஞானேசுவரரோடும் மற்றக் குழந்தைகளோடும் விடோபாவும், ருக்மாபாயும் நாட்டுக்கு வந்தார்கள். மகளையும், மருமகளையும், பேரக்குழந்தைகளையும் பார்த்துச் சிதோபந்தும் அவருடைய மனைவியும் பெருமகிழ்வு அடைந்தார்கள்.

ஞானேசுவரர் தம் தந்தையாகிய விடோபாவை அரசனிடம் அழைத்துச் சென்று அவருடைய மகிமைகளையெல்லாம் அரசனுக்கு எடுத்துரைத்தார். விடோபாவும் அரசனுக்குப் பல நன்மொழிகள் கூறி ஆசீர்வதித்தார். அரசன் பெருமகிழ்வடைந்தான். பிறகு ஞானேசுவரர் தம் தந்தையின் பெருமையையும், தவத்தையும் அந்தணர்களுக்கிடையில் எடுத்துக்கூற அவர்கள் அதை ஏற்க மறுத்தார்கள். அப்பொழுது அவ்வழியாக ஓர் எருமைக் கடா வந்தது. அதைப்பார்த்த ஞானேசுவரர் அதைச் சுட்டிக்காட்டிப் "பிராம்மணர்களே, நீங்கள் இந்த எருமைக்கடாவிற்குச் சமானமாகமாட்டீர்கள். இவ் எருமைக் கடாவுக்கு உள்ள அறிவில் ஆயிரத்தில் ஒரு பங்கு அறிவு உங்களுக்கு இருந்தால் உங்களைப் போற்றலாம்" என்றார். அதைக் கேட்ட பிராம்மணர்கள் கோபமடைந்தார்கள். "அடா ஞானேசுவரா! என்ன சொன்னாய்? இந்த எருமைக்கடாவுக்கு அறிவு இருக்கிறது என்பதை நீ எங்களுக்குக்காட்டாவிட்டால் உன்னை இரண்டு துண்டாக வெட்டிவிடுவோம்" என்று கூறி எருமைக்கடாவை அவர் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். ஞானேசுவரர் அவ் எருமைக்கடாவின் மீது கையை வைத்து "ஓ மகிஷமே! தவத்தினால் ஒருவன் உயர்ந்தவன் ஆகின்றானா? பிரம்ம ஞானத்தினால் ஒருவன் பிராமணன் ஆகின்றானா? அல்லது குலப் பிறப்பினால் பிராமணன் ஆகின்றானா? என்பதை இம்மனிதர்களுக்கு நீ எடுத்துரைக்க வேண்டும்" என்றார். அப்போது அம்மகிஷமானது வாயைத் திறந்து ருக், யஜுர், சாமம் அதர்வணம் என்ற நான்மறைகளிலுள்ள கருத்துக்களைக்கூறிக்கடைசியாக "ஜன்மனாஜாயதே சூத்ர: கர்மனா ஜாயதே த்விஜ: வேதோ முக்யஸ்து விப்ராணாம் ப்ரம்மஞ் ஞானம்து ப்ரஹ்மணம்" என்ற சுலோகத்தைக் கூறி ஞானேசுவரரை வணங்கி நின்றது. அந்தச் சுலோகத்தின் பொருளாவது: "மனிதன் ஒவ்வொருவனும் பிறவியினால் சூத்திரனாகப் பிறக்கிறான். கர்மானுஷ்டானங்களினால் பிராம்மணனாக ஆகிறான். உயர்ந்தவர்களான அந்தணர்கள் வேதத்தையும் அதன் பொருளான பிரம்மத்தையும் உணர்தலே முக்கியமாகும்." இதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் வியப்படைந்தனர். ஞானேசுவரரைப் போற்றிச் சிலர் புகழ்ந்தார்கள். இன்னும் சிலர் இவர் சூனியம் படித்திருக்கிற மந்திரவாதி என்று பயந்தார்கள். வேறு சிலர் அவரை மனதில் தூற்றிக் கொண்டே ஓடினார்கள்.

இதன்பின் ஞானேசுவரர் தம்மை அணுகியவர்களையெல்லாம் பக்தர்களாக்கினர். பக்தி யோகம், ஞானயோகம், கர்மயோகம் என்ற யோகங்களை அவரவர் மனபரிபாகத்துக் கேற்றவாறு எடுத்துரைத்தார். உண்மையான மதம் என்ன என்பதை மக்களுக்கு எடுத்துரைத்து மக்களைச் சரியான மார்க்கத்தில் செல்லும்படிச் செய்தார். ஞானேசுவரர் பெற்றோர்களையும், மற்றோர்களையும் பெருவாழ்வு வாழச் செய்து பரமனுக்கு உரியவர்களாகும்படி செய்தார். தம் வாழ்நாளின் கடைசியில் தியான நிலையிலிருந்து மஹா சமாதியடைந்தார்.

அலகிலா விளையாட்டுடையான் என்று இறைவன் சொல்லப்படுகின்றார். உலகத்தில் அரிய பெரிய காரியங்களை விளையாட்டுப்போன்று செய்துமுடிப்பதே ஈசனுடைய செயலாகும். ஞானிகளும் பக்தர்களும் அதே போன்று அரிய பெரிய செயல்களை விளையாட்டுப் போன்று செய்துவிட்டுப் போகின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கை மற்றவர்களுக்குப் பெரியபாடமாக அமைகின்றது. வழிதவறிப் போகின்ற மக்களுக்கு அவர்களுடைய வாழ்வும் போதனையும் வழிகாட்டிகளாக அமைகின்றன. ஞானேசுவரருடைய வாழ்வும் போதனையும் நமக்கு வழிகாட்டுவதாக அமைந்திருக்கின்றன.

(முற்றும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

திருதராஷ்டிரன், காந்தாரியுடனும் விதுரருடனும் ஹிமாலய பர்வதத்தின் தென்சாரலுக்குப் போனார். ஹிமாலய பர்வதம் முழுவதும் ரிஷிகளின் ஆச்ரமம், தவசிகளின் உறைவிடம் என்று சொல்லலாம். சப்த ரிஷிகளின் திருப்திக்காக இங்கே கங்காதேவி ஏழு கிளைகளாகப் பிரிந்து பாய்கிறாள். அதனால் இந்த இடத்துக்குக் கங்கா சப்ததீரம் என்ற பெயர் பிரசித்தமாயிற்று. இப்புனித நீரில் நீராடி, அந்தத் தீர்த்தத்தை அருந்தி உணவை விடுத்து அவர்கள் மூவரும் தீவிரமாகத் தபசில் காலம் கழிக்கிறார்கள். திருதராஷ்டிரனது மனது இப்போது நன்கு அவனுக்கு அடங்குவதாயிற்று. ஏனென்றால் அவனது உலக ஆசைகள் அனைத்தும் போய்விட்டன. அப்படிப்பட்ட மனது தானே கடவுள்பால் லயிக்கிறது. தனது குமாரர்களைப் பற்றி அவன் இப்போது நினைப்பதுமில்லை, கவலைப்படுவதுமில்லை. அவன் அப்யாசத்தால் ஸ்திர சுக ஆசனத்தில் நெடிது வீற்றிருந்து மனதைக் கடவுள்பால் நிலைத்திருக்கச் செய்யப் பழகிக்கொண்டான். அவன் மூச்சை அடக்கிப் பிராணாயாமம் செய்கிறான். மனது ஸ்ரீ ஹரியினிடம் நிலைபெற்று விட்டதால் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களும் அவன்பேரில் ஆதிக்கம் செலுத்த முடிவதில்லை. அவன் குணங்களைக் கடந்தவன் ஆய்விட்டான். அதனால் அவனது தியானம் நன்கு கைகூடி அவன் சிறந்த முனிவன் போன்று வாழ்ந்து வருகிறான். இந்த ஜீவபோதத்துக்கு ஆதாரமாய் இருக்கிற இந்தச் சரீரம் வேறு, அதனுள் வசிக்கும் ஆத்மா வேறு என்பதை அவன் நன்கு புரிந்துகொண்டான். ஆத்மாவின் கருவியாகிற புத்தியும் வேறு என்பதை அறிந்துகொண்டான். ஜட ஆகாசத்துக்கும் மஹா ஆகாசத்துக்கும் உள்ள சம்பந்தம் போன்றது ஜீவாத்மா—பரமாத்மா இணக்கம் என்பதை அவன் அறிந்துகொண்டான். இரண்டாகப் பிளவுபடமுடியாத வஸ்து ஆத்மா. விவகாரத்துக்காக இரண்டாகப் பேசப்படுகிறது. சென்றடையாத திரு, அஸ்பர்ச யோகம் உடையன ஜீவாத்மனும் பரமாத்மனும். இந்தப் பரதத்துவங்கள் எல்லாம் உனது பெரியப்பாவுக்கு இப்போது விளங்குகின்றன. அவனது மனது விகசிக்கிறது. பெரிய கருத்தில் இன்புற்று ஐக்கியப்படுகிறது. உயர்ந்த ஞானநிலையில் இருந்துவிட்டுப் பிறகு பாமரன் போன்ற கீழ்நிலைக்கு இறங்குபவன் பதிதன் ஆகிறான். ஆனால் உன் பெரியப்பா இனி ஒரு நாளும் கீழ்நிலைக்கு இறங்கமாட்டார், பதிதன் ஆகமாட்டார். அவர் மாயையையே மயங்கச் செய்துவிட்டார் எனலாம். அவரது இந்திரியங்களும் மனமும் அந்த அளவுக்கு அடங்கிவிட்டன. இனி இவ்வுலக இன்பங்களைச் சௌபாக்கியங்களை அவர் ஒருநாளும் நாடமாட்டார். இங்ஙனம் எந்த மாயையின் மயக்கும் அசைக்கமுடியாத திட வைராக்கியம் திட ஞானம் படைத்தவராக உன் பெரியப்பா வாழ்ந்து வருகிறார்.

ஆகவே அவரது பழவினைப் பயன்கள் எல்லாம் அழிந்துவிட்டன. அவரை மீண்டும் உன் பராமரிப்புக்குக் கொண்டுவரவேண்டும்என்கிற ஆவலை விட்டுவிடு. அது மிக மகோன்னத நிலையிலிருப்பவரைக் கீழ்நிலைக்கு இழுப்பதாகும். இன்றிலிருந்து ஐந்தாவது நாள் அவரது குடிசை ஹோமாக்னியினால் தீப்பற்றி எரியும். அத்துடன் திருதராஷ்டிர மன்னனும் எரிந்து சாம்பலாகி விடுவார். தன் கணவனிடத்தில் அத்யந்த பக்தி வைத்திருக்கும் காந்தாரியும் தன் கணவனுடனிருந்தே சாம்பலாவாள். குரு வம்சத்தின் பெருமை மிக்க அரசனே! இதன்பிறகு விதுரரை மட்டுமாவது அழைத்து வருவோம் என்று நீ கருதவேண்டாம். கடைசிக் காலத்திலாவது உலக ஆசைகளை எல்லாம் அறவே விட்டுச் சிறிது காலத்துக்காவது முனிவனாக வாழ்ந்து, மிகவும் பற்றற்ற நிலையில் உயிர் நீத்துக் கர்மபந்தத்தை விரட்டி ஓட்டிப் பெருநிலை அடைந்ததைப் பார்த்தும் தம் அண்ணனின் நற்கதியைப் பார்த்தும் விதுரர் மிகவும் மகிழ்ச்சியடைவார். அனைதை போன்று தீயில் வெந்து மடிந்ததைக் குறித்து மனம் ஒருக்ஷணம் சஞ்சலப்படும். அவர் தம் எஞ்சிய வாழ்நாளைப் புனித க்ஷேத்திர யாத்

திரையில் கழிப்பார்." இங்ஙனம் பகர்ந்து விட்டு நாரதர் பகவந்நாமத்தை உச்சரித்துக் கொண்டே தேவலோகம் சென்ருர். நாரதரின் இம்மொழிகளைக் கேட்டு யுதிஷ்டிரன் மிகவும் மனச் சாந்தி பெற்ருன். நாரதரின் வார்த்தைகள் அவனது சிந்தையில் குடிகொண்டன.

அத்தியாயம் 14

சூதர் சொன்னுர்: "துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணனையும் தங்கள் உறவினர், நண்பர்களாகிய யாதவர்களையும் பார்த்து க்ஷேம செய்தி அறிந்து வர அர்ஜுனன் துவாரகைக்குப் போனன். அவன் புறப்பட்டுப் போய் ஏழு மாதங்களாகியும் அவன் ஹஸ்தினபுரத்திற்குத் திரும்பி வரவில்லை. இந்தக் காலத்தில் யுதிஷ்டிரன் பயமூட்டக்கூடிய பல கெட்ட சகுனங்களையும் உத்பாதங்களையும் கண்டு வந்தான். நாளுக்கு நாள் அன்ருடப் பொழுது போவதே பெரும்பாடாய் இருந்தது. பருவ காலங்கள் மாற்றமடைந்தன. அதனதன் பருவ காலத்தில் அல்லாது வேறு காலங்களிலும் குறித்த பூக்களும் பழங்களும் காணப்பட்டன. மக்கள் கோபம், துவேஷம், வெறுப்பு, பொய் ஆகிய கெட்ட குணங்களின் வசப்படலாயினர். பாப சம்பாத்தியத்தின் மூலம் தங்கள் ஜீவிதங்களை நடத்தலாயினர். மக்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்ந்தனர். பெற்ருேர், மகன், சகோதரர், நண்பர், கணவன், மனைவி இவர்களுக்கிடையில் அசாதாரன பிளவு, வேற்றுமை, அல்ப மனக்கசப்புகள், சண்டை சச்சரவுகள் தோன்றலாயின. இங்ஙனம் மக்களுக்கிடையில் தீயவழிகளில் பிரவிருத்தி ஏற்பட்டுள்ளதைப் பார்த்து யுதிஷ்டிரன் மிகவும் வேதனைப்பட்டார். கெட்ட சகுனங்களையும் அறிகுறிகளையும் பார்த்து மனம் வருந்தித் தம் அன்பு சகோதரனுகிய பீமனிடம் இங்ஙனம் பகர்ந்தார்: "நம் அன்புத் தெய்வம் ஸ்ரீ கிருஷ்ணனையும் ஆருயிர் நண்பர்களையும் பார்க்கப் போன அர்ஜுனன் ஏழு மாதங்களாகியும் இன்னும் திரும்பவில்லை. செய்தி ஏதும் இல்லை. இதற்குக் காரணம் தெரியவில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் பூலோக லீலையை முடித்துவிட்டுத் தமது யதாஸ்தானம் திரும்பத் திருவுளம் கொண்டுள்ளதாகத் தேவரிஷி நாரதர் சொன்னுர். தம்பி! அந்தக்காலம் நிஜமாகவே வந்து விட்டதோ. நாம் பெற்றுள்ள சகல செளபாக்கியங்களும், அறிவும், பலமும், ஆயுளும் அனைத்தும் ஆண்டவன் கண்ணன் இட்ட பிச்சை. நாம் பெற்றுள்ள நற்குணங்களும், புண்ணிய பலனும், பக்தியும், நற்கதி அடைவதற்கு ஏற்ற தகுதியும் எல்லாம் என் பிரபு கண்ணனின் அருள். தம்பி! நாரதர் சொன்னது நிகழ ஆரம்பித்துவிட்டது. ஆதி தெய்விக, ஆதி பௌதிக உத்பாதங்கள், தீய விபத்துக்கள் தினம் நடப்பதைப் பார். எனது பயத்தை இவைகள் மிகைப்படுத்துகின்றன. என் கண்கள், தோள்கள், மார்பு எல்லாம் மரண பயத்தைத் தெரிவிப்பன போன்று துடிக்கின்றன. நிச்சயம் விரைவில் ஒரு பேராபத்து நம்மைச் சூழப்போகிறது.

"சகோதரா, உதய சூரியனைப் பார்த்து எரி நக்ஷத்திரம் போன்ற கண்களுடன் நரிகள் உரக்க ஊளையிடுகின்றன. நாய்கள் பயமற்றுக் குரைக்கவும் மேலே தாவவும் செய்கின்றன. பசு, காளை போன்ற லக்ஷ்மிகரமான மங்களமான விலங்குகளும் கடந்த பல நாட்களாக என்னை இடம் வருகின்றன. (அப்பிரதக்ஷிணமாகச் சுற்றுகின்றன.) கழுதை போன்ற சகுனம் சொல்லும் பிராணிகள் என்னைச் சுற்றுகின்றன. எனது குதிரைகள் இடையருது கண்ணீர் சிந்துகின்றன. புரு யமதூதன் போன்று தோன்றுகிறது. அதோ கோட்டானும் காக்கையும் போட்டி போட்டுக்கொண்டு கத்துவது உள்ளத்தில் பயத்தை உண்டாக்குகிறது. அவைகள் கூக்குரலிடுவதைப் பார்த்தால் உலகில் சிற்றுயிரினமே இல்லாது போகுமோ எனத் தோன்றுகிறது. நேரானவைகள் எல்லாம் வளைந்தும் கோணலாகவும் தோன்றுகின்றன. ஆங்காங்கு பூகம்பம் ஏற்படுகின்றது. ஆகாயத்தில் மேகமின்றிப்பலத்த இடியோசை கேட்கிறது. காற்று உஷ்ணமாகவும், புழுதி சூழ்ந்தும், உலகை இருளில் மூடுவது போன்றும் வீசுகிறது பார். மேகங்கள் மழைக்குப் பதிலாக ரத்தம் பொழிகின்றன. சூரியன் சோபை இழந்து காணப்படுகிறது. கிரகங்கள் தங்களுக்கிடையில் சண்டை இட்டுக்கொள்கின்றன போலத் தோன்றுகின்றன. இந்தப் பூமியும் சொர்க்கமும் தீயசக்திகளால் தீ வைத்துக்கொளுத்தப்படுகிறதோ!

நதிகளும், ஏரிகளும் காய்ந்தோ, பெருக்

கெடுத்தோ பயமூட்டுகின்றன. ஜீவராசிகள் அனைத்தும் அசாந்தியுடன் அலைகின்றன. நெய் சொரிந்தாலும்கூட ஹோமாக்னி சுடர்விட்டு எரிவதில்லை. இவ்வுலகில் என்ன கெடுதல்கள் சம்பவிக்கப் போகின்றனவோ. கன்று ஆவலோடு தாயினிடம் பால் குடிக்கப்போவதில்லை. தாய்ப்பசுவும் அன்புடன் பால் தருவதில்லை. பரஸ்பரம் அன்பு குறைந்துபோயிற்று. அந்த மங்களமான ஜீவன்கள் அழுகின்றன. கால் நடைகள் கம்பீரமாகப் புல்வெளிகளில் மேய்வதில்லை. திக்பாலர்களும் அஷ்டலக்ஷ்மிகளும் லோக ரக்ஷக தேவதைகளும் பயத்தால் நடுங்கியும், வேர்த்தும், விறுவிறுத்தும், கண்ணீருடனும், கவலையுடனும் சஞ்சரிக்கிறார்கள். மக்கள் எல்லாரும் களையிழந்து காணப்படுகிறார்கள். சங்கும் சக்கரமும் பதித்த, சர்வ மங்களமும், லக்ஷணமும், புனிதமும் சகல சௌபாக்கியங்களும் பொருந்திய என் பிரபு ஸ்ரீ ஹரியின் தாமரைத் திருவடிகள் பூமாதேவியின் மேல் படாததினால் அவள் இங்ஙனம் துயருற்றுக் கிடக்கிறாளா?''

இப்படிப்பட்ட சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்த யுதிஷ்டிரன் தம்பி பீமசேனனுடன் கவலையுடன் இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கும்போது குரங்குக் கொடியோனாகிய அர்ஜுனன் துவாரகையினின்று திரும்பிவந்து சேர்ந்தான். தனது ஆருயிர் அண்ணனும் அரசனுமாகிய யுதிஷ்டிரரை வீழ்ந்து வணங்கினான். அர்ஜுனன் முகம் வாடியும், இடையறாது கண்ணீர் சிந்திக்கொண்டும் தலை குனிந்த வண்ணம் பேச நா எழாதவனாய் நின்றான். அசாதாரணமான வீரமும், பராக்கிரமமும், மிக அழகிய முகமும் உடைய அர்ஜுனன் அவனது வழக்கமான கம்பீரமான மகிழ்ச்சியான குளிர்ந்த தோற்றம் இல்லாமல் சோகமே வடிவெடுத்தவனாய் நின்றான். தம் தம்பியை இத்தகைய நிலையில் ஒருநாளும் அவர் பார்த்ததில்லை. அவர் மிகவும் கவலையுடன் தம் தம்பியை ஆலிங்கனம் செய்து அன்புடன் அவனது மனம் அமைதியடையும் வண்ணம் உணவு அருந்தவும் ஓய்வு எடுக்கவும் அனுப்பிவைத்தார். பிறகு உறவினர்களும் நண்பர்களும் சூழ இருந்துகொண்டு அர்ஜுனனிடம் இங்ஙனம் விசாரித்தார்:- ''அர்ஜுனா! நம் உறவினர்களும் நண்பர்களுமான போஜர்கள், தஸார்ஹாஸர்கள், ஆகர்கள், சத்தியதாஸர்கள், அந்தகர்கள், மதுக்கள், விருஷ்ணிகள் ஆகிய யாவரும் நலமாக உள்ளார்களா? நமது பெருமதிப்புக்குரிய பாட்டனார் சூரர் க்ஷேமமாக உள்ளாரா? நமது தாய்மாமன் ஆகிய வசுதேவரும் அவரது இளைய சகோதரரும் சுகமாக உள்ளனரா? நமது அத்தைமார்கள் தேவகியும் அவரது சகோதரிகளும் தங்கள் மருமகள்களுடன் சௌக்கியமாக உள்ளனரா? அரசர் உக்கிரசேனரின் மகனோ மிகக் கொடியவன். அவனைப்பற்றிய செய்தி ஏதும் எனக்கு வேண்டாம். உக்கிரசேனரும் அவரது இளைய சகோதரரும் எப்படி உள்ளார்கள்? கிருதவர்மன், ஜயந்தகடன், சரமன், சத்ருஜித் மற்றுமுள்ள ஸ்ரீகிருஷ்ண சகோதரர்கள் நலமா? அன்புமிக்க பலராமர் நலமாக உள்ளாரா? விருஷ்ணிகுலத்தவனும் பெரிய வீரனுமாகிய பிரத்யும்னன் எப்படி உள்ளான்? போர்க்களத்திற்கு ஆடம்பரமாக உடையலங்காரம் பண்ணிக்கொண்டு வரும் அனிருத்தன் க்ஷேமமாக உள்ளானா?

ஸ்ரீ கிருஷ்ணனின் புதல்வர்களாகிய சாருதேஷ்ணன், சுசேனன், சாம்பன், (ஜாம்பவதியின் மகன்) நலமாக உள்ளார்களா? மற்றும் சிசோவர் தம் மக்களுடன் க்ஷேமமாக உள்ளாரா? ஸ்ருததேவர், உத்தவர், சுனந்தர், நந்தர் மற்றும் பல ஸ்ரீகிருஷ்ண பக்தர்கள் நலமா? இவர்கள் கிருஷ்ணனை அத்யந்தம் நேசிக்கிறவர்கள். நம் அன்புக்குரிய இவர்கள் யாவரும் நலமா? நம்மை அவர்கள் அன்புடன் நினைக்கிறார்களா? முனிவர், பக்தர், நல்லவர், சான்றோர் ஆகிய யாவரும் வணங்கும், போற்றும், காப்பாற்றும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் நலமாக உள்ளாரா? இந்திரனது சபா மண்டபம் போன்ற சுதர்மா என்கிற சபா மண்டபத்தோடு கூடிய துவாரகா பட்டணம் சகல சௌபாக்கியங்களுடன் விளங்கி வருகிறதா? ஸ்ரீ கிருஷ்ணன் பரப்பிரம்மமே ஆவார். பலராமரும் கடவுளே ஆவார். இவர்கள் உலக நன்மையின் பொருட்டு மானுட வடிவம் தாங்கி யதுகுலத்தில் தோன்றியுள்ளனர். ஸ்ரீ கிருஷ்ணனால் பாதுகாக்கப்பட்டுவரும் துவாரகா நகரில் யாதவர்கள் யாவரும் மகிழ்ந்து

மூவுலகும் போற்ற வாழ்ந்து வருகிறார்களா? ஸ்ரீ கிருஷ்ண பத்தினிகள் ஆத்ம சாதனம், கிரியைகள், விரதானுஷ்டானம், நோன்புகள் யாவற்றையும் விட்டுக் கிருஷ்ண பக்தியில், ஸ்ரீ கிருஷ்ண சேவையில் முழுமனதோடு ஈடுபடுகின்றனரா? அவர்களுடைய பக்தியில் கட்டுப்பட்டவனாக பக்தவத்சலனாகிய பகவானும் தேவலோக மலராகிய பாரிஜாத புஷ்பத்தைத் தேவர்களை வென்று கொண்டுவந்து தந்தார். இதனால் அவர்கள் இந்திராணி சசிதேவிக்கு நிகராக இவ்வுலகில் வாழ்கிறார்கள். யாதவர்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனால் யாண்டும் பாதுகாக்கப்பட்டவர்களாய் நிர்ப்பயமாய் தேவர்களைப் போன்று சுதர்ம சபாமண்டபத்தை அலங்கரிக்கிறார்கள். இப்படி யாதவர்களை மட்டுமன்று உலகையெல்லாம் பாதுகாப்பவனாகிய அந்தக் கோபாலன் நலமா? அன்புள்ள என் தம்பி! நீயும் நலமுடன் இருக்கிறாயா? ஏன் எழுச்சியற்றவனாகச் சோகமே வடிவெடுத்தவனாக உலகிடத்து வெறுப்புத் தட்டினவனாகக் காணப்படுகிறாய்? நீ உன் மனதுக்குகந்த உயிர் நண்பர்களுடன் அசாதாரணமாக நீண்ட நாட்கள் இருந்துள்ளாய். அப்படி இருந்தும் உன் துயரத்துக்குக் காரணம் என்ன? ஒருவேளை பழகப்பழகப் பாலும் புளிக்கும் என்பதுபோல உன்னிடத்து அவர்கள் ஏதும் மரியாதைக் குறைவாகத் தரக்குறைவாக நடந்து கொண்டனரா? ஏதும் கடுஞ் சொற்கள் சொல்லி உன்னை அனுப்பி வைத்து விட்டனரா? உன்னை நாடி வந்த வறியோர்க்கு எப்போதாவது ஏதும் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டதா? நீ வாக்குத் தந்த பிரகாரம் ஏதும் நிறைவேற்ற முடியாமல், வாக்கிய பரிபாலனம் பண்ண முடியாமல் போயிற்றா? நீ எப்போதும் ஜனங்களை விரும்பி நன்கு பாதுகாப்பவன். அப்படி ஒரு பிராம்மணன், குழந்தை, வயோதிகன், நோயாளி, பெண்பால், பசு யாராவது உன்னிடம் அடைக்கலம் புகுந்து உன்னால் காப்பாற்றவும் பாதுகாப்புத்தரவும் முடியாது போயிற்றா? யாராவது ஒரு பரஸ்திரீயுடன் சகவாசம் செய்துவிட்டாயா? கற்புடைய மாது ஒருத்தியை அறியாது ஏதும் இழிவுபடுத்திவிட்டாயா? உனக்குச் சமமானவன் அல்லது உனக்கு மிக்கானவன் யாரிடமாவது தோல்வியடைந்தாயா? பசித்த சிறுவன், பசித்திருந்த கிழவன் இப்படி யாரையாவது ஒருவரை உதாசீனப்படுத்திவிட்டு நீ மட்டும் புசித்தாயா? ஏதாவது அநீதியான காரியம் செய்துவிட்டாயா? அல்லது ஸ்ரீ கிருஷ்ணனுடன் இவ்வளவு நாள் சேர்ந்து வாழ்ந்திருந்து இப்போது பிரிந்து வந்துள்ளதைக் குறித்து வருந்துகிறாயா? அன்பான சகோதரனே! ஏதோ ஒன்று நிகழ்ந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் நீ இவ்வளவு அதிகமாக மனக்கிலேசம் ஒருநாளும் அடையமாட்டாய். நடந்ததை நீ விரைவில் எடுத்துரைத்து என் மனவேதனையைத் தீர்ப்பாயாக."

அத்தியாயம் 15

சூதர் சொன்னார்:-"முனிவர்களே, ஸ்ரீகிருஷ்ணனது பிரிவு அர்ஜுனனை வாட்டிக்கொண்டிருக்கிறது. தனது தெய்வம் போன்ற அண்ணன் பல துன்பங்களுக்கு ஆளாகி வேதனையுற்றிருப்பதும் அவனது துயரத்தை அதிகப்படுத்தியது. அவனது நாக்கும் தொண்டையும் வரண்டன. அவன் முகத்தில் திகழ்ந்த களையே போய்விட்டது. மிகுந்த சோகத்திலும் அவன் மனதில் ஸ்ரீ கிருஷ்ண ஸ்மரணை இருந்தது. சதா கிருஷ்ணனது ஞாபகமே இருந்தது. அவனால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. சிரமப்பட்டுக் கண்ணீரை அடக்கிக் கொண்டான். அலை அலையாக வந்த துயர உணர்வுகளைச் சமாளித்துக்கொண்டான். ஆயினும் கிருஷ்ணனைப் பிரிந்த துயரம் அவனை அக்னிபோல் தகித்தது. இப்போது மாதவனின் நட்பான அன்பான செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவன் ஞாபகத்துக்கு வந்தன. அதனால் அவனது துயரம் சிறிது தணிவதாயிற்று. உணர்ச்சியினால் தழுதழுத்த குரலில் தன் அன்பான அண்ணனுக்குக் கீழ்க் கண்டவாறு பதில் உரைத்தான்:-"மஹாராஜா என்னிடத்தில் நண்பனாக விளையாடிக் கொண்டிருந்த அப்பரம பிரபு என்னை ஏமாற்றி விட்டுப் போய்விட்டார். தேவர்களும் கண்டு ஆச்சரியப்பட்ட எனது வீரியம், தேஜஸ், சௌரியம் ஆகிய எல்லாச் சிறப்புக்களையும் பகவான் எடுத்துக்கொண்டார்."

குட்டித் திருவாசகம்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

" அன்பு எனும் அழிவிலாப் பொருள் " என்கிறார் அதிவீரராமர். அன்பு என்பது ஒரு 'கருத்துப் பொருள்.' அது செயலின் மூலமாகக் 'காட்சிப் பொருளாக' வெளிப்படும். " அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்; அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்" என்பது திருமூலர் வாக்கு. "இறவாத இன்ப அன்பு" வேண்டுகிறார் சேக்கிழார் சுவாமிகள்.

இறைவனிடத்து அன்பு பூணுகின்ற உணர்வே அரிய உணர்வாகும். இறை உணர்வு மனிதனை உயர்நிலைக்கு ஆட்படுத்தும்; மனிதனைப் பூரண மனிதனுக்கும். எனவே இறை அன்பினை வேண்டுகின்றார்.

பிறவிக் கடலைக் கடக்க உன் பாதமே தெப்பம்:

"அழிவிலாப் பொருளே பழமறைக்
[கொழுந்தே
அலையெறி அமுத வாரிதியே
ஒழிவிலாது அருளும் கற்பகக் கனியே
ஒப்பனை மைப்பரந்து எறிக்கும்
விழியினல் உருக ஒருபுறம் அளித்த
விமலனே கருவையம் பரனே
இருவிலாப் புணையாம் பிறவியங் கடல்நின்று
ஏறநான் பெற்றது உன்பதமே."

"எப்பொழுதும் அழிவு இல்லாத பரம் பொருளாகத் திகழ்பவனே! வேதம் வழி வழியாகச் சிறந்து விளங்குவதற்கு முதற்காரண மான வேதக்கொழுந்தே! அலைவீசும் ஆனந்தம் என்னும் அமுத சாகரமே! தன்னையே கதியாக அடைகின்றவர்களுக்கு ஓய்வு இன்றித் தந்தருளுகின்ற கற்பகக் கனியே! ஒளி பொருந்திய கடைக்கண் பார்வையால் திருவுளம் உருகுமாறு வாம பாகத்தை அளித்தருளிய விமலனே! திருக்கருவையில் எழுந்தருளியுள்ள இறைவனே! திரும்பத் திரும்ப அழுந்துவதற்கு இன்றி, பிறவியாகிய கடலிலிருந்து நான் கரையேறுவதற்கு அடியேன் பெற்ற சிறந்த தெப்பம் உனது திருவடியே ஆகும்."

பிறவிக் கடலைக் கடப்பதற்கு இறைவன் திருவடியே தெப்பமாக உதவும் என்கிறார்.

"உயிரவை நிலை" என்று சாஸ்திர நூல் திருவருட்பயன்பற்றிக் கூறும். உயிர்களாகிய அவற்றின் நிலை என்பது பொருளாகும்.

பசுவாகிய உயிர்கள் முன்பு பிறவி எடுத்த நாளையும் சொல்ல முடியாது. இனிப் பிறக்கப் போகின்ற நாளையும் இத்தனை என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. "எழுகடல் மணலை அளவிடில் அதிகம் எனதிடர்ப் பிறவி தொலையாதே" என்கிறார் அருணகிரிநாத சுவாமிகள். அநாதியாகவே பிறந்து இறந்து அளவு இல்லாத துன்பங்களை உயிர்கள் தாங்கி நிற்கின்றன. பிறவி இத்தனைதான் அமையும் என வரையறை செய்து கூற முடியாது. செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்றவாறு பிறவி வந்து அமையும். செய்த வினை நீங்குகிற வரையிலும் பிறவி தொடர்ந்து வரும். "பல் கோடி சென்மப் பகை" என்பது குமரகுருபரர் வாக்கு.

"மேனள் அகில லோகமும் ஆனந்தயோனியும், நிகிலமும் தோன்ற நீ நினைந்த நாள் தொடங்கி, எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்து, யாரும் யாவையும் எனக்குத் தனித் தனித் தாயராகியும் வந்திலாதவர் இல்லை; யான் அவர் தந்தையராகியும், தாயராகியும் வந்திராததும்இல்லை; முந்து பிறவா நிலனும் இல்லை" என்பது பட்டினத்தடிகள் பாடல் பகுதி. காரண காரியத் தொடர்ச்சியாகத் தடையில்லாமல் வருவதால் பிறவிப் பெருங் கடல் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இறைவன் திருவடிகளை மனத்திலே எண்ணித் தியானிக்கின்றவர்களே இந்தப் பிறவிப் பெருங்கடலை நீந்திக்கடப்பார்கள்.

"சேய கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு அடியேற்கு முன்னின்று அருள்" என்கிறார் குமரகுருபர சுவாமிகள்.

"ஈட்டிய தவத்தினலே இறையருள் உருவாய் வந்து கூட்டிடும்" என்பது சிவப்பிரகாசம்.

முற்பிறவியில் செய்த புற வழிபாடு, அக வழிபாடு ஆகியவற்றின் பயனல் நல்வினை தீவினை இரண்டையும் சமமாகப் பாவிக்கும் இருவினை ஒப்பும், சத்திநிபாதம் ஆகிய திரு

வருள் பதிவும் அதிவிரராம பாண்டியருக்கு ஏற்பட்டன.

அது வரையிலும் உள் நின்று உணர்த்திய இறைவன், அருள் உருவம் கொண்டு குரு மூர்த்தி வடிவம் கொண்டு எழுந்தருளி களா மரத்தின்கீழ் வீற்றிருந்து திருவருள் பாலித்தான். இதனுல் அவருக்குத் திருவடி ஞானம் ஏற்பட்டது.

ஈர்த்து என்னை ஆட்கொண்டாய்:

"உன்பதம் எத்தித் துன்பவேர் அறுக்க
  உலகினில் திருவுடன் வாழும்
மன்பதைக் கெல்லாம் எய்திடும் தரமோ!
  வலியவந்து எனைத்தடுத்து ஆண்டு உள்
அன்பு வந்து ஒருவர் அறிந்திடா அறிவும்
  அறிவுறுத்தி அருளினை அதற்கு
முன்பு எது புரிந்தேன் கருவையம் பதிவாழ்
  முதல்வனே! முக்கண் வானவனே!"

— கரிவலம் வந்த நல்லூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள முதல்வனே! மூன்று கண்களை உடைய வானவர் பெருமானே! உன்னுடைய மலர்ப்பாதத்தை வணங்கிப் போற்றித் துன்பமாகிய வேரை அடியோடு அறுப்பதற்கு, இந்த உலகில் செல்வத்தோடு திகழ்கின்றவர்களுக்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்குமா? கிடைக்காது அல்லவா.

அப்படியிருக்க, அச்செல்வர்களுள் ஒருவனாக விளங்கிடும் அடியேனை, நீ தானாகவே வந்து, தடுத்து அடிமை கொண்டு ஆட்கொண்டாய். நின் திரு உள்ளத்தில் என்மீது பேரன்பு கொண்டு மகிழ்ந்தாய். யாரும் அறிய இயலாத மெய்யறிவை அறிவுறுத்தி அருள்பாலித்தாய். இறைவா! நீ அருளிய இச்செயலுக்கு, முற்பிறப்பில் அடியேன் எத்தகைய நல்வினை செய்தேன்! நான் அறியாது இருக்கின்றேனே!

செல்வம் உடையவர்கள் அனைவருக்குமே இறையருள் கிட்டுமா என்றால் கிட்டாது. செல்வம் இறைவனலே நமக்கு அருளப்பட்டது. நம் முயற்சி எவ்வளவு இருந்தாலும் அவன் அருளில்லாமல் நமக்குச் செல்வம் கிடைப்பதற்கு வழியில்லை. அவன் தந்த செல்வம் அறப்பணிகளுக்கே பயன்படவேண்டும் என்று அவர்கள் நினைத்துச் செயல்படவேண்டும். ஏழைகள், அடியவர்கள், யாத்ரிகர்கள் ஆகியோர்களுக்கு உணவு வழங்கக்கூடிய அறச்சாலைகளுக்கு அவர்கள் வழங்கலாம். அறிவு தானம் செய்யும் கல்வி நிறுவனங்களுக்கும் உடல் பிணி தீர்க்கும் மருத்துவமனைகளுக்கும் அவர்கள் செல்வம் பயன்பட வேண்டும். "செல்வத்துப் பயன் ஈதல்" என்று சொல்வது போல, அறிவையும், ஆன்மீகத்தையும் வளர்ப்பதற்குச் செல்வத்தைச் செலவு செய்வதற்குப் பதிலாக, தங்கள் குடும்பத்தையும் உடலையும் வளர்த்துப் பெருக்குவதற்கு அதைப் பயன்படுத்தினுல் இறைவன் அருள் கிடைக்குமா?

நமக்கு ஐந்து விதமான கொள்கைகளில் எப்போதும் நம்பிக்கை இருக்கவேண்டும் என்பது பெரியவர்களின் எண்ணமாகும். கடவுள், புண்ணியம், பாபம், புண்ணியத்தின் பலனை அனுபவிக்கும் இடம் ஆகியவற்றில் நம் எல்லாருக்கும் நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த நம்பிக்கைகள் இருந்தால்தான் செல்வத்தைச் சரியான முறையில் நேரிய வழியில் செலவு செய்ய முடியும். ஆனல் செல்வம் உடைய எல்லாருக்கும் இத்தகைய நம்பிக்கை இருக்குமா என்பது ஐயமே. நம்பிக்கை இருந்தால் நல்லது.

செல்வத்திலேயே சிந்தனை இருக்குமானுல் செல்வத்தை மேலும் மேலும் பெருக்கிக்கொள்வதிலும், சேர்த்து வைப்பதிலுமே நாட்டம் இருந்து கொண்டிருக்கும். இறைவனைப் பற்றிய எண்ணம் ஒருபோதும் வராது. அப்படி எண்ணம் வராதபோது, அவனுடைய திருவடிகளைப் புகழ்ந்து போற்றி வணங்கவேண்டும் என்னும் எண்ணமும் உண்டாகாது. அப்படியானுல், துன்பத்தை வேருடன் அறுத்து எறிவதற்கான சந்தர்ப்பமும் கிடைக்காமல் போய்விடுகிறது. இறைவன் ஒருவனே பிறவித் துன்பத்தைத் தொடர்ந்து வராதபடிக்கு வேருடன் களைபவன்.

எல்லா உயிர்களின் துன்பங்களையும் வேரறுத்து அழியாப் பேரின்ப வீட்டையும் அருளுபவன் இறைவன், உயிர்கள்பால் கருணை கொண்டு இவ்வண்ணம் செய்கின்றுன். ஆனுலும் உயிர்கள் வினைப்பயன் முழுவதையும் அனுபவித்த பிறகே முக்திப்பயனை அளிக்கிறுன்.

அதிவீரராம பாண்டியர் "வலிய வந்து என்னைத் தடுத்து ஆண்டு கொண்டாயே" என்றார். திருவருள் திறத்தினாலே எல்லாவற்றையும் தம்முள்ளேகொண்டு எங்கும் நிறைந்து நிற்கும் சிவபரம் பொருளை அவர் உணர்ந்து கொள்கிறார். "ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே" என்று மணிவாசகரும் கூறுகிறார். ஒருவர் பெறுவதற்குரிய பேறுகளுள், மிகப் பெரிய பேறு தன்னை அறிந்து கொள்ளுதலே ஆகும்.

'ஒருவர் அறிந்திடா அறிவும் அறிவுறுத்தி அருளினை"—'யாரும் அறிய இயலாத மெய்யறிவையும் எனக்கு அறிவுறுத்தி அருளினாய்' என்று சிவனின் திருவருள் பெருக்கைப் பாடுகிறார். அவர் சிவத்தை உணர்வதற்குத் திருவருளே காரணமாக இருந்தது.

இறைவனையே எப்போதும் நினைந்து நினைந்து மனம் நைந்து உருகிப் பாடுகிறார். அவ்வாறு பாடியதன் பயனாக, உள்ளம் நைந்து உருகியதன் வாயிலாகத் தம் வசம் இழந்து பரவசப்படுகிறார். அப்பொழுது சிவபெருமானின் திருவடிகளையே சேரவேண்டும் என்னும் உறுதி அதிவீரராம பாண்டியர் உள்ளத்திலே ஏற்படுகிறது. அவ்வாறு திருவடி அடைவதற்குத் தடையாக உள்ள பூத உடலை நீக்குவதற்கு விரைகின்றார். அவ்வாறு விரைகின்ற நிலையில் வலியவந்து தடுத்தாட்கொண்ட சிவனின் அளப்பரிய ஆற்றலைப் புகழ்கிறார்.

இறைவனுடைய திருமேனி ஒளிவடிவமான திருமேனி ஆகும். "ஓங்கு ஒளியாய் அருள் ஞான மூர்த்தியாகி" என்று சிவப்பிரகாசம் கூறுகிறது. ஐயாறப்பன் அடிகள் சோதியாகவும், செஞ்சுடராகவும், சூரியனாகவும், சோமனாகவும் விளங்குகின்றார் என்று திருநாவுக்கரசர் பாடுகிறார். "மெய்ச் சுடருக்கு எல்லாம் ஒளிவந்த பூங்கழல்" என்று வாதவூரடிகள் இயம்புகின்றார்.

எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டுகிற இறைவனை, அவன் காட்டுகிற நெறியிலே நின்று காணும் சிவஞானிகள், அவனைப் பேரொளிப் பிழம்பாகவே காண்பார்கள் என்னும் பொருளில் சிவாகமம் சொல்லுகிறது.

தாய்ப்பூனை தன்னுடைய குட்டியைத் தானே வாயினால் கவ்வித் தூக்கிச் சென்று காப்பாற்றும். அதுபோல, இங்கே இவருக்குச் சிவபெருமான் தாமே வலிய வந்து, மனத்துள் புகுந்து அருள் செய்த எளிமையைக் குறிப்பிடுகின்றார்.

"தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும் வான் வார் கழல்" என்று சிவபெருமான் வலிய வந்து ஆட்கொள்ளும் திறத்தைத் திருவெம்பாவை கூறுகிறது.

"இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி" எனவும் திருவெம்பாவை சிவபெருமான் அன்பர்களின் பொருட்டு வலிய எழுந்தருளி வருவதைக் குறிப்பிடுகிறது. ஒப்பற்ற கருணை வள்ளலாகிய ஒரு தனி முதல்வனாகிய சிவபிரான், ஒரு சாரார் அறிந்துகொள்ளுதற்கு அரியவனாகத் திகழ்கிறான். இன்னொரு சாரார்க்கு வலியவந்து அருள்பாலிக்கும் எளியவனாகக் காட்சி தருகிறான். இதற்குரிய காரணத்தைத் தமது பாடலிலே சொன்னார் அதிவீரராமபாண்டியர். " இவர் தேவர், அவர் தேவர் என்று பேசிக் கவர்ந்து நிற்கும் தன்மையாளர் ஒருவாறு தெளிவு பெற்றாலும், அப்பரம் பொருளைத் தன்முனைப்பால் காண முற்படுகின்றவர்களுக்கு அரியவனாக இறைவன் விளங்குகிறான்" என்பதும் ஆன்றோரின் எண்ணமாகும். தன்முனைப்பும் ஆணவமும் உள்ளவர்களுக்கு ஆண்டவன் அருள் கிடைத்தல் அரிது.

'இவ்வாறெல்லாம் அடியேனை ஆட்கொள்ளுவதற்கு என்ன நல்வினை முற்பிறப்பில் நான் செய்தேன்; நான் அறியேனே' என்கிறார். 'உண்ணும் நீரும் உணவும், இன்பமும் துன்பமும் எல்லாம் நீயே' என்று இறைவனைச் சரணகதி அடைந்தவர் அவர்.

'அறிவு விளக்கத்திற்குச் சுருதி, யுக்தி, அனுபவம்—கேட்டல், சிந்தித்தல், தெளிவு பெறுதல் என்ற மூன்று வழிகளைச் சொல்லுவார்கள்.

செவியிலே படுவது கேட்டல்; என்ன பட்டது என்று நினைத்துப் பார்ப்பது சிந்தித்தல்; இன்னதுதான் என்று முடிவுக்கு வருதல் தெளிவு பெறுதல் ஆகும். முதலில் கேட்டல், பிறகு சிந்தித்தல், இறுதியில் தெளிவு பெறுதல் என்று படிப்படியாக அமையும். சில சமயங்களில் அனுபவம் முதலில் கிடைக்கும்.

அதன் பிறகு கேட்டல், சிந்தித்தல் நிகழும்.

திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இறைக் காட்சி அனுபவம் முதலில் ஏற்பட்டது. குமர குருபர சுவாமிகளுக்கு முருகப் பெருமான் திருவருள் பாலித்த அனுபவம் முதலில் ஏற்பட்டது.

அதுபோல அதிவீரராம பாண்டியருக்கும் இறைக்காட்சி அனுபவம் முதன் முதலில் ஏற்பட்டது.

அனைத்துமாய் இலங்கும் அருள்வடிவே!
நான் உன்னைத் துதிக்கும் விதம் எவ்வாறு?

"வான்எரி அறல்கால் மண்எனப் பகுக்க
வரும்பெரும் பூதம்ஓர் ஐந்தும்
ஆனமுக் குணமும் கரணம்ஓர் நான்கும்
அனைந்துமாய் ஆதிஈறு இன்றி
ஊன்உறை உடலுக்கு உயிருமாய் உயிருக்கு
உணர்வுமாய் ஒன்றினும் தோயா
ஞான நாயகனே! கருவையம் பரனே!
நான்அறிந்து உரைக்குமாறு எவனோ! "

—'ஆகாயம், நெருப்பு, நீர், காற்று, மண் என்று வகுக்கப்பட்ட பஞ்சபூதங்களாக விளங்குகின்ற நாயகனே! சத்துவம், இராஜசம், தாமஸம் ஆகிய முக்குணங்களாக அமைந்த குணநிதியே! மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களாகத் திகழ்கின்ற பரம்பொருளே! ஆரம்பமும், முடிவும் இல்லாமல் விளங்குகின்ற இறைவனே! ஊன் பொதிந்த இந்த உடம்புகள் எல்லாவற்றிற்கும் உயிராகத் திகழ்பவனே! அவ்வுயிருக்கு உணர்ச்சியாகப் பொலிபவனே! எதிலும் தோய்தல் இல்லாமல் நிற்கும் ஞான வடிவினனே! திருக்கருவையில் எழுந்தருளியுள்ள சிவபரம்பொருளே! நான் உன்னை உணர்ந்து துதிக்கும் வகை எவ்வாறு? அதனை அறியாத வனாக இருக்கின்றேனே!' என்று அகம் குழைந்து கூறுகின்றார் அதிவீரராமர்.

பஞ்சபூதங்கள்-ஐம்பெரும் பூதங்கள்-உலகத் தோற்றத்திற்கும் உயிர்கள் தோற்றத்துக்கும் அடிப்படையானவை. பொருள்களின் தோற்றத்திற்கு மூலக் கூறுகள் மிகவும் இன்றியமையாதவை ஆகும்.

தற்போது அறிவியல் அறிஞர்களின் கருத்துப்படி நூற்றுக்கும் மேற்பட்ட மூலக்கூறுகள் உள்ளன என்று தெரிகிறது. நம் முன்னோர்கள் ஐந்து மூலக் கூறுகளைக் கண்டறிந்து சொன்னார்கள்.

"நிலம் நீர் தீ வளி விசும்பொடு ஐந்தின் கலந்த மயக்கம் உலகம்" என்று நம் முன்னோர்கள் உலகம் உண்டாவதற்குப் பஞ்ச பூதங்கள் ஆதாரமானவை என்பதைச் சொன்னார்கள்.

நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்பன ஐம்பெரும் பூதங்கள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும் தன்மாத்திரைகள். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்கள் என்று சொல்லப்படும். வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆகிய ஐந்தும் கன்மேந்திரியங்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக்கரணங்கள் எனப்படும்.

ஆக இந்த இருபத்து நான்கு தத்துவங்களும் உயிர் வினைப்பயனை அனுபவிப்பதற்காக உயிரோடு கூட்டப்படும். எனவே இந்த இருபத்து நான்கு தத்துவங்களுக்கும் ஆன்ம தத்துவம் என்று பெயர்.

இவற்றுள் 'பஞ்ச பூதங்களாக விளங்குபவனே' எனச் சிவனை அழைக்கிறார் அதிவீரராம பாண்டியர்.

இறைவன் எல்லாப் பொருள்களிலும் கலந்து விளங்குகின்றான். பொருள்களின் தன்மையால் அவற்றிலிருந்து வேறாகவும் திகழ்கிறான். எல்லாமாய் அல்லவுமாய் இலங்குவதால் அவன் பெருமைக்குரியவன். எத்தகைய நுண்ணிய பொருள்களிலும் கலந்து விளங்குவதால் நுண்ணியனாகத் திகழ்கிறான். 'ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்" எனவும், "இல் நுழை கதிரின் துன் அணுப்புரையச் சிறியவாகப் பெரியோன்" என்றும் சிவனைப் பெரியவர்கள் கூறுகின்றார்கள்.

உலகம், உடல், உயிர், குணம், உணர்வு முதலிய அனைத்தும் தானேயாக விளங்குபவன் இறைவன். அவற்றிற்கெல்லாம் வேறாகவும் திகழ்கிறான்.

இறைவன் ஒருவனே அஷ்ட மூர்த்தியாகவும், ஏழு உலகங்களாகவும், பத்துத் திசைகளாகவும் கலந்தும் விரிந்தும் நிற்பதைப் பாடி ஆடுவோம் என்கிறார் மணிவாசகர்.

பிரபஞ்சம் முழுவதையும் சிவமயமாகக் காண்கின்றவர் அதிவீரராமர்.

கரணங்களில் அகக் கரணம், புறக்கரணம்

என இரண்டுவகை உண்டு. அகக்கரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. புறக் கரணம் செய்கரணம், அறிகரணம் ஆக இரண்டு வகை உள்ளன.

செய்கரணங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயுறு, உபஸ்தம் என்பன. அறிகரணங்கள் மெய் வாய் கண் மூக்குச் செவி என்பன.

''ஊன் உறை உடலுக்கு உயிராய்''

விளங்குபவன் சிவன். சதைப் பிண்டத்தால் ஆன இந்த உடம்புக்கு உயிராகத் திகழ்பவன் இறைவனே ஆவான். அவனே உள் நின்று இயக்குகின்றான்; உணர்த்துகின்றான். அந்நிலையில் சிந்தையில் கொள்ளக்கூடிய மயக்கம் ஏதும் இல்லை. உயிருக்கு உயிராகச் சிவ பெருமான் திகழ்வதால், அவ்வுயிர்களின் மனத்தையும் தன் வயமாக்குவான்.

''ஊன் உறை உடலுக்கு உயிராய்''

என்று அதிவீரர் கூறக் காரணம் என்ன? உயிருக்கு உற்ற உறவு சிவனையன்றி வேறு இல்லை. இறைவனை, "அருந்துணை, பெருந்துணை", "உற்றார் யாருளரோ", உற்றவரும் உறுதுணையும் நீயே" என்றும், "உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்" என்றும் கூறிச் சான்றோர்கள் இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

அதிவீரராம பாண்டியர், காலம் கடந்த மூலப்பொருளாகிய சிவபெருமானைத் தம் உள்ளத்தே கண்டவர் ஆவார். இறைவனிடத்துச் செலுத்தும் பேரன்பினால் உயிர்களிடத்துச் சிவம் விளங்கி நிற்கும் என்பது ஆன்றோரின் எண்ணம். தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் அல்லவா!

விண்ணும் மண்ணுமாய் நிறைந்திருப்பது பரம் பொருள். வேறாகி, விண்ணாகி நின்றவன் இறைவன். வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகித் திகழ்பவன் சிவபெருமான். எங்கும் நிறைந்த அவன் அதிவீரராமபாண்டியர் உள்ளத்திலும் வீற்றிருப்பான் அல்லவா! ''உடம்பு எனும் மனையகத்து'' உறைந்திருப்பான் அன்றோ.

''ஒன்றினும் தோயா ஞான நாயகனே!''

—எப்பொருளிலும் தோய்வு இன்றி நின்ற ஞான நாயகனே! என்கிறார். சிவபெருமான் எல்லாப் பொருள்களோடும் ஒன்றாக இருப்பான். இது பரம்பொருளின் இயல்பு.

'நான் உன்னை உணர்ந்து துதிக்கும் வகையை எவ்வாறு அறிவேன்?' என்று வினவுகிறார். சிவத்தால் உண்டான சிவஞானப் பேரறிவையும், சிவநுகர்ச்சியாகிய சிவபோகத்தையும் பெற்றவர் இவர். இருப்பினும் 'உன்னை எவ்வாறு அறிய வல்லேன்?' என்கிறார்.

தகுதி உடைய உயிர்களுக்கு இறைவன் குருநாதனாக எழுந்தருளி வந்து சிவஞானத்தை வழங்குவான். அவ்வாறு கிடைக்கப்பெற்ற அச் சிவஞானத்தில் உறைப்பாக நிலைத்து நின்று உலகியல் பொருள்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது. இறைவன் திருவருளிலே திளைத்து நின்றால் சிவநுகர்வு என்னும் சிவ போகத்தை அனுபவிக்கலாம்.

'உன்னை எவ்வாறு உணர்ந்து துதிப்பது'? என்று கேட்கிறார். ஆரம்பத்தில் உலகியல் வழியே உழன்றவர் ஆனாலும், சிவானுபவம் உண்டாக உலக பாசத்தை விட்டொழித்தவர் அதி வீரராமர். இறைவனை வணங்குவதற்குக் காலமோ, இடமோ, திசையோ, இருக்கும் இடமோ, செய்யும் செயலோ ஒரு பொழுதும் இடைஞ்சலாக இருந்ததில்லை. இதனை நன்கு உணர்ந்தவர் அவர்.

யோகியர் சிற்றின்பத்தை நுகர மாட்டார்கள். தம்முடைய யோகத்தின் முதிர்ச்சியால் தம்மை இறைவன் திருவருளிலேயே ஈடுபடுத்திக்கொண்டு அச்சிந்தனையிலேயே இருப்பவர் யோகியர். பேரின்பத்தை நுகர்ந்த யோகிகளுக்குச் சிற்றின்பத்தில் நாட்டம் உண்டாவதில்லை. ''கற்கண்டைச் சுவைத்தவர்களுக்குக் கருப்பட்டிப் பாகு சுவைக்குமா?'' என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். சிவஞானிகள் சிவபோகத்தை அனுபவிப்பவர்களாகிறார்கள். அவர்களுக்கு எந்நாளும் இன்பமே. சிவ போதத்தில் சிவயோகிகள் யாண்டும் திளைத்திருக்கிறார்கள். அச்சிவஞானிகளுக்குத் துன்பங்கள் எந்நாளும் தொந்தரவு கொடுப்பது இல்லை.

4—3—84 ஞாயிற்றுக் கிழமையன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் திதிபூஜை.

ஆண்மையும் ஆடம்பர வாழ்வும்

(விவேகானந்தரின் அருளுரையை சேலம் சகோதரி தங்கம் தமிழில் மொழி பெயர்த்தது)

ஒரு மனிதன், தன் கடமைகளை எவ்வாறு ஆற்றுகிறான் என்பதனால் மட்டுமின்றி, தன்னுடைய ஓய்வு நேரத்தையும் வசதிகளையும் பயன்படுத்த என்னென்ன ஈடுபாடுகள் உடையவனாய் இருக்கிறான் என்பதன் மூலமும், தான் பெற்றிருக்கும் கல்வியையும் அடைந்துள்ள பண்பாட்டையும் வெளிப்படுத்துகிறான். நற்பண்பாளன் ஒருவன் தன் கடமைகளை முறையாகச் செய்வதற்கிடையில் மிகுந்த நேரங்களில் தன் அறிவையும் பண்பையும் விரிவுபடுத்துவதற்கு ஏற்ற செயல்களிலேயே ஈடுபடுவான். ஓய்வு நேரத்தை வீண்போக்க மாட்டான். சுகபோகங்களில் விருப்பமுள்ள ஒருவனோ, பண்பை மேம்படுத்துவது குறித்துக் கவலைகொள்ள மாட்டான். கிடைத்த நேரங்களிலெல்லாம் விருப்பம்போல் சுகஜீவனம் பண்ணவே முற்படுவான். எனவே சுகஜீவனத்திற்கான வசதிகள் நிரம்பிய காலகட்டம் மக்களைக்குறிப்பாகச் செல்வந்தர்களைப் பெரிதும் பாழ்படுத்துகின்றது. சாதாரண மனிதனொருவன் கடின உழைப்பின் மூலம் தன் வாழ்வைப் பயனுள்ள மேலான இயக்கங்களில் ஈடுபடுத்தும்போது கண்ணியமும் பெருந்தன்மையும் மிக்கவனாக ஆகின்றான். ஆனால், அதே மனிதன் சுகஜீவனத்தில் ஈடுபடுகின்றபொழுது வாழ்வைப் பயனற்ற வெறும் விளையாட்டு ஆக்கி விரயம் பண்ணுகின்றான். அத்தகையவன் மனிதத்தன்மையை இழந்து அருவருப்புக்குரிய புல்லிய விலங்கு போலாகிக் கீழ்மையில் உழல்கிறான். தன் வாழ்வைப் பாழ்படுத்துகிறான். ஆடம்பர வாழ்வு ஒரு மனிதனை இந்த அளவிற்கு இழிந்தவனாக, ஆண்மையற்றவனாக ஆக்கிவிடுகின்றது.

எந்த வகையான அளவற்ற சுகவாழ்வும் தனி மனிதனின் பண்பை நிலைகுலையச் செய்கின்றது. ஆனால் அந்த ஆடம்பரங்களும் சுகங்களும், நம் கலாச்சாரத்திற்கு அன்னியமானதாய், வெளிநாட்டினின்றும் இறக்குமதி செய்யப்பட்டதாய் இருக்கும்போது அவை நம் தேசியப் பண்பாட்டிற்கு விளைவிக்கும் ஆபத்து இன்னும் பன்மடங்கு அதிகரிக்கின்றது.

ஐரோப்பாவில் முதன் முதலில் மோட்டார் கார்கள் உபயோகத்திற்கு வந்தபோது அங்குள்ள சிந்தனையாளர்கள் அதை வரவேற்கவில்லை. உடலுழைப்புக் குறைந்து வசதிகளை எதிர்பார்க்கும் மனப்பான்மை வந்துவிடும் என்று அஞ்சினார்கள். இவ்வாறு வசதிகளைப் பெருக்கிக்கொண்டே போனால் ஒருவன் தன்னைச் சார்ந்திருக்கவல்ல சுதந்திரத்திற்குக் கேடு விளையும் என்பதை உணர்ந்தார்கள். இன்று நாம் சிறிது தொலைவு செல்வதற்குக் கூட கார்களையும் பேருந்துகளையும் பயன்படுத்தும் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டோம். எனவே அதில் உள்ள கேடு நமக்குப் பெரிதாகத் தெரிவதில்லை.

ஆங்கில ஆட்சியின் விளைவாக மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களை நம் நாட்டிற்கு இறக்குமதி செய்தவர்கள் அக்காலத்துச் சமஸ்தான ராஜாக்கள். ஆடம்பர வாழ்வில் பிரியம் கொண்ட அவர்கள், 'எளிய வாழ்வும் உயரிய சிந்தனையும்' என்பதை லட்சியமாகக்கொண்ட நம் தேசிய வாழ்விற்கு இவையெல்லாம் தேவைதானா என்று சிந்தித்துப் பார்க்கவில்லை. எனவே திடீரென்று படையெடுப்பது போல் வந்த மதுப்பழக்கம், சூதாட்டம் ஆகியவற்றின் முன் நிதானமிழந்து அவை விரித்த ஆசை வலைகளில் விழுந்துவிட்டனர். விசாரித்துப் பார்த்து அப்பழக்க வழக்கங்களை விட்டுவிட அவர்களுக்கு இயலவில்லை. அன்றியும், அவை பெருமைக்குரிய செயல்கள் என்று மயங்கி விரும்பி ஏற்றுக்கொள்ளவும் செய்தார்கள். இந்த மனப்பான்மை இன்றும் நீடித்து வருவது வருத்தத்திற்குரிய நிலையாகும். நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டிய இன்னொரு விஷயமும் இருக்கிறது. இப்பழக்க வழக்கங்களை இந்தியர் மீது திணித்தவர் யார்? ஐரோப்பாவின் ஆழ்ந்த அறநெறிக்கொள்கைகளை உணர்ந்து கடைப்பிடிப்பவர்களா? இல்லை. அக்கொள்கைகளால் சிறிதும் பாதிக்கப்படாதவர்களே இத்திய பழக்கங்களை இந்தியர்களுக்கும் வழங்கி உள்ளார்கள்.

பிறநாடுகளோடு கொள்ளும் தொடர்பினல் இத்தகைய விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன என்பதால் ஒரு நாடு மற்றொரு நாட்டின் கலாச்சாரத்திலிருந்து எதுவும் பெற்றுக்கொள்ளக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட வேண்டாம். ஒருசமுதாயம் தன் மக்களுக்கு எத்தகைய சுதந்திரங்களை வழங்கியிருக்கிறது; மக்கள் அச்சுதந்திரங்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கொண்டுதான் அச்சமுதாயத்தை மதிப்பிட வேண்டும். விவேகம் மிக்க மக்கள் தம் தாயகத்தின் பண்பினின்று மாறுபட்ட ஒரு புதிய பண்பாட்டுடன் தொடர்புகொள்ளும்போது அப்புதிய கலாச்சாரத்தில் எதைக் கொள்ளுவது, எதைத் தள்ளுவது என்று அறிவார்கள். அவர்களே தம் சுதந்திரத்தை முறையாகப் பயன்படுத்தியவர் ஆவர். மேல் நாட்டுப் பழக்கவழக்கங்களைப் பெருமளவுக்கு ஏற்றுக்கொண்டுள்ள நாம் அத்தகைய சுதந்திரத்தைப் பயன்படுத்தத் தவறிவிட்டோம்.

ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை அடையப் பல வழிகள் இருக்கலாம். உதாரணமாக ஒரு தனி மனிதனின் மானம், மரியாதை, உடல் தூய்மை முதலியவற்றை நிர்ணயிக்கும் முறைகள் இந்துக்களுக்கு ஒரு விதமாகவும், முஸ்லிம்களுக்கு இன்னொரு விதமாகவும், ஐரோப்பியர்களுக்கு வேறொரு விதமாகவும் இருக்கலாம். வழி எதுவாயினும், அவ்வழியை மேற்கொண்ட மனிதன் தான் மேன்மகனாகியிருப்பதை நிரூபிக்கவேண்டும். இல்லையேல் மேற்கொள்ளப்பட்டமுறை குறைபாடுடையதாக நிராகரிக்கப்படும். வழி முறைகள் வேறு பட்டாலும் பண்புடையான் ஆவது என்னும் லட்சியம் எல்லாருக்கும் ஒன்றே. அன்னிய நாட்டுப் பழக்கங்களைக் கடைப்பிடிக்க விரும்புவோர் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கம்வரையிலும் கூட, பணத்தைப் பந்தயம் வைத்து விளையாடும் சீட்டாட்டம், தீராத புகைக்குடியில் மூழ்கி இருத்தல், மது போதையில் மயங்கிக் கிடத்தல்—இவையெல்லாம் நல்ல பண்பாட்டில் வளர்க்கப்பட்டவனுக்கு ஒவ்வாதவை என்று எவ்வாறு கீழை நாடுகளில் கருதப்படுகின்றனவோ அவ்வாறே மேலை நாடுகளிலும் இழிவானவையாகவே எண்ணப்பட்டன. அளவுக்கு உட்பட்ட குடிப்பழக்கம், புகை பிடித்தல் முதலியன அனுமதிக்கப்பட்டதால் அவற்றில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்லலாம் என்ற கட்டுப்பாடின்மை மேல் நாடுகளிலும் இருந்ததில்லை. அப்படியே இத்தீய பழக்கங்கள் மேல் நாடுகளில் காணப்பட்டபோதும், சுற்றுச் சூழல்களில் அனுசரிக்கப்படும் சமுதாயப் பழக்கங்களினால் கட்டுப்படுத்தப்பட்டவையாய்த்தான் வெளிப்பட்டன. மேலை நாட்டவருக்கு அவர்கள் சூழ்நிலைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற கட்டுத்திட்டங்கள் இருக்கத்தான் செய்தன. அங்கு ஒவ்வொரு ஆண்மகனும் பெண்களிடமும் பலவீனர்களிடமும் இயல்பான மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும்; அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்புணர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எத்தகைய கடினமான வேலையையும் செய்யவல்ல உடல் பெற்றிருக்க வேண்டும். நன்கு உழைக்க வேண்டும்; தன் உடல் நிலையைப்பற்றி எல்லார் முன்னிலையிலும் பேசக்கூடாது. பிறருடன் பேசும் போது 'நான்' 'நான்' என்ற இந்த இரண்டெழுத்து வார்த்தையைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் ஏதேனும் ஓர் ஆயுதத்தைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டு ஆண்மகனாய் வாழவேண்டும். ஆண்மைக்கு இழிவு தரும் சோம்பலை உதறித்தள்ளும் தைரியம் உடையவனாய் இருக்க வேண்டும். இத்தகைய நல்ல பழக்கங்கள் உள்ளவனே கண்ணியவானாகக் கருதப்பட்டான். இன்று மேலை நாடுகளில் நிலைமை பெரிதும் மாறிவிட்டது எனினும், இந்த உண்மைகளை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒரு சமுதாயம் கொண்டுள்ள குறிக்கோள், அச்சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை ஓரளவுக்குச் சீர்ப்படுத்துகிறது. தனி மனிதன் ஒருவன் தன் சமுதாயத்தின் குறிக்கோளையும் கட்டுப்பாடுகளையும் முழுதும் அறிந்துகொள்ளாவிட்டாலும் ஓரளவுக்கு அவற்றைப் பின்பற்றிவிடுகின்றான். அதனால் தீய பழக்கங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள அவனுக்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் வேற்றான் ஒருவனுக்கோ அச்சமுதாயக் கட்டுப்பாடுகளால் வரும் பாதுகாப்புக் கிடைக்காமல் போய்விடுகின்றது. ஏனென்

ருல் அந்த மனிதன் தனக்கு அன்னியமான அச் சமுதாயத்தின் சூழலில் முற்றிலும் ஒன்றித்து வாழாமல் ஏதோ புரிந்தும் புரியாமலும் இருக் கும் ஒரு சில பகுதிகளையே கடைப்பிடிக்கிறுன். மேலை நாட்டுப் பழக்கவழக்கங்களை அப்படியே பின்பற்றும் இந்தியர்களின் நிலையும் இதுதான். ஆண்மையைப் பற்றியும் தனி மனிதனின் கண்ணியத்தைப் பற்றியும் மேல்நாட்டவர் கொண்டிருக்கும் கருத்துக்களைப் புரிந்து ஏற் றுக்கொள்வதைவிட அவர்களுடைய ஆடம் பரத்தையும் சுகநாட்டத்தையுமே நாம் தொத்து நோய்போல் பிடித்துக்கொண்டிருக் கிறோம்.

இனி, பிறநாட்டுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதிலுள்ள கேடுகளைத் தவிர்ப்பது எப்படி என ஆராய்வது அவசியமாகிறது. கேட்டைத் தவிர்க்கும் முயற்சியில் முதல்படி, அக்கேட்டின் தன்மையைப் புரிந்துகொள்ளும் படி எச்சரிக்கப்பட்டிருப்பதே. இத்தகைய எச்சரிக்கைகள் பெரியவர்களிடமிருந்து நமக்கு வந்துகொண்டுதான் இருக்கின்றன. அடுத்து, அறநெறியிலிருந்து வழுவாதபடி நம்மைக் காக் கும் சக்தி தெளிவான சிந்தனைக்கு உண்டு. இதை நம்மில் சிலரே அறிவர். ஆனல் தெளிந்த சிந்தனையின் அவசியத்தை எல்லா ரும் உணரவேண்டும். எனவே நாம் என்ன புதிய பழக்கங்களை மேற்கொள்ளவேண்டும் என்பது குறித்து விவேகத்துடன் சிந்தித்துப் பழகுவோம். உண்மையில் நம்முடைய கொள் கைகளே நமக்கேற்ற சிறந்த கவசம் ஆகும். பிறரிடமிருந்து கடன் வாங்கியவை அல்ல. ஆண்மையின் சிறப்பை, பெண்மையின் பெரு மையை நிர்ணயிப்பது எது என்பதைத் தெளி வாக அறிந்துகொள்வோம். இந்த அடிப்படை ஞானம் வந்தபின் நமக்கு வாய்க்கும் ஒவ்வொரு சிறு வசதியும் செல்வமும் ஓர் உயர்ந்த லட்சி யத்திற்காகத் தியாகம் செய்யப்பட வேண்டி யவை ஆகிவிடும். வேள்வித்தீயில் சொரியப் பட்ட நெய்போல அவை ஒரு பெருஞ்செயலில் பயன்படுத்தப்பட்டவை ஆகும். ஒரு லட்சியத் திற்காகத் தியாகம் செய்யப்படும் எந்தப் பொருளும் சுயநலத்திற்காகப் பயன்படுவதை விடப் பன்முறை சிறந்த வகையில் பயன்பட் டது ஆகும். இதைக் கருத்தில் கொண்டு, ஆடம் பர வாழ்விற்கு ஆசை கொள்ளாமல் உயர்ந்த லட்சியத்தை நோக்கிச் செல்லும் எளிய வாழ்வை மேற்கொள்வோம். எளிய வாழ்வும் தூயவாழ்வும் நம் நாட்டின் லட்சிய வாழ்வா கும். நம் நாட்டுக்கேற்ற நற்பண்புகளில் நாம் ஊறி வளர்ந்து வருவோமாக.

சூதாட்டம்

சூதும் வாதும் வேதனைசெய்யும். பிறர் பொருளை முறை தவறிக் கைப்பற்று வது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. நாம் உழைத்துப் பெருத செல்வமும், நம்மிடம் நிலைத்திராது. காலம் மிகவும் அருமையானது. காலத்தை இழந்துவிட்டால் திரும்பப் பெறமுடியாது. சூதாட்டத்தில் செலவழிக் கும் காலமும் பொருளும் தனக்குத் தானே செய்துகொள்ளும் துரோகமாகும். பாபத் தையும் பாதரசத்தையும் ஜீரணம் பண்ணமுடியாது. சூதாட்டம் பொல்லாதது என் பது தொன்று தொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினர்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச்சீட்டு என்ற சூதாட்டத்தையும் குதிரைப்பந்தயம் என்ற சூதாட்டத்தையும் செய்து வரு கிருர்கள். இவைகளின் விளைவு கேடு. நல்லார் இத்தீங்குகளினின்று விலகியிருப் பார்களாக. பொது நலனுக்காகவென்றும் இவைகளில் ஈடுபடலாகாது. இவை களில் கருத்துச் செலுத்தாதிருக்குமளவு நலத்தை வளர்த்தவர்களாவோம்.

விவேகானந்தரின் வாழ்க்கையிலே

(சுவாமி துருவானந்தர்)

அச்சம் தவிர்

ஔவையார் எழுதியது ஆத்திச்சூடி. நவீன இந்தியன் விழித்தெழுந்து நிறை மனிதன் ஆக வேண்டும் என்ற நோக்கத்தில் பாரதி புதிய ஆத்திச்சூடி எழுதினன். அச்சம்தான் மனிதனைப் பாழ்படுத்தி எந்த நிலையிலிருந்தும் மேலோங்க விடாது செய்கிறது. அச்சத்தைப் போக்க அதற்கு நேர்மாறான அஞ்சாமையைப் பற்றி நினைத்தால் தைரியம் தானாக நம் உள்ளத்தில் எழுந்து வருவதை உணரலாம். பல பிறவிகளில் அஞ்சாது வாழ்ந்ததால் ஊறும் வீர உணர்வு ரத்தத்தில் கலந்தே தோன்றும். ஒருவனை நாம் பிறவி வீரன் என்கிறோம். சிவாஜிமன்னன், ராணாபிரதாப்சிங், குரு கோவிந்தசிங், அலெக்ஸாண்டர், நெப்போலியன் போன்றவர்கள் வீரர்களாகத் திகழ்ந்தமைக்கு இத்தகைய பிறவி இயல்பும் பிறந்து வளர்ந்த சூழ்நிலையுமே காரணங்களாகும்.

நமது மத்திய அரசு வீரச் சிறுவர் சிறுமியர்களுக்கு ஆண்டுதோறும் சிறப்புப் பரிசுகள் வழங்கிக் கௌரவிப்பதை நாம் அறிவோம். நாட்டில் வீரர்கள் பெருகுகிற அளவுதான் அந்த நாடு எந்தத் துறையிலும் முன்னேறிச் செல்லும். இன்றைக்கு நம் நாட்டைப் பல அன்னிய சக்திகள் பொறாமைக் கண்களோடு பார்த்து வருகின்றன. மண் ஆசை பிடித்துத் திடீரெனப் படையெடுத்து வந்து அடிவாங்கிப் போனவர்களும் மீண்டும் வல்லரசுகளின் பின் பலத்தோடு தாக்க ஆயத்தமாயுள்ளனர். வீரர்கள் மலிந்தது நம் நாடு என்று வெறும் பழங் கதைகளையே பேசிக்கொண்டிராமல் நம் நாட்டு இளைஞர்களுக்கு நாம் சௌரியத்தை ஊட்ட வேண்டும். வீர உணர்ச்சி ஊட்டக்கூடிய கதைகளையும், பாடல்களையும், கட்டுரைகளையும் அதிக அளவில் வெளியிட்டு அவர்கள் படிக்கும்படி செய்தால் வீரம் முளையிலேயே துளிர்க்கும்.

விவேகானந்த சுவாமிகளின் வாழ்க்கையை நன்கு ஆராய்ச்சி பண்ணிப் பார்ப்பவர்களுக்குத் தைரியத்திற்குரிய இலக்ஷணம் என்ன என்பது புரிந்துவிடும். அவர் தம் வாழ்க்கையில் எதைப் புகட்டினரோ அதைச் சிந்தனைபண்ணிப் பார்ப்பவனும், அவர் கூறியபடி நடப்பவனும் வீர உணர்வை வளர்ப்பவனாகிறான்.

விவேகானந்தரின் இளமைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்று. நரேந்திரன் என்பது அவரது பிள்ளைத் திருநாமம். வாரம் ஒருநாள் விடுமுறை தினத்தன்று நரேந்திரன் தலைமையில் மாணவர்கள் கூடி ஏதாவது விளையாட்டு விளையாடுவது உண்டு. அவர்களுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு மரத்தின் மீது ஏறிக் கிளைக்குக் கிளை தாவி டார்ஜான் என்ற வனவீரன் போன்று குதிப்பது. இதில் நரேந்திரன் நிபுணன். அவர்கள் பலதடவை ஒரு பெரிய மரத்தையே குறியாகப் பிடித்து அதிலேயே இவர்களுடைய சர்க்கஸ் வேலையைச் செய்து அமர்க்களப்படுத்தி வந்தனர். அந்த மரத்தினடியில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் ஒரு கண் பார்வையில்லாத பெரியவர் இருந்தார். அவர் எப்போதும் வீட்டிற்குள்தான் இருப்பார். நரேந்திரன் தலைமையில் வரக்கூடிய சிறுவர்கள் மரத்தின் மீது ஏறி அமர்க்களப்படுத்துவது அவருக்குப் பெரிய தொல்லையாயிருந்தது. ஏனெனில் பையன்கள் கிளைகளின் மீது நின்றுகொண்டும், வௌவால் போன்று தொங்கிக்கொண்டும் கிளைகளை அசைத்து ஆட்டம் போடுவதால் கிளைகள் கீழே தாழ்ந்து பெரியவரின் வீட்டுக் கூரையில் உள்ள தகரத்தில் மோதி ஓசையை உண்டுபண்ணி உபத்திரவம் கொடுத்துக் கொண்டிருந்தன. இதைப் பொறுக்கமாட்டாத பெரியவர் குறும்புக்காரச் சிறுவர்களை மரத்தின்மீது ஏறவொட்டாமல் தடுக்க வழிதேடினர். வழியும் கிடைத்தது. ஒரு நாள் பிற்பகல் நரேந்திரனைத் தவிர மற்றச் சிறுவர்கள் மரத்தின் மீது ஏறி வழக்கம்போலக் குதித்து கும்மாளமிடத் துவங்கினர். வீட்டுப் பெரியவர் வெளியே வந்தார். அவருடைய பொறுமை எல்லை மீறியது. மரத்தின் மீதுள்ள சிறுவர்களைக் கீழே இறங்கி உடனே வரும்படி அவசரப்படுத்தினர். இதுநாள்

வரை எந்தத் தடையும் இல்லாது முறையாக நடைபெற்றுக் கொண்டிருந்த விளையாட்டு இன்று பெரியவர் ஒருவரால் தடையுற்றதே என்று எண்ணினாலும் அவர் ஆணையைத் தட்டாது ஒருவர் பின் ஒருவராக மரத்திலிருந்து கீழே இறங்கி பெரியவர் முன் நின்றனர். பெரியவர் நின்ற சிறுவர்களைத் தடவிப் பார்த்தார். புரிந்துகொண்டார். சொன்னதை உடனே நம்பக்கூடிய சிறுவர்கள் என்பதை உணர்ந்து அவர்களிடம் "அடே சிறுவர்களா! இந்த மரத்தில் ஏறிக் கொஞ்சம்கூடப் பயமில்லாமல் குதித்து விளையாடுகிறீர்களே! இதில் ஒரு பிரம்ம ராக்ஷசன் இருக்கிறான். அவன் பொல்லாத அரக்கன். இந்த மரத்தில் ஏறி விளையாடுகிறவர்களைப் பிடித்துக் கழுத்தை ஒடித்து, ரத்தத்தைக் குடிப்பதை நான் என் கண்ணாரக்கண்டேன். நீங்கள் யாவரும் நல்ல சிறுவர்கள். சொன்னால் கேட்கக்கூடியவர்கள். அவரவர் வீட்டுக்குப்போய் விளையாடுங்கள்" என்று இதமாக அவர்கள் மனதில் பதியுமாறு ஓதினார். பெரியவரின் கட்டுக்கதையை அந்த அப்பாவிச் சிறுவர்கள் வாயை 'ஆ' வெனத் திறந்து கேட்டுக்கொண்டிருந்தனர். கேட்கக் கேட்கப் பயம் அவர்கள் உள்ளத்தில் புகுந்து விட்டது. பெரியவரிடம் சொல்லியும் சொல்லாமலும், மரத்தைப் பார்த்தும் பாராமலும்ஓட்டம் எடுத்தனர். வழியில் சிறுவன் நரேந்திரன் வந்துகொண்டிருந்தான். தன் நண்பர்கள் விளையாட்டில் ஈடுபடாது இவ்வாறு தலை தெறிக்க ஓடுவதன் காரணத்தைக் கேட்டான். அவர்களும் பெரியவர் அளந்துவிட்ட பேய்க் கதையைச் சொல்லி மரத்தில் ஏறி விளையாடுவதை விட்டுவிட்டு வீட்டுக்குப் போவதாகக் கூறி, இனியும் தாமதித்தால் அந்த மரத்தில் உள்ள பிரம்ம ராக்ஷசன் துரத்தி வந்து பிடித்து விட்டால் என்ன செய்வது என்று பயந்து கொண்டு ஓடப்பார்த்தனர். சிறுவன்நரேந்திரன் அவர்களைப்பிடித்து நிறுத்தி "அடே மடையர்களா, யோசித்துப் பார்த்தீர்களா? எத்தனையோ வாரமாக அந்த மரத்தில் ஏறி விளையாடிக் கொண்டிருக்கிறோம். இத்தனை நாளும் இல்லாத அரக்கன் இனிமேலா வந்துவிடப் போகிறான்! அது மட்டுமன்று. அந்தப் பெரியவருக்குக் கண்ணும் தெரியாதே! இந்த அரக்கன் வந்து ஆட்களைக் கடித்து ரத்தத்தைக் குடித்தது அவருக்கு எப்படித் தெரிந்தது? இல்லாத கதையைச் சொல்லுகிறாரே. எப்படி நீங்கள் இதை நம்பலாம்? பெரியவராக இருந்தாலும் யாராக இருந்தாலும் யார் எதைச் சொன்னாலும் எளிதில் நம்பி விடுவதா? சிந்தித்துப்பார்க்க வேண்டாமா? வாருங்கள். மீண்டும் போய் மரத்தில் ஏறி விளையாடுவோம். அந்தத் தாத்தா கூறியது அனைத்தும் கற்பனை, கட்டுக் கதை என்பதை நிரூபிக்கிறேன்" என்று அவர்களையும் இழுத்துக்கொண்டு மரத்தின் மீது ஏறத்தொடங்கினான். வழக்கம்போன்று அந்தப் பெரிய மரத்தில் உள்ள எல்லாக் கிளைகளுக்கும் சென்று எல்லா விளையாட்டுக்களையும் செய்துகாட்டினான். அவன் செய்து காட்டியபிறகு அனைவரும் அவன் கூற்றை ஏற்று மரத்தில் ஏறி விளையாட ஆரம்பித்தனர்.

நரேந்திரன் சிறுவனாக இருந்தாலும் சுயமாகச் சிந்திக்கக்கூடியவன். யார் எதைச் சொன்னாலும் அவன் நம்பிவிடமாட்டான். தீர ஆராய்ந்த பிறகே ஒரு முடிவுக்கு வருவான். அதனால் மூட நம்பிக்கைகளையும் மூடக் கொள்கைகளையும் உடைத்தெறிந்துவிடுதல் அவன் இயல்பாக இருந்தது.

விவேகானந்தரின் கருத்துக்களைப் படித்து ஜீரணம் செய்து அதன்படி நடக்க விரும்புபவருக்கு சுவாமிஜியின் அஞ்சாமையும், தனித்த ஆற்றலும் தானாக வெளியாகும். மகான்கள் வெறுமனே எதையும் பேசிவிட்டுப்போய்விட மாட்டார்கள். அவர்கள் தாங்கள் சொல்வது போல் வாழ்க்கையில் நடந்து காட்டுகின்றனர். அதைப் பின்பற்றி நடப்பது மாந்தரது கடமை. வழிகாட்டியில்லாது அல்லல் உறும் சமுதாயத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக இருப்பது விவேகானந்த சுவாமிகளின் வாழ்க்கை. ஆகவே சிறுவர்களும் சிறுமிகளும் தங்களின் இளம் வயது முதற்கொண்டே அஞ்சாமையில் ஊறி எதையும் ஆராய்ந்து பார்த்துச் செயல்படும் தன்மையையும் வளர்க்கவேண்டும் என்பதை மேற்கூறிய சம்பவம் நமக்குக் காட்டித்தருகிறது. "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு." வீரனுக்கு வாழ்க்கையில் ஒரு தடவைதான் மரணம் வருகிறது.

குறிப்புகள்

கலைப்பள்ளி

திருச்சி உறையூரில் கலைப்பள்ளி ஒன்று சிறப்பாக இயங்கி வருகிறது. அதில் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் உள்ளன. குழந்தைகளுக்கு ஒழுக்கமும், பக்தியும், கட்டுப்பாடும் முறையாக அப்பள்ளியில் புகட்டப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் மார்கழி மாதம் முழுவதும் பக்தி நூல் ஒன்றை எடுத்து அப்பள்ளி ஆசிரியர்களும், நிர்வாகியும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அவ்வாராய்ச்சியின் விளைவாகக் கடவுள் பக்தியும் பண்பாடும் அவர்களுக்கு வளர்ந்து வருகின்றன.

இவ்வாண்டு ஜனவரி 14 [மார்கழி 30] அன்று நிறைவு விழா நிகழ்ந்தது. அன்று குழந்தைகள் காட்டிய கலை நிகழ்ச்சிகள் அவர்கள் பெற்றுவரும் இலக்கிய அறிவையும், சமய உணர்வையும் வெளிப்படுத்துவதாக இருந்தன. குழந்தைகளைக் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள்பதில் சொல்லிய நிகழ்ச்சி அவர்களின் பொது அறிவை வெளிப்படுத்தியது. அவர்கள் கூறிய நாமாவளியும் தோத்திரப்பாக்களும் வேத மந்த்ரங்களும் அவர்களிடமுள்ள சமய உணர்வை விளக்கின. நல்ல முறையில் ஆங்குச் சிறுவர்களும், சிறுமிகளும் கல்வி பெற்று வருவதைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. இத்தகைய பள்ளிகள் நாட்டுக்கு மிகவும் தேவைப்படுகின்றன. குழந்தைகளை நன்கு வளர்ப்பதுதான் சிறந்த சேவையாகிறது. குழந்தைகளை நன்குவளர்க்கும் சேவையை அப்பள்ளி செய்துவருகிறது.

தேவராயனேரி

இவ்வூர், திருச்சி-தஞ்சை சாலையில் திருச்சியிலிருந்து சுமார் பதினைந்து மைலில் உள்ளது. இவ்வூரில் நரிக்குறவர்களின் அனாதைக் குழந்தைகளுக்குத் திருவள்ளுவர் விடுதியும், பள்ளியும் உள்ளன. அவ்விடுதியில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் சுமார் 125 குழந்தைகள் தங்கி இருக்கின்றனர். இவ்வாண்டு டிசம்பர் மாதம் 22, 23, 24 தேதிகளில் பெய்த பெருமழையின் காரணமாக அவ்வூர் நரிக்குறவர் காலனி மக்களும், விடுதியில் உள்ள சிறுவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

திருச்சியிலுள்ள விவேகானந்த சேவா சங்கத்தினர் பாதிக்கப்பட்ட திருவள்ளுவர் விடுதிக் குழந்தைகளுக்கு உடைகளும், படுக்கைக்கு வேண்டிய ஜமுக்காளம், பாய், போர்வைகளும் தந்தனர். குடி தண்ணீர்க் குழாய் ஒன்றும் அங்கு அவர்கள் அமைத்துத் தந்துள்ளனர். குழந்தைகளின் கல்விக்கு வேண்டிய சிலேட்டு, நோட்டுப் புத்தகங்களும் தந்து உதவினர். விவேகானந்த சேவா சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இப்பொருள்களைச் சேகரிப்பதில் பெரிதும் சிரத்தை எடுத்துக்கொண்டு உழைத்து 14—1—84 அன்று மாலை 5-30 மணிக்கு விழா எடுப்பித்து அப்பொருள்களை வழங்கினர்கள்.

திருச்சி கைலாசபுரத்தில் உள்ள பாரத கனரகக் கொதிகலன் தொழிற்சாலை மேலதிகாரிகள் அவ்விழாவில் பங்குகொண்டு பேசுகையில், குழந்தைகளுக்குக் குடிநீர் வசதியையும், பள்ளிக் கட்டடத்துக்குத் தேவைப்படும் பொருளுதவியையும் செய்து தருவதாகக் கூறினர்கள்.

அன்றைய விழாவில் குழந்தைகளுக்குப் பஜனையும் நாமாவளியும் சொல்லித்தரப்பட்டன. அவர்கள் அவற்றில் உற்சாகத்துடன் பங்குகொண்டனர். விவேகானந்த சேவா சங்கக் காரியதரிசி அப்பள்ளியைத் தத்து எடுத்துக்கொண்டு அதன் முன்னேற்றத்துக்கு ஆவன செய்யும் திட்டம் உள்ளது என்று கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தர் கருத்தில் கொண்டிருந்த அன்னதானம், அறிவுதானம், அருள்தானம் ஆகிய மூன்றையும் செயல் முறைக்குக் கொண்டுவருவதுதான் திருச்சி விவேகானந்த சேவா சங்கத்தின் நோக்கமாகும். இது போன்ற சங்கங்கள் பன்மடங்கு பெருகி நாட்டில் நரசேவை நாராயண சேவையாக நிகழ்ந்து வருவதாகுக.

புத்தா நத்தம்

இறை வழிபாட்டில் புறவழிபாடு அகவழிபாடு என்ற இரண்டு வகைகள் உண்டு. அகவழிபாடு என்பது வழிபாடு செய்கிற தனி

மனிதனுக்கும் தெய்வத்துக்கும்தான் தெரியும். மற்றவர்களுக்கு அகவழிபாடு நிகழ்வது தெரியாது.

புறவழிபாடு சடங்குகளோடும், கிரியைகளோடும் நிகழும். பிறருக்குத் தெரியும்படியாகக் கிரியா விசேஷங்கள் அங்கு இடம்பெறுகின்றன. ஆண்டவனைக் குறித்து ஆடிப்பாடி மகிழ்வதும் புறவழிபாட்டோடு சேர்ந்தது. பெரும்பாலான மக்களுக்குப் புறவழிபாடு செய்வதுதான் சாத்யமாகும். பக்குவப்பட்ட யாரோ சிலர்தாம் அகவழிபாட்டின் மூலம் தங்கள் உள்ளத்தை உயர்த்திக்கொள்ள முடியும். அபிஷேக ஆராதனை செய்வதும், திருவிழாக் கொண்டாடுவதும், மேளதாளத்தோடு காவடி ஆட்டம், கரக ஆட்டம் ஆடுவதும் புறவழிபாட்டைச் சார்ந்தவைகள் ஆகின்றன.

புத்தாநத்தம் என்ற ஊர் திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை-துவரங்குறிச்சிப் பாதையில் மணப்பாறையிலிருந்து பத்துமைல் தூரத்தில் அமைந்துள்ளது. புத்தாநத்தத்தைச் சுற்றிப் பல கிராமங்கள் இருக்கின்றன. அக்கிராம மக்கள் சுமார் இருபதினாயிரம் பேர் முருகன் விக்ரகத்தைத் தேரில் வைத்து, அலங்காரம் செய்து, பாரப்பட்டி என்ற ஊரிலிருந்து இடையப்பட்டி என்ற ஊருக்கு ஊர்வலமாக 16—1—84 அன்று எடுத்துச் சென்றனர். கொட்டு வாத்யத்துடனும், கரகக் காவடி ஆட்டத்துடனும், அரோஹரா கோஷத்துடனும், முருக நாமாவளியுடனும் ஊர்வலம் சென்றது. இடையில் புத்தாநத்தத்தைக் கடந்துபோக வேண்டி இருந்தது.

புத்தாநத்தம் முஸ்லிம்கள் வாழும் ஊராகும். சென்ற ஆண்டு அவ்வழியாக ஊர்வலம் போக அவர்கள் தடை போட்டார்கள். ஆனால் அத்தடையை நீக்கி ஊர்வலம் சென்ற ஆண்டு நடாத்தப்பட்டது. அதற்குப் பின் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி தொழுகை நேரம் தவிர மற்ற நேரங்களில் ஊர்வலம் நடத்திச் செல்லலாம் என்றும், விசேஷ காலங்களில் எப்பொழுது வேண்டுமென்றாலும் கொட்டு முழக்கங்களுடன் ஊர்வலத்தை நடாத்திச் செல்லலாம் என்றும் அவர்களுக்கிடையில் உடன்படிக்கை செய்துகொண்டதாகத் தெரிவித்தனர். அதன்படி 16-1-84 அன்று நடந்த ஊர்வலத்தில் முஸ்லிம்கள் குறுக்கீடு வெளிப்படையாக இல்லை.

கரகம் காவடி ஆட்டத்துடன் ஊர்வலம் பக்தி உணர்ச்சியுடன் போய்க்கொண்டிருந்தது. ஜாதி வேறுபாடு இன்றி ஒருமை உணர்வுடன், ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் ஆடலிலும் பாடலிலும் தங்களை மறந்து ஈடுபட்டிருந்தமையால், ஊர்வலம் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது.

புத்தாநத்தத்தில் உள்ள மசூதியை அலங்கார வண்டி கடந்த பிறகு, ஊர்வலத்தில் அலங்கார வண்டிக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த பக்தர்களைச் சீருடையில் இருந்த ஒருபோலீஸ்காரரும், சாதாரண உடையிலிருந்த மற்றொருவரும் தடியால் அடித்துவிட்டனர். உடனே அடி விழுந்த பக்கத்தை நோக்கிப் பக்தர்கள் வண்டியைத் திருப்பினார்கள். போலீஸ்காரர்கள் கரம் கூப்பித் தாங்கள் யாரையும் அடிப்பதில்லை என்று கூறியதன் பேரில், வண்டியைப் பழையபடி இடையப்பட்டியை நோக்கிப் பக்தர்கள் இழுத்துச் சென்றார்கள். வண்டி சிறிது தூரம் சென்றதும், அதன் முன்னும் பின்னும் வந்த கூட்டத்தைப் போலீஸார் கடுமையாகத் தடியடிப் பிரயோகம் செய்து விரட்டி ஓட்டினார்கள்.

தடியடிப் பிரயோகம் செய்வதற்கு முன்பு மக்களுக்கு எவ்விதமான முன்னெச்சரிக்கையும் செய்யவில்லை. மேலதிகாரியினுடைய உத்தரவைப் பெறாது மக்களுக்கு எச்சரிக்கை செய்யாது போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ததன் மூலம், சட்டத்தைப் பின்பற்றாது செயலில் இறங்கிய குற்றத்திற்கு ஆளாகின்றனர்.

சுமார் பதினைந்து நிமிடம் போலீஸாரின் தடியடிப் பிரயோகம் நிகழ்ந்தது. அத்தடியடிப் பிரயோகத்தின் விளைவாக சிறியவர்களும், பெரியவர்களும் அடிபட்டுக் காயம் அடைந்தனர். அடிபட்டு வீட்டுக்கு ஓடியவர்கள் போக அத்தலத்தில் அடிபட்டு விழுந்து கிடந்தவர்கள் இருபத்தாறுபேராகும். மண்டை உடைந்தவர்களையும், காலில் வெட்டுப்பட்டவர்களையும் பார்ப்பதற்குக் கோரக் காட்சியாக இருந்தது. சிலர் மூர்ச்சையற்றுப் போனார்

கள். அவர்களுக்கு முதல் உதவி செய்யப்பட்டு அவர்கள் மணப்பாறை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர்.

இருவர் நிலைமை ஆபத்துக்கு இடமாக இருந்ததால், திருச்சி அரசினர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். போலீஸாரின் அநியாயச் செயல்கள் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் காவல் துறை அதிகாரி ஆகியோர்களுக்குத் தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் தகவல் தெரிவிக்கப்பட்டது. தமிழக அரசின் முதலமைச்சருக்கும் தந்தி மூலம் செய்தி தெரிவிக்கப்பட்டது.

தடியடிப் பிரயோகம் நின்றவுடன் இடையப்பட்டிக்கு அமைதியான முறையில் அலங்கார வண்டி இழுத்துக்கொண்டு செல்லப்பட்டது. ஊர்வலத்திலிருந்த மக்கள், உயர் அதிகாரிகள் வந்து நீதி வழங்கிய பின்புதான் இவ்வூர் வலத்தை முடித்து முருகனுக்கு வழிபாடு செய்யவேண்டும் என்று, அலங்கார வண்டியைச் சாலையில் நிறுத்தி வைத்து அமைதியாக அமர்ந்திருந்தனர்.

இரவு எட்டுமணி சுமாருக்குத் திருச்சி மாவட்டக் கலெக்டர் இடையப்பட்டிக்கு வந்து சேர்ந்தார். அவர் வந்து அரைமணிக்குள் போலீஸ் சூப்பரின்டெண்டும் வந்து சேர்ந்தார்.

கலெக்டருடன் பேசும்போது, தடியடிப் பிரயோகத்திற்கு யார் அனுமதி கொடுத்தது என்ற கேள்வி எழுந்தது. உதவிக் கலெக்டர், ''மக்களைத் தள்ளி அப்பாற்படுத்தத்தான் அனுமதி கொடுத்தேன்'' [I asked them to push] என்றார். தடியடிப் பிரயோகத்துக்கு யாரும் போலீஸாருக்கு அனுமதி தரவில்லை.

ஊர்வலத்தில் வந்த விசுவஹிந்பரிஷத் செயலாளர், R. S. S. உதவித் தலைவர் ஆகிய இரண்டு பேர்களைப் போலீஸார் சுட்டிக்காட்டி அவ்விருவரையும் நொறுக்கிவிட்டால் சரியாகி விடும் என்று கூறியதற்குக் காரணம் கேட்க, அதற்கும் பதில் இல்லை. அங்குள்ள முக்யஸ்தர்களிடமும், பொதுமக்களிடமும், ''இதை என் பொறுப்பில் விட்டு விடுங்கள். நான் இதைத் தீர விசாரித்துத் தவறு செய்தவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கிறேன்'' என்று மாவட்டக் கலெக்டர் கூறினர். அதன்பின் ஊர்வலத்தினர் அலங்கார வண்டியை இடையப்பட்டிக் கோயிலுக்கு இழுத்துச்சென்று, முருகனுக்கு அர்ச்சனைசெய்து, தீபாராதனை காட்டி வழிபாடு செய்து அன்று நள்ளிரவில் நிகழ்ச்சியை முடித்தனர்.

அரசாங்கத்தில் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பொதுமக்களிடம் இருந்து திரட்டிய நிதியைக்கொண்டு காவல்துறையினருக்குச் சம்பளம் கொடுத்து நியமித்திருக்கிறார்கள். அவர்கள் மக்களுக்குப் பாதுகாப்புத் தரவும், குழப்பம் ஏற்படாமல் தடுக்கவும் தங்கள் கடமையினைப் பொறுப்புடன் செய்ய வேண்டும். பொதுமக்களிடமிருந்து வந்த பணத்தைப் பெற்றுக் கொண்டு பொதுமக்களுக்குத் தீங்கு செய்வதைவிடக் கொடிய பாபச்செயல் வேறு எதுவும் இல்லை. வேலியே பயிரை மேய்வது போன்று 16-1-84 அன்று புத்தாநத்தத்தில் போலீஸார் செயல்பட்டனர். அன்று போலீஸாரின் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாக இருந்தது. அரசாங்கம் இதில் தீவிரமாக ஈடுபட்டு அன்றைய நிகழ்ச்சிக்கு மூலகாரணமாயிருந்த போலீஸார் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அக்ரமத்தை ஒழிக்க வேண்டிய போலீஸாரிடத்திலேயே அக்ரமம் புகும்படி விட்டுவிட்டால் அக்ரமத்தை எப்படி ஒழிக்க முடியும்?

அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்த பிறகு அன்றைக்கு வந்திருந்த போலீஸ் அதிகாரிகள், அமைதியைக் காக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் வரவில்லை என்றும், குழப்பத்தை உண்டுபண்ண வேண்டும் என்ற நோக்கத்துடனே வந்திருக்க வேண்டும் என்றும் கருத வேண்டியுள்ளது. சிறுபான்மையினரின் பாதுகாப்பு என்ற போர்வையில் அங்கு வந்திருந்த போலீஸ் அதிகாரிகள் விழா நிகழ்த்திய மக்களின் மீது வன்செயலில் இறங்கியதன் மூலம் போலீஸ் துறைக்கே இழுக்கையும், மக்களுக்கு அவர்கள் மீது மாறாத வெறுப்பையும் ஏற்படுத்திவிட்டார்கள்.

மசூதியை ஊர்வலத்தினர் தாக்க வந்ததாகவும், அதன்பேரில் தடியடிப் பிரயோகம் செய்ததாகவும் போலீஸ் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது. படுகாயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இருவர் கூற்று போலீஸார் கூற்று பொய் என்பதை நிரூபிக்

கிறது. அவ்விருவருள் ஒருவர் கூறியதாவது: "ஊர்வலத்தில் வந்த அலங்கார வண்டியின் பின் வந்துகொண்டிருந்தேன். மணப்பாறை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், முஸ்லீம் ஒருவ ரிடம் சில்லரை வாங்கிக்கொண்டு மசூதிக்குள் ளிருந்து கல்லை எடுத்துவந்து கூட்டத்தின் மீது விசி எறிந்தார். பிறகு என்னை ஒரே தூக்கா கத் தூக்கிக் கீழே போட்டுத் தடியால் மூர்ச்சை அடையும்படி அடித்துவிட்டார். அடி விழுந்த பிறகு எனக்கு ஒன்றும் தெரியவில்லை. மருத்துவமனையில் அடுத்த நாள் சுய நினைவு வந்தபிறகுதான் நான் இருக்கும் இடத்தை அறிந்தேன்."

மற்றொருவர் கூறியதாவது: "நான் முருக னுக்கு முடி வைத்திருந்தேன். முருகனுடைய வழிபாட்டில் கலந்துகொள்ளலாமென்று ஆவ லுடன் ஊர்வல வண்டியின் பின்னால் முருகன் நாமத்தை ஓதிக்கொண்டும், "அரோஹரா" என்று சொல்லிக்கொண்டும் வந்தேன். மசூதிக் குப்பக்கத்தில் வந்ததும் திடீரென்று போலீஸ் காரர் என்னை அடித்து மூர்ச்சை அடையும்படிச் செய்துவிட்டார். அவர் அடித்த அடியினால் கை இன்னும் தூக்கமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்."

மேலும், தடியடிப் பிரயோகத்திற்குப் பின்பு அமைதியான முறையில் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அலங்கார வண்டியைப் புத்தாநத்தத்துக்கு இழுத்துச் சென்றனர். மசூதியைத் தாக்கவேண்டுமென்ற திட்டம் ஊர்வலத்தினருக்கு இருந்திருந்தால், ஊர்வலம் மேலும் அமைதியான முறையில் சென்றிருக்க முடியாது. கூட்டத்தினர் கோபாவேசப்பட் டிருந்தால் போலீஸ்காரர்களை இருந்த இடம் தெரியாமல் செய்திருப்பார்கள். அடிபட்டவர் கள் கூறும் கூற்றிலிருந்தும், கூட்டத்தினர் அமைதியாக நடந்துகொண்ட செயல்களிலிருந் தும் குழப்பத்தை உண்டு பண்ணிக் கூட்டத் தில் தடியடிப் பிரயோகம் செய்யவேண்டும் என்ற உள்நோக்கம் போலீஸ்காரர்களுக்கு இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அலங்கார வண்டி மசூதி வரும்வரை காத்தி ருந்து தடியடிப் பிரயோகம் செய்தால், மசூதி யைத் தாக்க வந்ததால் தடியடிப் பிரயோகம் செய்தோம் என்று கூறித் தடியடிப் பிரயோ கத்துக்குப் பொருத்தமான காரணம் கற்பிக்க லாம் என்று போலீஸார் திட்டமிட்டிருக்க லாம்.

போலீஸ் தரப்பில் இருந்த முஸ்லீம் அதி காரிகளுக்கோ, நேரிடையாகச் செயலில் இறங் காது போலீஸைக்கொண்டு ஊர்வலத்தைத் தடை செய்யவேண்டும் என்று நினைத்த சில முஸ்லீம்களுக்கோ ஊர்வலம் நடந்தது பிடிக் காதிருந்திருக்க வேண்டும். அவர்களுடைய வெறுப்புணர்ச்சியே அன்று நடந்த தடியடிப் பிரயோகத்துக்குக் காரணம் என்று தோன்று கிறது.

புத்தாநத்தம் வழியாக ஊர்வலம் செல்வதை முஸ்லீம்கள் தடுக்கவேண்டுவது அவசியம் இல்லை. ஊர்வலத்தில் உண்டாக்கப்படும் வாத்யங்களின் ஓசை தங்கள் வழிபாட்டுக்கு இடைஞ்சல் என்று அவர்கள் சொல்லுவது சரியான காரணமன்று.

மணப்பாறையிலிருந்து மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் பஸ்களும் லாரிகளும் ஓயாது போய்க்கொண்டே இருக்கின்றன. அவை களாலும், அரசியல் கட்சி ஊர்வலங்களாலும் ஏற்படும் ஓசைகள் தங்கள் வழிபாட்டுக்கு இடைஞ்சலாக இருப்பதாகக் கூறி அவைகளை அவர்கள் நிறுத்திவிட முடியாது.

இந்துக்கள் தங்கள் பாரம்பரியப்படி இறந்த வர்களை எடுத்துக்கொண்டு போகும்பொழுது உண்டாக்கும் பறை ஓசையையும், கல்யாண ஊர்வலத்தில் உண்டாக்கும் கொட்டு மேள ஓசையையும், திருவிழாக்களில் ஊர்வலத்தின் போது உண்டாக்கும் பலவகை வாத்யங்களின் ஓசையையும் முஸ்லீம்கள் தடையாகக் கருது வது பாரதீயக் கலாச்சாரத்தில் தலையிடுவ தாகும். அப்படி அவர்கள் தலையிடுவதை அனுமதிப்பது இந்துக்களிடையே முஸ்லீம்கள் பால் வெறுப்புணர்ச்சியை வளர்க்கும். இந் துக்கள் சொந்தத் தாய்நாட்டில் அவர்களு டைய கலாச்சாரத்தை அனுஷ்டிப்பதற்கு உரிமை இல்லை என்றால் அவர்களுடைய மனம் புண்படாதிருக்குமா? வேறு எந்த நாட்டில் தான் அவர்கள் அதைப் பின்பற்றுவது?

எனவே, இவ்விஷயத்தில் முஸ்லீம்கள் தலை யிடாமல் இருப்பதுதான் நல்லது. முஸ்லீம் கள் இதில் தலையிட்டால் தக்க நடவடிக்கை

அரசாங்கம் எடுக்கும் என்று கூறி, அவர்கள் தலையிடாதிருக்கும்படிச் செய்வதுதான் இந்து மக்களுடைய பிறப்புரிமைக்குப் பாதுகாப்புத் தருவதாகும்.

சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு இந்துக்களின் உரிமையை அரசாங்கம் பறிப்பது பொருந்தாது. தொடர்ந்து பறிக்கப்படுமானல் இந்துக்கள் அதைப் பொறுக்கமாட்டார்கள். இந்துக்கள் வலியச் சண்டைக்குப் போகமாட்டார்கள்; வந்த சண்டையை விடமாட்டார்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு இந்துக்கள் ஒற்றுமையாக நல்ல தலைவர்களின் சொற்படி கேட்டு நடப்பவர்களாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இந்துக்களிடையே அத்தகைய விழிப்புணர்ச்சி வராவிட்டால், மீண்டும் பிற ஆட்சிக்கு அடிமைப்படுகின்ற நிலை உருவாகி விடும்.

இந்துக்கள் கட்டுப்பாடான வாழ்க்கையுடனும், ஒற்றுமையாக வாழவும் கற்றுக்கொள்ள வேண்டும். தடியெடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர் என்ற நிலைமாறி, ஒழுக்கமும், பண்பும் நிறைந்த தலைவர்களின் சொற்படிக் கேட்டு நடந்தால்தான் தங்களுக்கு வரும் எதிர்ப்புச் சக்திகளையெல்லாம் முறியடிக்க முடியும் என்பதை இந்துக்கள் உணரவேண்டும். இந்துக்கள் நல்லவர்களாக இருப்பதற்கு இடையில் வல்லவர்களாகவும் இருக்கவேண்டும். ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் புகட்டுவதுடன் உடல் திட்பத்தையும், மனேதிடத்தையும் வளர்க்கக்கூடிய பயிற்சியையே இன்றைக்கு R. S. S. இயக்கம் மக்களுக்குத் தந்து வருகிறது. இந்த இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று நம் நாட்டின் கலாச்சாரத்தையும், பண்பையும் தமக்கிடையே வளர்த்து வர இந்துக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்கு இடையூருக வரும் சக்திகளையெல்லாம் ஒற்றுமையுடன் எதிர்த்து நின்று முறியடிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்துக்கள் நல்லவர்களும் வல்லவர்களும் ஆவார்கள் என்பதை மற்றவர்கள் அறிந்துகொள்வார்களானல் இந்துக்களிடம் வம்புக்கு வராமல் ஒழுங்காக நடந்துகொள்வார்கள்.

அரசாங்கம் சிறுபான்மையினரிடத்தில் பட்சமாக இருப்பதற்குக் காரணம் அவர்களிடையே ஒற்றுமை இருப்பதேயாகும். அவர்களைப் பகைத்துக்கொண்டால் தேர்தலில் தங்களுக்கு அவர்களுடைய வாக்குக் கிடைக்காது என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருந்து வருகிறது.

இந்து விரோதப் போக்குள்ள கட்சிகளுக்கு இந்துக்களின் வாக்குகள் கிடைக்காது என்பதை அரசியல்வாதிகள் உணரும்படிச் செய்ய வேண்டும்.

பலமே வாழ்வு—பல மின்மையே மரணம் **Strength is life. weakness is death** என்பதை ஒவ்வொரு இந்துவும் உணரவேண்டும். அவசியம் ஏற்படும்போது, இந்துக்கள் சம்ஹார மூர்த்திகளாக மாறிவிடுவார்கள் என்பதை மற்றவர்கள் அறியவேண்டும்.

''சிறுமை கண்டு பொங்குவாய்''; "அச்சம் தவிர்'', ''ஆண்மை தவறேல்'' என்ற பாரதியின் வாக்கை நினைவில் கொள்ளவேண்டும். ''தீமையை எதிர்த்து வெற்றிகொள்'' என்பது கீதோபதேசம்.

இந்துக்கள் அனைவரும் ஜாதி வித்யாசம் இன்றி, உயர் குலம் தாழ்ந்த குலம் என்ற வேற்றுமை இன்றி அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்ச்சியுடன் செயல்பட்டு வரவேண்டும். இப்பொழுது நிகழ்ந்துவரும் நிகழ்ச்சிகள் மூலம் இந்துக்கள் விழிப்படைய வேண்டும். இதனை உணர்ந்து செயல்பட்டு வருவார்களானல் அவர்களை எந்தவிதச் சக்தியும் அசைத்துவிட முடியாது. நம்மை நாம் காப்பாற்றிக்கொள்வோம். ஒற்றுமையும், பலமும் தான் அதற்குத் தேவை.

இந்துக்களின் மத விஷயத்தில் தலையிடும் அரசாங்கத்தை அகற்றவும் இந்துக்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

ஆசிரியர்கள், மாணவர்களின் கிராம சேவை

திருச்சி கைலாசபுரத்தில் உள்ள பாய்லர் ப்ளாண்ட் நடுநிலைப்பள்ளி தபோவனத்தின் கீழ் இயங்கி வருவதாகும். அப்பள்ளி ஜனவரி இருபதாம் தேதி ஸ்ரீ விவேகானந்தர் திதி பூஜையை ஆடம்பரமின்றி செய்து மக்களுக்குச் சேவை செய்வதன்மூலம் கொண்டாடியது. அப்பள்ளியின் குழந்தைகளும், ஆசிரியர்களும் அருகாமையில் உள்ள மாரியம்மன் நகர் என்னும் பகுதிக்குச் சென்று உடல்

உழைப்பு நல்கியும், நாடகம் நடித்தும் காட்டினர். மற்றப்பள்ளிகளுக்கு முன்னுதாரணமாகும் பொருட்டு அவ்விவரங்கள் ஈண்டுத்தரப்படுகின்றன.

அன்று சுட்டெரிக்கும் வெயிலேயும் பொருட்படுத்தாது உடல் உரன்பெற்ற மாணவ, மாணவிகளும், ஆசிரியைகளும் மூன்று கிலோ மீட்டர் தூரம் தெய்வங்களின் நாமங்களைச் சொல்லிக்கொண்டே தங்கள் பள்ளியிலிருந்து மாரியம்மன் நகருக்குப் பாதயாத்திரை சென்றனர். கிராமத்தினர் அன்போடும் ஆர்வத்தோடும் அனைவரையும் வரவேற்றனர். பின்னர் குழந்தைகளும், ஆசிரியைகளும் சேர்ந்து கிராமத்துப்பள்ளியின் சுவர்களுக்கு வெள்ளை அடித்தார்கள். வீதிகளேயும், சுற்றுப்புறங்களையும் சமன்செய்து, குப்பை கூளங்களைக் களைந்து சுத்தப்படுத்தினர்கள். பிறகு தாங்களும் உடல் சுத்தம் செய்துகொண்டு கிராமத்தார் முன்னிலையில் ஐக்கிய வணக்கம் செய்தார்கள். நாமஜபம், மௌனம், இசைவடிவில் இறைவனைத்தொழுதல், நாமார்ச்சனை, தீப வணக்கம் ஆகிய பல்வகை வழிபாட்டு முறைகளையும் கிராமத்து மக்கள் கூர்ந்து கவனித்துத் தெரிந்து கொண்டார்கள்.

அருளுரையில் கல்விக்கூடங்கள் பொது மக்களிடத்தே வைத்திருக்க வேண்டிய இணக்கம், மக்கள் தொடர்பினல் பெறுகின்ற அனுபவக்கல்வி, பொது சேவையினல் உணரப்பெறும் உழைப்பின் உயர்வு ஆகிய பண்புகள் வலியுறுத்தப்பெற்றன. பொதுமக்கள் சுற்றுச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும், அதனைச் செய்யவேண்டிய வழிமுறைகளையும் நேரில் தெரிந்து கொண்டனர். நரனுக்குச் செய்யும் சேவை நாராயணனுக்கே செய்வதாகும். இத்தகைய சேவை உடல், உள்ளம் இரண்டிலுமுள்ள அழுக்குகளைப் போக்கி மனப்பான்மை, வாழ்க்கைத் தரம் இரண்டும் உயர்வதற்கு வழி செய்யும். தவிர, ஒவ்வொரு வீட்டினரும் தமது இல்லத்தில் இறைவனைத் தொழுவதற்கென்று ஒரு தனியிடம் ஒதுக்குதலின் அவசியம் குறித்தும் எடுத்துரைக்கப்பெற்றது.

கலை நிகழ்ச்சிகளில் பள்ளிக் குழந்தைகளின் ஆடல், பாடல், அருள்வாக்குகள் எடுத்து உரைத்தல் ஆகியன நிகழ்ந்தன. பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் என்னும் நாடகம் நன்கு நடித்துக் காட்டப்பெற்றது. ஊரார் எல்லா நிகழ்ச்சிகளையும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தனர். நைவேத்தியமும், ஆரதியும் முடிந்தபின் மகேசுவர பூஜையாகிய சமாராதனையும் நிகழ்வதாயிற்று. உணவின் மூலமாகத்தான் நம் இயல்புகள் உருவாகின்றன. உணவு தயாரித்தல், படைத்தல், உண்ணல் ஆகிய யாவற்றிலும் ஓர் ஒழுங்குமுறையும், தூய்மையும் இருப்பது அவசியம் ஆகும். சமாராதனை சிறப்பாக நடந்தது. பொருளினல் மனிதனை உயர்த்த முடியாது; பண்பாட்டினல் தான் மனிதனை உயர்த்த முடியும். ஆகவே இத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்து சமுதாய ஒழுங்குப்பாடு மேன்மேலும் உயர்வதற்கு அனைத்துப் பள்ளிகளும் செயல் படுதல் வேண்டும்.

செய்திகள்

நிகழ்பவை :

பிப்ரவரி மாதம் 29-ஆம் தேதி புதன் கிழமை மஹாசிவராத்திரியாகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்துநான்கு மணிநேரம் அகண்டநாம பஜனை செய்வார்கள்.

மார்ச்சு மாதம் 4ஆம் தேதி ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திதிபூஜை. அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் இருபத்து நான்குமணி நேரம் அகண்டநாம பஜனையும், பகல் 11 மணியிலிருந்து 12 மணிவரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

11-3-84 அன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜயந்தி விழா திருப்பராய்த்துறை தபோவனத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும். அன்று காலை 6 மணிக்கு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்தைத் திருப்பராய்த்துறை சிவாலயத்திற்கு நாம பஜனையுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று வருவார்கள். அன்று காலை 9 மணிக்குக் குருகுல மாணவர்களின் பெற்றோர்கூட்டம் பள்ளியில் நடைபெறும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம் பிரசார விலை ரூ. 23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 14-ம் பதிப்பு ,, ... 18-00
மஹாபாரதம் ,, ... 8-00
இராமாயணம் ,, ... 5-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ... 6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ... 5-50
தினசரி தியானம் ,, ... 4-50
ராஜயோக விளக்கம் ... 12-00
கர்மயோக விளக்கம் ... 10-00
பக்தியோக விளக்கம் ... 9-00
ஞானயோக விளக்கம் .. 8-00
பரமஹம்சரின் பெருமை ... 6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ... 6-00
கடவுளின் வடிவங்கள் ... 6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1 ... 5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2 ... 5-50
விவேகானந்த விவரணம் ... 4-00
சகோதரி நிவேதிதை ... 3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ... 3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் ... 3-00
அனுஷ்டான வேதாந்தம் ... 3-00
எதிர்கால இந்தியா ... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ... 3-00
பஜனைப்பாடல்கள் ... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ... 2-50
தாயுமானவர் இயற்றிய
கருணாகரக் கடவுள் விரிவுரை ... 3-50
பரிபூரணானந்தம் ஷை ... 3-00
சின்மயானந்த குரு ஷை ... 3-00
ஆனந்தமானபரம் ஷை ... 3-00
சுகவாரி ஷை ... 3-00
மௌனகுரு வணக்கம் ஷை ... 3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை ... 2-50
மலைவளர் காதலி ஷை ... 1-50
பரசிவ வணக்கம் ஷை ... 1-00
கண்ணன் என்னும் கடவுள் ... 2-50
அறம் வளர்த்த நம்பி (நாடகம்) ... 2-50
சந்நியாசி ... 2-50
ஹரிச்சந்திரன் ஷை ... 2-00
தவப்புதல்வர்கள் ... 2-00
பாதுகாபட்டாபிஷேகம் ஷை ... 1-75
விரதவீரர் பீஷ்மர் ஷை ... 2-50
விபீஷணன் சரணாகதி ஷை ... 1-50
பரமஹம்சர் பாமாலை ... 1-50
காயத்ரீ ... 1-50
நன்மக்களைப் பெறுதல் ... 1-50
மாணிக்கன் ... 1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ... 1-25
சைவன் யார்? ..., 1-25
இறைவணக்கம் ... 1-00
குழந்தைகளின் களிக்கூடம் ... 1-00
இராவண தத்துவம் ... 1-00

வாலி மோட்சம் (நாடகம்) ... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ... 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ... 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ... 1-00
பிரஹ்லாதன் (நாடகம்) ... 1-00
தபோபலன் (நாடகம்) ... 1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம் ... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும் ... 1-00
நோய்க்கு இடம் கொடேல் ... 1-00
*ஆத்ம சக்தி ... 1-00
*சக்தி தத்துவம் ... 0-90
*சூரியநாராயணன் ... 0-75
தெய்வீக மகிமைகள் ... 0-75
*ஆலய வழிபாடு ... 1-25
*சிவதத்துவம் ... 0-70
*மனிதனது நிஜசொருபம் ... 0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ... 0-60
*கணபதி ... 0-60
*முருகக்கடவுள் ... 0-50
விஷ்ணு தத்துவம் ... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது? 0-50
வர்ணாச்ரம தர்மம் ... 0-30
அருள் விருந்து (பௌண்ட் செட்) ...10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ... 0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை ... 0-30
கந்தர் அநுபூதி ... 0 25
The Bhagavad Gita (11th Imp.) ...24-00
Sri Lalithambiha Sahasranama Stotram 15-00
The Indian National Education ...10-00
Tirukkural (with plastic cover) ... 8-00
Ramakrishna lives Vedanda ... 8-00
Mahaveer Sri Hanuman ... 7-75
The Bhagavad Gita (Small Size) ... 6-00
Man Making Message ... 7-00
Ramayana (with plastic cover) ... 7-00
Mahabharata ,, ... 6-00
Daily Divine Digest (DELUXE) ... 6-00
Daily Divine Digest (Ordinary) ... 4-00
Sri Krishna-The Manifest Divinity ,, ... 6-00
Facets of Brahman or The Hindu Gods ... 5-00
Sri Vishnu Sahasranama Stotram ... 4-00
Siva Sahasranama Stotram ... 3-50
Bheeshma The Superman ... 3-50
*Introducing the Gita ... 2-00
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
Reminiscences of Master Mahashaya ... 1-50
The Garland of Paraaparam ... 1-50
*Key to Higher Life ... 1-25
*The student ... 1-25
The Teacher ... 1-00
The School ... 1-00

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சிராப்பள்ளி Dt.

அன்புடையீர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா 1984 மார்ச் மீ 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிமுதல் 8-30 மணிவரை இங்குக் கொண்டாடப்பெறும். நீங்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்,
சித்பவானந்த

நிகழ்ச்சி முறை

11—3—84 ஞாயிறு மாலை

5-30 மணி முதல் 7-00 மணிவரை
குருகுல மாணக்கர் ஆடல், பாடல், பேச்சு முதலியன
7-00 மணிமுதல் 8-30 மணிவரை குருகுல மாணக்கர்களால்
தானவீரன் கர்ணன் என்னும் நாடகம்
தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. சிற்றுண்டிச்சாலை உண்டு.

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் அந்தர்யோகம்

1984 ௵ மார்ச் மாதம் 13, 14, 15 தேதிகளாகிய மூன்று தினங்களில் கீழ்க் கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் மார்ச் மாதம் 12 ஆம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ 8-00 வீதம் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	மணிமுதல்	மணிவரை	மாலை	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	4-30		போஜனம், ஓய்வு	12-00	2-30
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-00	5-30	மாலை உபந்யாசம்	2-30	3-30
காவேரி ஸ்நானம் முதலியன	5-30	6-30	தனியாக வாசித்தல்	3-30	4-30
காலை தியானம்	6-30	7-00	பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-00
சிற்றுண்டி	7-00		நாம ஜபம்	6-00	6-15
காலை உபந்யாசம்	8-30	9-30	ஆரத்திகம், தியானம்	6-15	7-00
மௌனம்	9-30	10-30	இரவு போஜனம்	7-00	
பஜனை	10-30	11-30	ஸத் ஸம்பாஷணை	8-30	9-30
அர்ச்சனை, பூஜை	11-30	12-00	நித்திரை	10-00	

உபந்யாசங்கள்:— யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத் ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.